# உதயன்

சுடர் 30 | கதிர் 122 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 14, சனிக்கிழமை 28.03.2015


பொது நூலகம்
கோண்டாவில்

வானிலை

கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான காலநிலை

**சச்சினை கடத்தியது யார்?**

விவரம் 3 ஆம் பக்கத்தில்

# சு.கட்சி உடையும்?

## மஹிந்த ஆதரவுக் கூட்டத்தில் முக்கிய புள்ளிகள் நாடு திரும்பியதும் மைத்திரி தீர்க்கமான முடிவு

கொழும்பு, மார்ச் 28

நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்தவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்குமாறு வலியுறுத்தி இரத்தினபுரியில் நடத்தப்பட்ட கூட்டத்தில், சுதந்திரக் கட்சி விதித்திருந்த தடையையும் மீறி அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 28 பேர் பங்கேற்றமையால் கட்சியின் உயர்பீடம் கடும் அதிருப்தியில் இருக்கிறது. அத்துடன், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குரிய பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு சுதந்திரக் கட்சியி லுள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்தவின் பக்கம் இருப்பதால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் சுதந்திரக் கட்சி இரு அணிகளாக பிரியக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தநிலையில், இவ்வாறான நிலைமை உருவாகாமல் தடுப்பதற்குரிய நகர்வுகளும் அரசியல் களத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அந்த முயற்சி கைகூடுமா என்பது கேள்விக்குறியே.

பக்.24

## கஞ்சா கடத்தியவரை சுட்டுப் பிடித்தது பொலிஸ்

தென்மராட்சி, மார்ச் 28

மட்டுவில் சரசாலைப் பகுதியில் இளைஞர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்துள்ளனர். குறித்த இளைஞர் கஞ்சா விநியோகத்தில் ஈடுபட்டதை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன்னியில் இருந்து கஞ்சா கொண்டுவரப்படுகின்றது என்று கிடைத்த தகவலை அடுத்து வவுனியா பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் குறித்த இளைஞரை பின்தொடர்ந்துள்ளனர்.

கனகன்புளியடிச் சந்தியில் குறித்த இளைஞர் பொலிஸாரை இனங்கண்டு தப்பியோட முற்பட்டபோது அவரது காலில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். அவரிடம் இருந்து சுமார் 2 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பக்.24

## இந்தியக் கப்பல்கள் திருமலைக் கடலில்

கொழும்பு, மார்ச் 28

இந்தியக்கடற்படைக்குரிய பயிற்சி வழங்கும் கப்பல்களின் ஒரு தொகுதி திருகோணமலைக்கு வருகை தந்துள்ளது.

இந்தியக் கடற்படையின் ரீ.ஐ.ஆர்., கேசரி மற்றும் இந்தியக் கடலோர காவற்படையணிக்குரிய வருணா, கடற்பயணத்துக்கான பயிற்சிக் கப்பலான சுதர்சினி ஆகிய நான்கு கப்பல்களே இன்று தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை திருகோணமலையில் தரித்து நின்று பயிற்சிகளை வழங்கவுள்ளன.

இந்தக் கப்பல்கள் திருகோணமலையில் தரித்து நிற்கும் போது தொழில்சார்ந்த மற்றும் ஏனைய பயிற்சித் தொடர்களிலும் கலாசாரம், விளையாட்டு ஆகியவற்றையும் இந்தக் கப்பல்களின் பணியாளர்கள் மற்றும் இலங்கை கடற்படையினர் ஆகியவர்களுக்கிடையில் ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதிலும் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்.24

**மோடி கருத்து எடுபடுமா?**

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் அவலங்களை எதிர்கொண்டுள்ள நிலையில்.....

பக்கம் 17

## முன்னாள் போராளிகள், பெண்கள் பிரதமரின் கூட்டம் குறித்து ஏமாற்றம்

### தமது பிரச்சினைகளை வெளிப்படுத்த வாய்ப்புத் தரவில்லை என்று கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைத்துவிட்டுத் தமது குறைகள் எவற்றையும் கேட்கவில்லைஎன்றுகுடும்பங்களைத் தலைமை தாங்கும்பெண்களும்முன்னாள் போராளிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது பிரச்சினைகளைக் கூறி அவற்றுக்கு உரிய தீர்வைப் பெறுவதற்காகத் தனியாகப் பிரதமரைச் சந்தித்துப் பேசத் தமக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணம் வந்தார். யாழ். மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமது பிரச்சினைகளைக் கூறுவதற்காக

பக்.24

## கழிவு ஒயில் மாசு குறித்து ஆராய உயர் மட்டக் குழு

### முதலமைச்சர் விக்கியையும் உள்ளடக்கி நியமிக்க பிரதமர் உறுதியளிப்பு



கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு.

யாழ்ப்பாணம், மார்ச் 28

சுன்னாகம் பகுதி நிலத்தடி நீர் கழிவு எண்ணெயினால் மாசடைந்தமை குறித்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக வடக்கு முதலமைச்சரையும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழு ஒன்றை நியமிக்க உள்ளார் என இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணத்தில் உறுதியளித்தார்.

மூன்று நாள் பயணமாக வடக்குக்கு வந்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பலாலி விமானநிலையத்தில் நேற்றுக் காலை அவரது கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் பிரதி அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரனால் செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது.

யாழ். நகரில் அமைந்துள்ள நாக விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்திய ரணில், கர்ப்பிணித் தாய்மாருக்கு மாதர்ந்தம் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான போசணைப் பொதி வழங்கும் சேவையை நகரில் உள்ள வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார். அமைச்சர் ரோசி

பக்.21

## 6 ஆயிரம் ஏக்கர் காணி இராணுவத் தேவைக்கு

### காணி ஆணையாளரின் நடவடிக்கையை மீள்பரிசீலிக்குமாறு கோரிக்கை

வவுனியா, மார்ச் 28

செட்டிகுளம் பிரதேசத்தில் நலன்புரி நிலையம் இயங்கிய 6 ஆயிரத்து 348 ஏக்கர் காணியை இராணுவத்தினரிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை காணி ஆணையாளர் எடுத்துள்ளார்.

பக்.24

## கடும் பாதுகாப்புடன் உலா வந்த பிரதமர்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கடந்த காலங்களில் ஜனாதிபதிகள் – பிரதமர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் போது வழங்கப்பட்ட பாதுகாப்புக்களைக் காட்டிலும், பன்மடங்கு பலப்படுத்தப்பட்ட பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்தில் நேற்று உலா வந்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அத்துடன் பிரதமர் பங்கேற்ற நிகழ்வுகள் அனைத்திலும், கடுமையான சோதனைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னரே மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவர் பயணம் செய்யும் வீதிகள், அவர் செல்லும் இடங்கள் எல்லாவற்றிலும் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

பக்.24

## இரவோடிரவாக மறைந்த மஹிந்த

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகே இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் உருவப்படத்துடனான பெரும் 'கட்–அவுட்' நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள் ளது.

கடந்த நவம்பர் மாதம் வீரசிங்கம் மண்டபம் புனரமைக்கப்பட்டு முன்னாள் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது. அதன் போது ஜனாதிபதி மஹிந்தவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட பெரியளவிலான

பக்.24

**தேர்தல் தினத்தன்று நடந்தது என்ன?**

**மனம் திறக்கிறார் மைத்திரி**

*அன்று இரவு பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த தொலைபேசி அழைப்புகளில் சிறிசேன எங்கிருக்கிறார் என்று வினவப்பட்டது.....*

பக்கம் 17

## பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் குழு

### ஐ.நா. பரிந்துரைக்கமைய அமைக்கப்படும் என்று பிரதமர் ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைக்கு அமைவாக, வடக்கு – கிழக்கு பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான பிராந்திய காரியாலயம் கிளிநொச்சியில் திறக்கப்படும் என்று பிரதமர் ரணில்

பக்.21

## நிகழ்வுகள் ஆரம்பித்த பின்னரே மாகாண சபையினருக்கு அழைப்பு

### தொலைபேசியூடாக மாவட்ட செயலகத்தினர் விடுத்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட நிகழ்வில் பங்கெடுக்க வருமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ்

பக்.24



உத்தியோகபூர்வ பயணமாக சீனா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் அந்த நாட்டு ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் இறுதியில் இரு நாடுகளுக்குமிடையேயான 4 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பண்டைக்காலத் தொடர்புகளை இன்னும் வலுவாக்கும் வகையில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சுகாதாரம், அறிவியல், கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான நான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. (ற)


# இலங்கைக்கான தூதுவராக கொசாப் பெயர் பரிந்துரை

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவால்

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் நியமனத்துக்கு அதுல் கொசாப்பின் பெயரை, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பரிந்துரை செய்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலராக உள்ள நிஷா பிஸ்வாலுக்கு அடுத்த நிலையில், அதுல் கொசாப் இதுவரையில் பணியாற்றி வந்தார். இந்த நிலையிலேயே, அமெரிக்க ஜனாதிபதி அவரது பெயரை, இலங்கைக்கான தூதுவராகப் பரிந்துரைத்துள்ளார். அமெரிக்க செனட் அங்கீகாரம் கிடைத்த பின்னர் இவரது நியமனம் உறுதிப்படுத்தப்படும்.



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய மிச்சேல் ஜே சிசன் ஐ.நாவுக்கான அமெரிக்காவின் துணைத் தூதுவராக நியமிக்கப்பட்ட பின்னர், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் பதவி வெற்றிடமாக உள்ளது. இந்தப் பதவிக்கே, அதுல் கொசாப் நியமிக்கப்படவுள்ளார். (ற–5,10)

# மும்மொழிக் கொள்கையை மைத்திரி அரசும் மறந்தது

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

மஹிந்த அரசின் காலத்திலும் மும்மொழிக் கொள்கை உரியமுறையில்நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதே போன்று, தற்போதைய அரசும் மும்மொழிக் கொள்கையை புறந்தள்ளி சிங்கள மொழிக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கான, அரச நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் சுற்றறிக்கைகள் கூட தனிச் சிங்கள மொழி யில் வழங்கப்பட்டுள்ளது. அதனுடன் இணைத்துள்ள விண்ணப்பப் படிவமும் சிங்கள மொழியிலேயே அச்சிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு, மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் எனத் தெரிவித்து, கடந்த புதன்கிழமை அலரி மாளிகைக்கு அழைக் கப்பட்டிருந்தனர். அங்கு வைத்து மோட்டார் சைக்கிள் வழங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, மோட்டார் சைக்கிள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவமும், அதற்குரிய சுற்றறிக்கையுமே வழங்கப்பட்டது.

நிகழ்வு முழுவதும் தனிச் சிங்கள மொழியிலேயே இடம்பெற்றிருந்தது. இவ்வாறானதொரு நிலையில், மோட்டார் சைக்கிள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவமும், அதற்குரிய சுற்றறிக்கையும் கூட சிங்கள மொழியிலேயே வழங்கப்பட்டுள்ளது.

மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில், மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதாக பெயரளவில் கூறிக் கொண்டு ஏமாற்றியது போல், புதிய அரசும் செயற்படுவதாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் கவலை தெரிவிக்கின்றனர். தனிச் சிங்கள மொழியிலான சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளமையால், அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடியாமல் இருப்பதாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். (ற–5)

# மஹிந்த கூட்டத்தில் 29 ஐ.ம.சு.க. உறுப்பினர்கள்

கொழும்பு, மார்ச் 28

மஹிந்தவைப் பிரதமராக்குமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிக் குழுவால் நேற்றுமுன்தினம் மாலை இரத்தினபுரியில் நடைபெற்ற மூன்றாவது கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 29 முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். இந்தக் கூட்டத்தை இணையத் தளத்தில் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் அவை தடைப்படுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# இலங்கையர் இருவர் தமிழகத்தில் கைது

சென்னை, மார்ச் 28

தமிழகத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களை கடத்தும் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் இலங்கத் தமிழர்கள் மூவர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் பல்லாவரம் அருகில் உள்ள பொழிச்சலூர் என்ற இடத்தில் வீடு ஒன்றில் இவர்கள் பதுங்கியிருந்த சமயம் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 29 வயதான துஸ்யந்தன், 30 வயதான லிங்கேஸ்வரன் மற்றும் 28 வயதான விஜயராஜ் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் பணம் செலுத்தியதாகக் கூறி இலங்கை அகதி ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளில் துஸ்யந்தனும், லிங்கேஸ்வரனும் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக கடந்த வருடம் இந்தியாவுக்கு சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. (ற)

# வெங்காய வெடி வெடித்ததில் சிறுவன் காயம்

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் நேற்றுமுன்தினம் வெங்காய வெடி வெடித்ததில் 4 வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சிறுவனின் வலது கையின் நான்கு விரல்களும் சிதைவடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வயல் நிலத்திலிருந்த வெங்காய வெடியை வீட்டுக்கு எடுத்து வந்து விளையாடிக்கொண்டிருந்த போது, அது வெடித்ததில் சிறுவன் படுகாயமடைந்தான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் பன்றி பிடிப்பதற்காக வெங்காய வெடிகள் வைக்கப்படுகின்றன. வெங்காய வெடி தடை செய்யப்பட்ட வெடி என்பதால், பாவனை செய்பவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# போதையில் சாரத்தியம்; நான்காக உடைந்தது கால்

யாழ்ப்பாணம், மார்ச் 28

போதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார். அதில் அவரது ஒரு கால் எலும்பு 4 துண்டுகளாக முறிந்துள்ளது. அவருடன் பயணித்தவரின் காலும் இரண்டாக முறிந்தது.

புத்தூர் நவக்கிரியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. சுமார் 30 வயதுடைய இருவரும் மது போதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அப்போது எதிரே வந்துகொண்டிருந்த லாண்ட்மாஸ்ரருடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கு வெளிப்புறத்தில் உரசல் காயங்களே ஏற்பட்டிருந்தன. ஆனால் அவர்களால் எழுந்து நடக்க முடியவில்லை. அவ்வழியே சென்றவர்கள் அவர்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். அப்பொழுதும் அவர்கள் நிறை போதையிலேயே காணப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் கால்களை எக்ஸ்றே படம்பிடித்துப் பார்த்த போதே கால் எலும்புகள் துண்டுகளாக இருக்கின்றமை தெரியவந்தது. அதில் ஒருவரது காலின் எலும்பு 4 துண்டுகளாக உடைந்துவிட்டது. அவருடன் பயணித்தவரது காலினது எலும்பு 2 துண்டுகளாக உடைந்துவிட்டது.

அவர்களுக்கு ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதாக வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

குடாநாட்டில் விபத்துக்கள் அதிகரித்த நிலையிலேயே உள்ளன. மதுபோதையில் பயணிப்பது, வேகக்கட்டுப்பாடு இல்லாது பயணிப்பது, அதனால் தாம் விபத்துக்குள்ளாவதோடு தமது வாகனங்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதோடு எதிரே வருபவர்களையும் மோதிக் காயப்படுத்துவது, உயிரிழப்பை ஏற்படுத்துவது, அவர்களது வாகனங்களுக்கும் சேதம் ஏற்படுத்துவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. (ற–4)

# மாறும் சமுதாயத்துக்கு ஏற்ப மாறிக்கொள்ள வேண்டும்

## வடமாகாண அஞ்சல் திணைக்கள பிரதித்தபால் மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 28

தபால்களை மட்டும் நம்பி அஞ்சல் திணைக்களம் தொடர்ந்தும் செயற்பட முடியாது ஏனெனில் தொழில்நுட்ப சாதனங்களின் அதீத வளர்ச்சியால் இன்று கடிதங்கள் என்பன காணாமற்போய்க்கொண்டிருக்கின்றன. இவ்வாறான ஒரு நிலையில் மாறும் சமுதாயத்துக்கு ஏற்ப நாமும் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். வேறு நிறுவனங்களுடன் இணைந்து எமது வியாபாரத்தை நாம் விஸ்தரித்தால் மட்டுமே தொடர்ந்து தபால்திணைக்களங்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். – இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண அஞ்சல் திணைக்கள பிரதித்தபால் மா அதிபர் என்.ரட்ணசிங்கம்.

யாழ்ப்பாணம் பிரதான தபால் திணைக்களம் நிறுவப்பட்டு 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சேவை விஸ்தரிப்பு நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம்பிரதானதபால்திணைக்களத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஒரு பிரதேசத்தில் மக்கள் குடியேறியதும் அங்கே முதலாவதாக தனது சேவையை வழங்கும் ஸ்தாபனமாக தபால் திணைக்களமே உள்ளது. ஏனைய நிறுவனங்கள் எல்லாம் மக்கள் குடியிருப்பு நன்கு வளர்ச்சியடைந்த பின்னர் தமது இலாபத்தைப் பெருக்கிக் கொள்ள வரிசையில் நிற்கும் நிறுவனங்களாகவே உள்ளன."– என்று அவர் குறிப்பிட்டார்.

"உன்னத சேவையை செய்துவந்த தபால் திணைக்களங்கள் தொழில்நுட்பசாதனங்களால் வளர்ச்சியடைந்த இந்த உலகில் தொடர்ந்து நிலைக்க வேண்டுமாயின், விரும்பியோ –விரும்பாமலோ காலத்திற்கு ஏற்ப மாற்றம்பெற்று இன்று வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. "– என்றும் அவர் தெரிவித்தார். (ற–ரி)

COMPUTING | ☎ 0777 692318
CAMPUS
JAFFNA



13 லட்சங்கள் WOW!
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

# கிரிக்கெட் கொண்டாட்டம்

2015 | மார்ச் 28 | சனிக்கிழமை

## சச்சினைக் கடத்தியது யார் தீவிர விசாரணை ஆரம்பம்



இந்திய துடுப்பாட்ட ஜாம்பவான் சச்சினின் நூறாவது சதத்தின் நினைவாக சிட்னி அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டிருந்த சச்சினின் மெழுகுச் சிலையை பாங்கொக் கொண்டு சென்ற விடயம் இப்போது தெரியவந்துள்ளது.

கிரிக்கட்டின் ஜாம்பவான், கிரிக்கட்டின் கடவுள் என்று அனைவராலும் அன்பாக அழைக்கட்ட இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் சதத்தில் சதம் அடித்து சாதித்தவர். இவரது சாதனையை கௌரவிக்கும் வகையில், சச்சினின் பிறந்த நாளையொட்டி கடந்த 2013ஆம் ஆண்டு ஏப்பிரல் 20ஆம் திகதி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் மெழுகுச் சிலை

பக்கம் 04

## ரசிகரல்ல வெறியர்



நடப்பு உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற வேண்டும் என்று ரசிகர் ஒருவர் தனது நாக்கை அறுத்து கோவில் முன்பாக வைத்து வேண்டியுள்ளார்.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சுதாகர். கட்டிட தொழிலாளியான சுதாகர் இந்திய அணியின் தீவிர ரசிகர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையேயான அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற வேண்டும் என்று மன்றாடுவதற்காக கோவிலுக்குச் சென்ற

பக்கம் 04

## யாரின் தவறு?

உலகக்கிண்ண தொடரின் அரையிறு ஆட்டத்தில் இந்தியா தோல்வியடைந்ததால், அதிர்ச்சி அடைந்த உத்திர பிரதேச அரச ஊழியர் ஒருவர் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் இந்திய அணி 95 ஓட்டங்

பக்கம் 04

## சூதாட்டத்தில் பறிபோன உயிர்கள்

மகனின் அளவு கடந்த கிரிக்கட் சூதாட்டத்தினால், பெற்றோர்கள் மருந்து குடித்து இறந்த துயரச் சம்பவம் இந்தியாவின் நடைபெற்றுள்ளது.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஹரி பாபு நாகேந்திரம் என்ற தம்பதிகளின் மகனான ஸ்ரீ ஹரிக்கு, கிரிக்கட் சூதாட்டத்தில் ஈடுபட்டு பல லட்சம் அளவுக்கு கடன் ஏற்பட்டது. ஏற்கனவே கடன்காரர்களால் அவமானப்பட்டு வந்த ஸ்ரீ ஹரி, நேற்று நடந்த அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா ஜெயிக்கும் என்று கூறி பல லட்சம் அளவுக்கு கடன் வாங்கி சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். நேற்றைய ஆட்டத்தில் இந்தியா தோல்வி

பக்கம் 04

# டோனி புகழ்பாடிய கிளார்க்




நடப்பு உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது காலிறுதியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. இதனால் நடப்புச் சம்பியன் அந்தஸ்தையும் இழந்தது. ஆட்டம் முடிந்த பின்னர் டோனியிடம் அடுத்த உலகக்கிண்ண தொடரில் விளையாடுவீர்களா? என்று கேட்கப்பட்ட அந்தக் கேள்விக்கு டோனி மழுப்பல் பதில் அளித்தாலும் ஆஸ்திரேலியா அணித்தலைவர் மைக்கல் கிளார்க் டோனி நிச்சயம் விளையாடுவார் என்று டோனியிடம் கேட்ட கேள்விக்கு தானாக முன்வந்து பதிலளித்துள்ளார்.

அடுத்த உலகக்கிண்ண தொடரில் விளையாடுவீர்களா? என்று டோனியிடம் கேட்ட பொழுது டோனி எனக்கு இப்பொழுது 33வயதுதான் ஆகிறது. என்னிடம் திறமை உள்ளது. இருந்தாலும் உடல்நலம் ஒத்துழைத்தால் நிச்சயம் அடுத்த உலகக்கிண்ண தொடரில் ஆடுவேன். அடுத்த ஆண்டு ரி–20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்குப்பின்னர் எனது முடிவைப்பற்றி தீர்மானிப்பேன் என்றார். டோனி பதிலளித்து முடிந்ததும் கிளார்க் டோனியை கட்டித்தழுவினார். இருவரும் சிறிதுநேரம் கட்டியணைத்தவாறே ஏதேதோ பேசினார்கள். பின்னர் கிளார்க் 'டோனியிடம் 2019ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண தொடரில் விளையாடுவீர்களா என்று கேட்டீர்கள். நான் சொல்கிறேன் அவர் நிச்சயம் விளையாடுவார். டோனி திறமையான

பக்கம் 0

## அரையிறுதி தொடர்பாக ஆஸ்திரேலியா பத்திரிகைகள் பார்வை

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது காலிறுதியில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை செய்தன. இந்த ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் இலகுவாகத்தோற்றதுடன் தொடரை விட்டும் வெளியேறியது. போராட்ட குணத்தை இயல்பாகவே கொண்ட இந்திய அணி இலகுவாகத் தோற்றமைக்கு ஆஸ்திரேலிய ஊடகங்கள் பலவும் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளன.

இந்த அரையிறுதி ஆட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள 'டெய்லி ரெலிகிராப்' என்ற நாளிதழ் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு டோனி மற்றும் விராட் ஹோக்லியின் ஆட்டத்தையே நம்பி இருந்தது. ஆனால் இருவரும் ஏமாற்றி விட்டனர். மேலும் டோனி துடுப்பாட்டத்தின் போது கடுமையாக போராடுவார் என எதிர்பாக்கப்பட்ட நிலையில் அவர் எளிதாக விட்டு கொடுத்துவிட்டார் என அந்நாளிதழ் கூறியுள்ளது. இதைவிட 'ரன் அவுட்டின்' போது டோனி டைவ் அடிக்கவோ அல்லது துடுப்பை வைத்து சரித்து கொண்டு உள்ளே வரவோ பெரிய அளவில் முயற்சிக்கவில்லை. அவர் கடுமையாக முயற்சித்திருந்தால் நிச்சயமாக 'ரன் அவுட்டை' தவிர்த்திருக்கலாம் என இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கெவின் பீற்றர்சன் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ளது டெய்லி டெலிகிராப்.

மற்றொரு முக்கிய நாளிதழான 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்' மக்ஸ்வெல்லின் அற்புதமான எறியால் டோனி ஆட்டமிழந்தது வரையில் ஆஸ்திரேலியா பதற்றமாகவே இருந்தது. ஆனால் அவர் ஏன் ஆரம்பத்தில் இருந்தே அதிரடியாக விளையாடாமல், வினோதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்று தெரியவில்லை' என்று மோர்னிங் ஹெரால்ட் கேள்வி எழுப்பியுள்ளது. (ரி)

## நீங்களே சொல்லுங்கள்




நடப்பு உலகக்கிண்ண தொடரில் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்து வெளியேறியது. தோல்வியின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார் இந்திய அணித்தலைவர் டோனி. அப்போழுது நீங்கள் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போகிறீர்களா என பத்திரிகையாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு சற்றும்சிந்திக்காமல்சிரித்துக்கொண்டே பதிலளித்த டோனி, 'ஓய்வு தொடர்பாக நீங்கள் ஆராய்ச்சி செய்து என்ன எழுதுகிறீர்களோ, அதற்கு எதிர்மாறான முடிவை எடுப்பதுதான் சரியாக இருக்கும். எனவே நீங்கள் முதலில் ஆராய்ச்சி செய்யுங்கள்' என்றார்.

பயிற்சியாளர் டங்கன் பிளெட்சரின் ஒப்பந்தம், இந்த உலகக்கிண்ணத்துடன் முடிவுக்கு வந்துள்ளது. அதனால் அவர் பயிற்சியாளராக நீடிப்பாரா, இல்லையா என்பது குறித்து டோனியிடம் கேட்டபோது, 'அது பி.சி.சி.ஐக்கும் (இந்தியக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை) பிளெட்சருக்கும் இடையிலானது. என்ன நடக்கும் என்று தெரியாது. பரிந்துரை செய்ய மட்டுமே என்னால் முடியும். எனவே பிளெட்சரை மாற்றும் எண்ணம் இந்தியக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபைக்கு இருந்தால் பொருத்தமானவரை பரிந்துரை செய்வேன்' என்றார். (ரி)

## இந்திய அணிக்கு மோடியின் ஆறுதல்



நடப்பு உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வி கண்டு உலகக்கிண்ண தொடரை விட்டு வெளியேறியுள்ள நிலையில், இந்திய அணியினருக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறியுள்ளார் இந்தியாவின் பிரதமர் மோடி.

இது தொடர்பாக மோடி தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவுசெய்திருப்பதாவது' வெற்றியும் தோல்வியும் விளையாட்டின் ஒரு அங்கம் தான். இந்த தொடர் முழுவதும் இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அவர்களால் நாம் பெருமை அடைந்துள்ளோம்.

பக்கம் 04

03 ஆம் பக்கத் தொடர்ச்சிகள்.......

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி போராடித் தோற்ற தென்னாபிரிக்க வீரர்களுக்கு அந்த நாட்டு ரசிகர்களால் விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டுள்ளது.





# ஐ.சி.சி. மீது டோனி பாய்ச்சல்

ஒருநாள் ஆட்டங்களில் 4 களத்தடுப்பாளர்களே வட்டத்துக்கு வெளியே நிறுத்தப்பட வேண்டும் என்ற விதிமுறையை டோனி கடுமையாகச் சாடியுள்ளார். சுழற்பந்து வீச்சாளர்கள், பகுதி நேர பந்து வீச்சாளர்கள் ஆகியோரை பயன்படுத்த முடியாத இந்த விதிமுறையை டோனி நீண்ட காலமாகவே சாடி வருகிறார், தோல்வி ஏற்பட்டதனால் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக டோனி தெரிவித்ததாவது 'இது என்னுடைய சொந்தக் கருத்துத்தான். இந்த விதிமுறையை அவர்கள் மாற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு இரட்டைச் சதங்கள் அடிக்கப்பட்டுவிட்டது. கூடுதல் பீல்டர் ஒருவர் வட்டத்துக்குள் இருப்பதன் மூலம் நிறைய 'ஓட்ட மற்ற' பந்துகள் வீசப்படுகிறது என்று பலரும் கூறுகின்றனர். அது உண்மையெனில் 11 களத்தடுப்பாளர்களையும் வட்டத்துக்குள் நிறுத்தி ஓட்டமற்ற பந்துகளை அதிகரிக்கலாமே. ஒருநாள் கிரிக்கெட 'ரி-20' கிரிக்கெட் போல் இருக்கக் கூடாது. இதிலும் வெறும் பவுண்டரிகளும், சிக்சர்களும் என்றால் ஆட்டம் சோர்வளிக்கவே செய்யும். ஒருநாள் கிரிக்கெட்டின் சாராம்சமே 15-வது பந்துப்பரிமாற்றத்திலிருந்து 35வது பந்துப்பரிமாற்றம் வரை எப்படி துடுபெடுத்தாடுகின்றோம் என்பதில்தான் அடங்கியுள்ளது. தற்போதைய விதிமுறைகள் கொஞ்சம் ஒருதலைப்பட்சமானவைதான். சுழற்பந்துவீச்சாளர்களுக்கு இந்த விதிமுறைகள் கடுமையானவை. ஒருநாள் கிரிக்கெட்டையும் அதிரடிதான் தீர்மானிக்க வேண்டும் என்று முடிவெடுத்து விட்டீர்கள் என்றால், குறைந்தது கூடுதல் களத்தடுப்பாளரை உள்ளே கொண்டு வருவதா வெளியே கொண்டு செல்வதா என்பதை தலைவர் தீர்மானிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.' என்று டோனி இந்தப் பிரச்சினைக்கு தீர்வையும் கூறியுள்ளார். (ரி)

## டோனி புகழ்பாடிய கிளார்க்

ஒரு வீரர். அணி தடுமாறும் நேரங்களில் சொல்லிவைத்தால் போல நங்கூரம் போட்டதுபோல் நிற்கிறார். அவரின் சிந்தனைகள் மாறுபட்டவையாக உள்ளன. எந்த நேரத்தில் எந்த முடிவு எடுப்பார் என்று தெரியாது, ஆனால் எடுக்கும் முடிவு சரியானதாக இருக்கும். இவ்வளவு திறமையும் உள்ள அவரை கிரிக்கட் விரைவில் இழந்துவிடக்கூடாது. அவர் நிச்சயம் அடுத்த உலகக்கிண்ண தொடரில் விளையாட வேண்டும், நிச்சயம் விளையாடுவார்' என்றார் (ரி)

உலகக் கிண்ணத் தொடர் முடிவடைந்து இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடங்கவுள்ள நிலையில் (ஏப்ரல் 8) ஐ.பி.எல். தொடர் பாக சென்னை அணிக்கு சார்பாக சமூக வலைத்தளத்தில் பதிவான ஒரு நகைச்சுவை பதிவே இது




## சச்சினைக் கடத்தியது யார் தீவிர விசாரணை ஆரம்பம்

திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட அன்றையதினமே இது சர்ச்சையை ஏற்படுத்தியது. அதாவது, சச்சினின் சிலைக்கு அணிவித்திருந்த உடை 2012ஆம் ஆண்டில் 'ரி-20' உலகக்கிண்ண தொடரில் இந்திய வீரர்கள் அணிந்திருந்தது. சச்சினைப் பொறுத்த வரையில் ஒரேயொரு 'ரி-20' ஆட்டத்தில் மட்டுமே பங்கேற்றார். இந்தச் சர்ச்சைக்குப் பின்னர் மற்றொரு உடை மாற்றப்பட்டது. இந்தச் சிலை சிட்னி, டார்லிங் ஹார்பர் அருங்காட்சியகத்தில் தொடர்ந்து இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சச்சினின் சிலை தற்போது பாங்கொக் கொண்டு செல்லப்பட்டு விட்டதாம். கடந்த மூன்று மாதத்துக்கு முன், நடந்த இந்த விடயம் இப்போது தான் தெரியவந்தது. இது குறித்து வேறு எதுவும் தெரிவிக்க அருங்காட்சியக அதிகாரிகள் மறுத்து விட்டனர். (ரி)

## ரசிகரல்ல வெறியர்

சுதாகர் அங்கு கற்பூரம் ஏற்றி கடவுளை வணங்கிய பின்னர், தன்னுடைய நாக்கை மெல்லிய கத்தியால் அறுத்து துண்டாக்கியுள்ளார். அறுத்து துண்டாக்கப்பட்ட தனது நாக்கை கோவில் முன்பு வைத்து, இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிக்காக கடவுளிடம் வேண்டியுள்ளார். அப்போது இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் ஓடி வந்து, சுதாகரை மீட்டு சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெறவேண்டி வலிக்க வலிக்க தனது நாக்கை தனது கைகளாலேயே அறுத்த இந்த சம்பவம் அந்த பகுதியில் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ரி)

## கங்குலி காட்டம்

நடப்பு உலகக்கிண்ண தொடரில் இந்திய அணி அரையிறுதியில் ஆஸ்திரேலிய அணியிடன் தோல்வியடைந்து வெளியேறியதையடுத்து இந்திய அணியின் பலவீனங்கள் பற்றி கங்குலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கங்குலி தெரிவித்ததாவது இந்திய அணியில் சில ஓட்டைகள் உள்ளன. அதனை சரி செய்ய முயற்சிக்க வேண்டும். நாம் விடயங்களை மூடி மறைக்கலாம். ஆனால் உண்மையில் இந்திய அணியில் பலவீனங்கள் உள்ளன. அடுத்த உலகக்கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்றால் சில விவகாரங்களை உடனடியாகச் சரி செய்யத் தொடங்குவது அவசியம். வெளிப்படையாக கூற வேண்டுமென்றால், உமேஷ் யாதவ், ஷமி அளவுக்கு மோஹித் சர்மா திறமையான பந்து வீச்சாளர் அல்ல. ஆனால் பலரும் அவரிடம் பெரிய திறமைகள் இருப்பதாக நினைக்கின்றனர். இன்னொன்று, ரவீந்திர ஜடேஜா ஒன்று விக்கெட்டுகளைக் கைப்பற்ற வேண்டும் அல்லது ஓட்டங்களை எடுக்க வேண்டும். ஆனால் அவர் இரண்டையுமே ஒன்றாகப் போட்டுக் குழப்புகிறார். மற்ற அணிகளுக்கும் இந்திய அணிக்கும் உள்ள இடைவெளி இதுதான். ஆஸ்திரேலியாவில் கிளென் மக்ஸ்வெல், மிட்செல் ஜோன்சன் போன்றவர்கள் இலக்குகளையும் கைப்பற்றுகிறார் கள். தேவைபடும் போது ஓட்டங் களையும் எடுக்கிறார்கள். இந்திய அணி அப்படியில்லை என்றார் கங்குலி. (ரி)

## இந்திய அணிக்கு மோடியின் ஆறுதல்

யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத, எந்தவொரு அணியாலும் இலகுவில் தொட்டுவிட முடியாத தொடர் வெற்றிகளை நாம் பதித்துள்ளோம். இவற்றை விளையாட்டுலகம் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கும். உங்களின் திறமையையும் விடாமுயற்சியையும் நினைத்து பெருமைப்படுகின்றேன். உங்களால் இந்தியாவே பெருமைப்பட்டுள்ளது.' என்று தெரிவித்துள்ளார். இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியும் இந்திய அணியைப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# அனுஷ்காவிற்கு ஆதரவளித்த மிர்ஷா

அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியின் தோல்விக்கு ஹோக்லியின் கவனம் சிதறியதே காரணம். ஹோக்லியின் கவனம் சிதறியதற்கு அனுஸ்கா சர்மாவே காரணம். மொத்தத்தில் இந்திய அணியின் தோல்விக்கு அனுஸ்கா சர்மாவே காரணம் என்று சில ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் வாதிட்டு வருகின்றார்கள். இந்த நிலையில் அனுஸ்கா சர்மாவுக்கு ஆதரவளித்து பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியாமிர்ஷாவும் போலிவூட் உலகத்தினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தனது காதலர் ஹோக்லியை உற்சாகப்படுத்தவும் அரையிறுதி ஆட்டத்தை நேரில் காண்பதற்காகவும் சிட்னிக்கு வந்திறங்கினார் நடிகை அனுஷ்கா சர்மா. ஆனால், நிலைமை தலைகீழாகி, வெறும் ஒரேயொரு ஓட்டத்தில் ஹோக்லி விடைபெற்றார்.

எப்பொழுதுமே தோல்வியடைந்த வீரரை வைத்து மட்டுமே கிண்டலடிக்கும் ரசிகர்கள், இந்தமுறை அனுஷ்கா சர்மாவை அதிகமாக முன்வைத்துக் கலாய்த்துத் தள்ளி விட்டனர். "ஏ அனுஷ்கா... கோஹ்லியை டக்-அவுட் ஆக்கத்தான் ஆஸ்திரேலியா வந்தாயா?" "பெண்ணை நம்பாதே.. உன்னை ஏமாற்றும்!" "கோஹ்லியின் விக்கெட்டை வீழ்த்தியது ஜோன்ஸன் இல்லை; அனுஷ்கா!" என்று கடுப்பேத்தியுள்ளனர்.

இதனை வன்மையாகக் கண்டித்த சானியாமிர்ஷா தனது ருவிட்டர் பக்கத்தில் 'ர்சிகர்களே... நீங்கள் அனுஷ்காவைக் கிண்டல் செய்வது காமெடியாக இல்லை. உங்கள் முட்டாள்தனத்தைத்தான் காட்டுகிறது. பெண் என்பவள் 'கவனச் சிதைவு'க்கு உதாரணம் இல்லை; வலிமைக்கு எடுத்துக்காட்டுதான் பெண். அதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அப்படியென்றால், மற்ற ஆட்டங்களில் விராட் சதம் எடுத்து, இந்தியா வெற்றிபெற்றதற்கும் அனுஷ்காதான் காரணம் என்று ஏன் யாரும் சொல்லவில்லை? எப்போதுமே வெற்றி பெற்றுக் கொண்டே இருக்க முடியாது. எதுவுமே நிரந்தரம் இல்லை. உங்களுக்கு இருக்கும் சோகத்தைவிட, சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு எவ்வளவு வருத்தம் இருக்கும் என்பதை நீங்கள் உணர்வீர்களா? தயவுசெய்து அனுஷ்கா சர்மாவை இதில் சம்பந்தப்படுத்திக் கிண்டல் செய்வதை விட்டுவிடுங்கள். எப்படி இருந்தாலும், இந்திய அணி முட்டி மோதி தங்கள் திறமையை நிரூபித்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். அணித் தலைவர் டோனி மற்றும் இந்திய வீரர்களே தற்போது எமது நாயகர்கள். அவர்களின் திறமைக்கு தலை வணங்குவோம்'என்றுபதிவிட்டுள்ளார்.



பாலிவுட் உலகம் என்ன கூறுகிறது?

பிரியங்கா சோப்ரா: 'ஆதரவான ஒரு தோழி ஆட்டத்தை நேரில் சென்று பார்த்ததற்காக அநியாயமாகச் சாடப்படுகிறார். இது பயங்கரமாக உள்ளது. இதனை உடனடியாக நிறுத்துங்கள்.'

சுஷ்மிதா சென்: 'தனக்கு பிரியமான வரையும் நாட்டை ஆதரிக்கவும் அனுஷ்கா சர்மா சென்றது குறித்து மகிழ்ச்சி. அவரை கேலி செய்பவர்கள் வேறு விளையாட்டைத் தேர்ந்தெடுக்கவும்.'

ரிஷா கபூர்: 'அனுஷ்கா உங்களுக்கு என் ஆதரவு. கல்வியறிவற்ற சில முட்டாள்கள் உங்களை குறிவைக்கின்றனர்.'

அர்ஜுன் கபூர்: ஆஸ்திரேலிய அணி சிறப்பாக விளையாடியதை பாராட்டுவோம். இதனை விடுத்து தனிநபர்களை தோல்விக்காக சாடுவது கூடாது.' என்று போலிவூட் உலகத்தினர் கருத்து தெரிவித்துள்ளனர். (ரி)

## சூதாட்டத்தில் பறிபோன உயிர்கள்

அடையும் நிலையை அடைந்தபோது, ஸ்ரீ ஹரியின் பெற்றோர் மனம் உடைந்தனர். ஏற்கனவே கடன்காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் இருந்து வந்த இருவரும், மேலும் தற்போது பல லட்சம் கடன் வாங்கியுள்ள மகன் எப்படியும் தப்பித்துக் கொள்வான், நாம் தான் இவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும் என்று கருதி, வீட்டில் வாங்கி வைத்திருந்த பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துத் தற்கொலை செய்து கொண்டனர். இது குறித்து கிராமத்தினர் அளித்த புகாரின் பேரில், ஸ்ரீ ஹரியை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். (ரி)

## யாரின் தவறு?

களால் தோல்வியடைந்தது. இந்திய அணியின் தோல்வியால் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளானார்கள். இந்நிலையில், இந்தியாவின் தோல்வியைத் தாங்கிக் கொள்ள இயலாத உத்திரப்பிரதேச கிரிக்கெட் ரசிகர் உமேஷ் என்பவர் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். இவர் அந்த மாநில நீர்ப்பாசனத் துறையில் ஊழியராக வேலை பார்த்து வந்தார். உமேஷின் தற்கொலை குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். உண்மையிலேயே இந்தியாவின் தோல்விதான் உமேஷின் தற்கொலைக் குக் காரணமா அல்லது வேறு ஏதேனும் உள்ளதா என விசாரணைக்குப் பின்னரே உறுதியாக தெரிய வரும் என அவர்கள் தெரிவித் துள்ளனர். (ரி)


# சிமித் சிறந்தவர்



நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதியில் இந்திய அணியை ஆஸ்திரேலிய அணி தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. ஆஸ்திரேலிய அணியின் இந்த வெ ற்றிக்கு மிக முக்கிய காரணம் ஆஸ்திரேலிய அணியின் உப தலைவர் சிமித் என் று ஆஸ்திரேலிய அணியின் தலைவர் கிளார்க் தெரிவித் துள்ளார்.

அரையிறுதி வெற்றியை அடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த மைக்கல் கிளார்க் 'நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். பலம் மிக்க இந்தியாவை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளோம். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்திய அணிகள் மோதிய முத்தரப்பு தொடர் இந்த வரிசையில் அரையிறுதி ஆட்டத்திலும் இந்தியாவுக்கு எதிராக சிமித் மீண்டுமொரு முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆஸ் திரேலிய அணியின் வெற்றிக்கு வித்திட்டுள்ளார். சிமித்தின் சிறந்த திறன் இறுதி யாட்டத்திலும் தொடர வேண்டும். இந்திய அணியினருக்கு எவ்வகையிலான பந்துவீசவேண்டும் என்பது பற்றி பல மணித்தியாலங்களாக திட்டமிட்ட எங்கள் பந்துவீச்சாளர்கள் அவர்களுடைய திட் டத்தை சிறப்பாக செயல்படுத்தியதை நினைத்து பெருமை கொள்கிறேன். ஆக மொத்தத்தில் பலம்மிக்க நடப்புச்சம்பியனை தோற்கடித் துள்ளோம். அரையிறுதி வெற்றிக்களிப்புடன் நின்றுவிடாது அடுத்த கட்டமாக இறுதியாட்டத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்று கவனம் செலுத்தவுள் ளோம். மெல்போர்னில் நடை பெறவுள்ள இறுதியாட்டம், லீக் சுற்றில் நியூஸிலாந் திடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுப்பதற்கான வாய்ப்பாக இருக்கிறது நிச்சயம் இந்த வாய்ப்பை பயன் படுத்துவோம். ஆனால் நியூஸி லாந்தை வெற்றிகொள் வதென்பது அவ்வளவு எளிதானதல்ல. எமது முழுத்தி றனைவெளிப்படுத்திநியூஸிலாந்தைவீழ்த்தமுயற்சிப்போம்.'என்றார். (ரி)

# பாகிஸ்தானில் கிரிக்கட் சாகப்போகிறது



பாகிஸ்தானுக்கு வேறுநாடுகள் சுற்றுப்பயணம் செய்து விளை யாடாததால் பாகிஸ்தானின் கிரிக் கெட் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று பாகிஸ் தான் கிரிக்கட் அணியின் பயிற்று விப்பாளர் வக்கார் யூனிஸ்கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வக்கார் யூனிஸ் தெரிவித்ததாவது 'தீவிரவாத அச் சுறுத்தல் காரணமாக பாகிஸ்தா னுக்கு, கடந்த 2009ஆம் ஆண்டு முதல் எந்த அணியும் கிரிக்கெட் விளையாடச் செல்வதில்லை. பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டங்கள் அனைத்தும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் தான் நடத்தப்படுகிறது. பாகிஸ்தான் நாட்டிற்கு பிறநாட்டு அணிகள் வந்து விளையாடாததால் பாகிஸ் தான் நாட்டில் கிரிக்கெட் அழிவுப் பாதையில் சென்றுகொண்டி ருக்கிறது. சர்வதேச ஆட்டங்கள் பாகிஸ்தானில் நடைபெறாமல் இருப்பது வீரர்களையும் கடுமை யாக பாதித்துள்ளது. இந்த நிலை நீடித்தால் பாகிஸ்தானில் கிரிக் கெட் செத்துப் போய் விடும் என அஞ்சுகிறேன். இளம் வீரர்களின் திறமை மங்கிப் போய் விடும். சர்வதேச கிரிக்கெட்டை மீண்டும் பாகிஸ்தானுக்குக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இந்த விடயத்தில் பாகிஸ்தான் அரசும் உதவ முன்வர வேண்டும். இதில் இனியும்தாமதம்செய்யக்கூடாது. எங்களுக்குப் பந்துவீச்சு ஒரு போதும் பிரச்னையாகவே இருந்த தில்லை. துடுப்பாட்டம்தான் கவலையாகவே இருக்கிறது. உலகக்கிண்ண தொடரில் பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்து வீசியதற்காக பெருமைப் படுகிறேன்.' என்றார். (ரி)

# இப்படியும் சிலர்



நடப்பு உலகக்கிண்ண தொடரில் இந்திய அணியின் தோல்வியால் ரசிகர்கள், பிரபலங்கள் என்று பலரும் தமது வேதனைகளை கொட் டித்தீர்த்து வரும் வேளையில், ஒரு இந்திய பிரபலம் மட்டும் அதற்கு எதிர்மறையான கருத்துகளை வெளி யிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள் ளார். அவர் வேறு யாருமில்லை. புகழ்பெற்ற இந்தி திரைப்பட இயக் குனர் ராம்கோபால் வர்மா.

இந்தியாவின் அரையிறுதித் தோல் வியையடுத்து தனது டுவிட்டர் பக்கத்தில்,' இந்திய அணி தோல்வி கண்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஏனெனில் எனக்கு கிரிக்கெட் பிடிக் காது. கிரிக்கெட்டை விட அதிகமாக வெறுப்பது எது என்று கேட்டால், கிரிக்கெட்டை விரும்புபவர்களைத் தான் என்று சொல்வேன். ஆசியா வில் எந்த அணிகளும் தேறவில்லை யென்பது அதைவிட பெரிய மகிழ்ச்சி' என்று பதிவிட்டுள்ளார். (ரி)

# கடுப்பானார் கங்குலி



நடப்பு உலகக்கிண்ண தொடரின் இரண்டாவது அரையிறுதியில் இந் தியாவின் நம்பிக்கையாக இருந்த விராட் ஹோக்லி ஓர் ஓட்டத் துடன் ஆட்டமிழந்ததற்கு ஆட்டத்தை நேரில் பார்க்க வந்த ஹோக்லியின் காதலியும் ஹிந்தி நடிகையுமான அனுஸ்கா சர்மாதான் காரணம் என்று சமூகவலைத்தளங்களில் பல நகைச்சுவைப்பதிவுகள் வெளிவந்த நிலையில், கங்குலி இவறான பதிவு களை கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக கங்குலி தனது ருவிட்டர் வலைத்தளத்தில் பதிவு செய்திருப்பதாவது 'அனுஸ்கா சர்மா மீது பழிசுமத்தப் பட்டிருப்பது வருத்த மளிக்கிறது. அவர் ஆஸ்திரேலியா வந்ததில் என்ன தவறு? மற்ற வீரர் களின் குடும்பத்தினரைப் போலவே அனுஸ்காவும் கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்க்க வந்திருக்கிறார். அப்படியி ருக்கையில் ஹோக்லி சரியாக விளையாடாததற்கு அனுஸ்கா மீது பழி சுமத்துவது நியாயமற்றது. இது ரசிகர்களின் முதிர்ச்சியற்ற தன்மை யையே காண்பிக்கிறது. இரண்டு பேர் காதலிப்பதில் என்ன தவறு? அனுஸ்கா வந்தால் நான் நன்றாக விளையாடுவேன் என்று ஹோக்லி தெரிவித்தாரா, நாமே ஒரு முடிவை எடுத்து அதற்கு நாமே தீர்ப்பும் வழங்குவதில் நியாயமில்லை' என்று பதிவிட்டுள்ளார். (ரி)

# சச்சின் வழியில் ஹோக்லி

## சதத்தில் மட்டுமல்ல சறுக்கலிலும்

உலகக்கிண்ண தொடர்களில் முக் கியமான விலகல் முறையிலான ஆட்டங்களில் சச்சினும் ஹோக் லியும் ஒரே மாதிரியாக ஆட்டமி ழந்து வெளியேறியுள்ள தகவலொன்று வெளியாகியுள்ளது

கடந்த 2003ஆம் ஆண்டு நடந்த உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மோதின. இந்த ஆட்டத்தில் 360 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு களமிறங்கிய இந்திய அணியினர் வரிசையாக நடையைக் கட்டினர். இந்த ஆட்டத்தில் வெறும் 5 பந்துகளை சந்தித்த சச்சின் டெண் டுல்கர் 4 ஓட்டங்களை எடுத்து வெளி யேறினார். அந்த பந்தை கிளென் மெக்ராத் பவுன்சராக வீசினார். ஹோக்லியைப் போலவே சச்சி னும் திரும்பி அடிக்க முற்பட்டு பந்து மேலெழுந்து ஆட்டமிழந்தார். அதே போன்று ஆஸ்திரேலியா வுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில், விராட் ஹோக்லி 13 பந்துகளை சந்தித்து 1 ஓட்டத்தினை மட்டுமே எடுத்தார். இதில் மிட்செல் ஜோன்சன் பவுன்சராக வீசினார். கிட்டத்தட்ட அதே உயரத்தில் வந்த அந்த பந்தை விராட் ஹோக்லியும் திரும்பி அடித்து ஆட முற்பட்டு ஆட் டமிழந்தார். இதனால் சச்சினும், விராட் ஹோக்லியும் முக்கியமான இரண்டு ஆட்டங்களில், அதுவும் அதே ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத் தில் ஆட்டமிழந்து உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் வாய்ப்பைத் தவறவிட் டுள்ளனர் என்பதுதான் இந்திய ரசி கர்களின் புதியசோகமாக உள்ளது.

# நியூஸி. கிண்ணம் வெல்லவேண்டும்

நடப்பு உலகக்கிண்ண தொடரின் இறுதியாட்டத்துக்கு நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் முன்னேறியுள்ள நிலையில், இறுதி யாட்டத்தில் உலகக்கிண்ணத்தை நியூஸிலாந்து அணிதான் வெல்ல வேண்டும் என்று தென்னாபிரிக்கா வின் முன்னாள் அணித்தலைவர் சிமித் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிமித் தெரிவித் தது. 'முதலாவது உலகக்கிண்ணத்தை கைப்பற்ற தென்னாபிரிக்கா இன்னும் 4 ஆண்டுகள் காத்திருக்க வேண் டும். தென்னாபிரிக்காவின் 19 வய துக்குட்பட்டோருக்கான அணியில் இடம்பெற்றிருந்த கிராண்ட் எலி யாட், இளையோர் டெஸ்ட் ஆட்டத் தில், இங்கிலாந்தின் 19 வயதுக் குட்பட்டோருக்கான அணிக்கு எதி ராக சிறப்பு வாய்ந்த இரட்டை சதத்தை விளாசியுள்ளார். திறமை வாய்ந்த அவர் தனது 20ஆவது வயதுகளில், நியூஸிலாந்து அணிக் காக தனது கிரிக்கெட் வாழ்க்கையை வாழத் தொடங்கிவிட்டார். தனது கிரிக்கெட் வாழ்க்கையில் தடை ஏற் படும் போது, நிலையான இடத்தை உறுதிசெய்து கொள்வது இயற்கை யான நடவடிக்கைதான். அவரை அணியில்சேர்த்துக்கொண்டபெருமை, நியூஸிலாந்து அணியின் தேர்வு குழுவுக்கே சென்று சேரும். நியூ ஸிலாந்து – தென்னாபிரிக்கா அரை யிறுதி ஆட்டத்தை 1999ஆம் ஆண் டின் உலகக்கிண்ண அரையிறுதி யில், ஆஸ்திரேலியா – தென்னா பிரிக்கா அணிகளுக்கிடையேயான ஆட்டத்துடன் ஒப்பிட விரும்புகிறேன். முதல் இரண்டு இலக்குகளை விரை வாக இழந்தபோதும், தென்காபிரிக்கா தங்கள் இன்னிங்ஸை நன்றாகவே கட்டமைத்தது. பிளஸ்சிஸ், ரோசொவ் ஆகியோர், வில்லியர்ஸ், மில்ல ருக்கு தேவையான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். மழை குறுக்கிடாமல் ஆட்டம் தொடர்ந்து நடந்திருந்தால், தென்னாபிரிக்கா 380 ஓட்டங்கள் வரை சேர்த்தி ருக்கும். வில்லியர்ஸ் களத்தில் நின்ற தால் ஓட்டங்கள் இன்னும் அதிக மாகவும் வாய்ப்புக்கள் உண்டு. மற்ற படி இந்த ஆட்டத்தில் மட்டுமின்றி, உலகக்கிண்ணத் தொடரிலும் கூட நியூஸிலாந்தே சிறந்த அணியாக விளங்குகிறது. நியூஸிலாந்து அணி இறுதி ஆட்டத்தில் வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.' என்றார். (ரி)

# இயல்புக்கு திரும்புகின்றது இங்கிலாந்து



நடப்பு உலகக்கிண்ண தொடரில் பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட இங்கி லாந்து அணி, காலிறு திக்கு கூட தகுதி பெற முடியாமல், லீக் சுற்று டன் வெளியேறியது. காலிறுதியுடன் விடை பெற்ற மே.தீவுகளுக் கும் இங்கிலாந்து அணிக் கும் அடுத்த மாதம் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் நடைபெறவுள் ளது.

இவ்விரு அணிகளுக்கு இடையே யான முதல் டெஸ்ட் ஆட்டம் ஏப்ரல் 13ஆம் திகதி, ஆண்டிகுவாவில் தொடங்குகிறது. ஏப்ரல் 21ஆம் திகதி இரண்டாவது டெஸ்ட்டும், மே 1ஆம் திகதி மூன்றாவது டெஸ்ட்டும் தொடங்குகிறது. மே.இ.தீவுகளின் முன்னணி வீரரான டேரன் பிராவோ இத்தொடரில் விளையாட உள் ளார். பிராவோ உலகக்கிண்ண தொடரில் இரண்டு ஆட்டங்களில் மட்டுமே பங்கேற்ற நிலையில், பாகிஸ்தானுடன் நடந்த ஆட்டங் களில் காயமடைந்தார். இதனால் மேற் கொண்டு ஆட்டங்களில் பங்கேற்க முடியாமல் நாடு திரும் பினார். தற்போது காயத்தில் இருந்து மீண்டு வந்துள்ளார். டெஸ்ட் தொட ருக்கு முன்னதாக இங்கிலாந்து அணி, இரண்டு பயிற்சி ஆட்டங் களில் பங்கேற்கிறது. இந்த தொட ரில் இருந்து, அயர்லாந்து அணி யின் பயிற்சியாளரும், தீவுகளின் முன்னாள் வீரருமான பில் சிம் மன்ஸ், தனது நாட்டு அணிக்கே தலைமை பயிற்சியாளராக பணி யாற்ற உள்ளார். இதற்காக தீவு களின் கிரிக்கெட் வாரியத்துடன் அவர் மூன்றாண்டுகள் ஒப்பந்தம் செய்துள்ளார். 'வீரர்களின் முழுதிற னை வெளிப்படுத்தும் வகையில், அவர்களை பிலிப் சிம்மன்ஸ் மேம் படுத்துவார்' என நம்பிக்கையுள்ள தாக, தீவுகளின் கிரிக்கெட் வாரியத் தலைமை அதிகாரி மைக்கெல் முனிர்ஹெட் தெரிவித்துள்ளார் (ரி)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாகச் செயற்பட்டாலும் பாராட்டுக்குப் பதில் விமர்சனம் கிடைக்கும்.

**இடபம்:** திடீர் கோபம் ஏற்படும். வீண் செலவும் இருக்கும். பிடிவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தனப் போக்கு காணப்படும். செலவும் கூடும்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாகப் பேசாமல் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**கடகம்:** அயலாருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பெண்களுக்கு மற்றவர்கள் செயல்களால் திடீர் கோபம் உண்டாகலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீண் செலவைக் குறைப்பது நல்லது.

**சிங்கம்:** பிடிவாதத்தை விடுவது நன்மை தரும். எல்லா நன்மைகளும் உண்டாகும். அறிவுத் திறன் கூடும். வீண் அலைச்சல் திடீர் பதற்றம் ஏற்படலாம். காரியங்களில் இழுபறியான நிலை ஏற்பட்டு, பின்னர் முடியும்.

**கன்னி:** பதவி மாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் உண்டாகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பேச்சில் கோபமும், குடும்பத்தில் சிறு குழப்பங்களும் ஏற்படும்.

**துலாம்:** தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வீண் மனக் குழப்பங்கள் அவ்வப்போது வந்தாலும் முடிவில் தெளிவு உண்டாகும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விடயத்திற்காக கூட அலைய வேண்டி இருக்கும். பணிச் சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம். கவனமாக செயற்படுவது நல்லது.

**தனுசு:** தேவையான உதவிகள் தாமதமாக கிடைக்கும். வீண் கனவுகள் தோன்றும். திடீர் கோபம் தோன்றலாம். மிகவும் கவனமாக பேசுவது நன்மை தரும்.

**மகரம்:** உங்கள் செயல்களை குடும்பத்தில் உள்ளவர்கள் குற்றம் சொல்லலாம். எனவே வாக்குவாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமல் செல்வது நன்மை தரும். மற்றவர்கள் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** உத்தியோகத்தர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது வெற்றிக்கு உதவும். வேலையைக் கூடுதல் கவனமுடன் செய்வது நல்லது. எந்த வேலையையும் திட்டமிட்டுச் செய்வது நன்றாக நடக்க உதவும். கஷ்டங்கள் தீரும்.

**மீனம்:** மனதில் பக்தி உண்டாகும். சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. எந்த ஒரு செயலையும் யோசித்துச் செய்வது நல்லது. எதிரிகள் தொல்லை குறையும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.





## ஜீன்களை கட்டுப்படுத்தும் மருந்து

புற்று நோயாளிகளுக்கு கீமோதெரபி சிகிச்சை அளிக்கப்படுவது வழக்கம். இந்த சிகிச்சையின்போது, புற்றுநோய் பாதிக்கப்பட்ட இடத்தில் வழங்கப்படும் மருந்தின் சக்தியை அங்கு இருக்கும் ஜீன்கள் செயலிழக்கச் செய்துவிடும். இதைத் தடுக்கும் வகையில் எம்ஆர்பி–1 என்னும் நானோ மருந்தை அமெரிக்காவின் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மருந்தைச் செலுத்தும் முன்பு, இந்தப் புதிய மருந்தைச் செலுத்தினால், சிகிச்சைக்கான மருந்தின் சக்தியை புற்றுநோய் ஜீன்களால் தடுக்க முடியாது.

## சின்னத்திரைக்கு புதிய சிக்கல்

சின்னத்திரை நடிகைகள் பலர் ஒரே நேரத்தில் கர்ப்பமாகியுள்ளதால், தொடர்களை கொண்டு செல்வதில் தயாரிப்பு நிறுவனங்கள் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. இதனால் அவசர அவசரமாக தொடர்களை படப்பிடிப்புச் செய்ய வேண்டியிருப்பதுடன், பழைய நடிகைகளுக்குப் பதிலாக புதிய நடிகைகளையும் கொண்டுவரவேண்டிய இக்கட்டான நிலையில் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன.

பொன்னூஞ்சல் தொடரில் நடிக்கும் சேது அபிதா கர்ப்பமாகியுள்ளார். குழந்தையைப் பெற்றுக் கொள்ள அவர் கேரளாவுக்குச் சென்றுள்ளார். இதனால் அவருக்குப் பதிலாக ஷமிதா நடிக்கின்றார். மெட்டி ஒலி தொடரில் நடித்துப் புகழ்பெற்ற காயத்திரியும் தற்போது கர்ப்பமாகியுள்ளார். இவர் பல தொடர்களில் தற்போது நடித்து வருகின்றார். இதனால் இவரது காட்சிகளை எல்லாத் தொடர் இயக்குநர்களும் அவசரமாக எடுப்பதுடன் இவருக்குப் பதிலாக வேறு நடிகையையும் தேடுகின்றனர்.

இதேபோன்று ஏனைய துணை நடிகைகளான வைஜெயந்தி, தர்ஷானி ஆகியோரும் கர்ப்பமாகியுள்ளனர். இதனால் சின்னத்திரை தொடர்களை இயக்கும் இயக்குநர்கள் புதிய நடிகைகளைத் தேர்வு செய்கின்றனர்.

## லேசர் ஒளியால் இயங்கும் கணினி





தற்போதைய கணினிகளில் சிப்கள், மெட்டல் சேர்க்யூட் போர்ட்கள் வழியாக பாயும் மின்னணு சிக்னல்கள் மூலமாகவே கணினிகள் இயங்குகின்றன. மின்னணு சிக்னலுக்குப் பதிலாக நுண்ணிய குழாய்கள் வழியே லேசர் ஒளியை செலுத்தி அதன் மூலம் கணினிகளை இயக்கலாம் என்று அமெரிக்காவின் புளோரிடா மாநில ஆராய்ச்சி யாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

‘எனக்கு அப்பவே தெரியும்’
‘என்னது?’
‘விஜய் ரிவில உலகக் கிண்ண மட்ச் போடும் போதே.,
ரிஆர்பி ரேட்டிங்குக்காக, இப்படி ஏதாவது செய்து அழவைத்து செண்டிமெண்ட் பண்ணித் தான் முடிப்பாங்கன்னு!
செய்யும் விடயத்தில் மும்முரமாக இருக்கின்றனர்.





## மன்னிப்புக் கோரிய அமீர்

உலக நாயகன் கமல்ஹாசனிடம் பொலிவூட் நடிகர் அமீர்கான் மன்னிப்புக் கேட்டுள்ளார். மும்பையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியபோது, அமீர்கான் இதனை கூறியுள்ளார்.

கமல் நடித்த விஸ்வரூபம் திரைப்படத்துக்கு 2013 ஆம் ஆண்டு பிரச்சினைகள் ஏற்பட்டன. அந்தத் திரைப்படத்தை வெளியிடுவதற்கு தடையும் விதிக்கப்பட்டது. அப்போது கமலுக்கு ஆதரவாக நான் இருந்திருக்க வேண்டும். வேறு பணிகளில் இருந்ததால் அதை தவறவிட்டு விட்டேன். இதற்காக வெட்கப்படுகிறேன். கமலிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன், என்று அமீர்கான் கூறியுள்ளார்.

# உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

"நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக, தென்னாபிரிக்காவில் உள்ளதைப் போன்ற உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு போன்ற ஒன்றை அமைப்பதற்காக அந்தநாட்டுப் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த அடுத்தகட்டம் நோக்கிச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் தேசிய ஐக்கிய செயலணி ஒன்று அமைக்கப்படும் என்றும் இத்திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் பிரதானிகளுடன் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவது ஊக்குவிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள போர்க்குற்ற விசாரணை பிரேரணை மற்றும் அதனை கொண்டுவந்த நாடுகள் புலம்பெயர் அமைப்புகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பான் கீ – மூனுடன் கடந்த அரசு செய்துகொண்ட ஒப்பந்தம் உள்ளிட்ட சில விடயங்களே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரேரணை முன்வைக்க காரணமாக அமைந்தது என்றும், ஆனால், நல்லிணக்க விடயங்களில் சர்வதேசத்திடம் சரணடையத் தேவையில்லை என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

நாட்டில் பயங்கரவாதச் செயல்களுக்கு மீண்டும் இடமளிக்கப் போவதில்லை என்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்த பிரதமர், பழைய முறை போன்று அல்லாது பயங்கரவாதம் இன்று உலகில் புதிய வடிவங்களில் வருவதாகவும் அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் கைதுசெய்யப்படுவதில்லை என்று விமர்சனங்கள் எழுந்துள்ளதாகவும், ஆனால், பிரதான ஊழல், மோசடிக்காரர்களைப் பிடிக்க சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சட்டத்தின் பிடியில் இருந்து எவரும் தப்ப முடியாது என்றும் பிரதமர் கூறினார்.

19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள மக்கள் தீர்ப்பொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்றும் அனைத்தும் சட்ட ஆலோசனைப்படி நாடாளுமன்றில் நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் கூறினார். ஆனால், நீதிமன்றம் பரிந்துரை செய்யும் திருத்தங்களை மேற்கொள்ளத் தயார் என்றும் ரணில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவுறவுள்ள நிலையில், அதன் காலம் நீடிக்கப்படுமா அல்லது ஆணையாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுமா என்று கேட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், ஜனாதிபதி சீனா சென்றுள்ளதாகவும் அவர் நாடு திரும்பியதும் அது குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்றும் கூறினார்.

இதேவேளை, சீனாவின் துறைமுக நகர் திட்டம் குறித்த விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் உள்ள விடயங்களுக்கு ஏற்ப எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளதால் உலகிற்கே இலங்கை முக்கியம் என்றும் தெரிவித்துள்ளார். (வ–சி)


Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
THE GREATEST HEROIC LEGEND IN MOVIE HISTORY




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



**கொழும்புத்துறை**
**சனசமூக நிலையம்**
**மரதன் ஓட்டப்போட்டி**

64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்புத்துறை சன சமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி 2015 ஆண்களுக்கானது

பதிவு முடிவுத்திகதி 01.04.2015

தொடர்பு: 076 847 5971. 077 890 3783



**P.K.S.P. ரயர் விற்பனை நிலையத்தின்**
**மலிவு விற்பனை**

கார் ரயர் G.T, CEHT, மோட்டார் சைக்கிள் ரயர், ரியூப் லொறி ரியூப், ஒட்டோ எலோவீல் ஓட்டும் மெசின் வான் எலோவீல், வீல் வலன்ஸ் மெசின், ரயர் கழற்றும் மெசின், கொம்பிரசர் மெசின், நட்டு கழற்றும் மெசின், ஜெக் சாவி செற் விற்பனைக்குண்டு.

மலிவு விற்பனை

K.K.S. வீதி, இணுவில். (தியேட்டர் முன்பாக)
P.No: 0777498793, 0212241534


## இலவச WiFi திட்டம் திங்கள் ஆரம்பம்

இலவச WiFi திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் பிரதானிகளுடன் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இந்தக் கருத்துகளை வெளியிட்டார்.

ஆரம்பக் கட்டமாக புறக்கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இலவச திட்டத்தை எதிர்வரும் திங்களன்று பிரதமர் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தெரிவான மைத்திரிபால சிறிசேன குழுவினர் தேர்தலுக்கு முன்பாக வழங்கிய 100 நாள் திட்ட தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிக்கு அமைவாகவே இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ–சி)

## சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக முதலாவது தமிழர்

கொழும்பு, மார்ச் 28

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தமிழர் ஒருவர் பதவியேற்கவுள்ளார்.

சட்டத்துறையில் 35 வருட கால அனுவமுடைய ஜெப்ரி அழகரத்தினம் சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (வ–சி)


**கார் விற்பனைக்கு**

HQ - XXXX இலக்கம் உடைய Nissan Sunny N16 Gold Colour கார் விற்பனைக்கு உண்டு.

விலை- 1,775,000/=
தொ.பே. 077 583 4770 (58166) (45.3.7)



## வருடாந்த ஒன்றுகூடல்

யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று (28.03.2015) சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் எமது வைத்தியசாலையில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள தாதியஉத்தியோகத்தர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (58174) (45.3.7)



## கேள்வி அறிவித்தல்
## வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு

அலுவலகப் பாவனைக்குத் தேவையான கீழ்வரும் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

* கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் - 06.04.2015 மு.ப.10.00
* கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 06.04.2015 மு.ப. 10.30

**கோரப்படும் பொருள் விவரம் பின்வருமாறு**

* அலுவலகப் பாவனைக்கான காகிதாதிகள்
* ரோனர்கள் (அனைத்து வகையான போட்டோக் கொப்பி, பிரின்டர்களுக்கானது).

கேள்விப்பத்திரங்களை இரட்டைப்பிரதிகளில் பூரணப்படுத்தி வெவ்வேறு கடித உறைகளில் இட்டு மூலப்பிரதி வைக்கப்பட்டுள்ள கடித உறையில் மூலப்பிரதி எனவும் மற்றயதில் பிரதி எனவும் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்டு மேற்கூறிய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **வலயக் கல்விப்பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு** என்ற முகவரியில் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ சமர்ப்பிக்க முடியும்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு. (சி.17239) (45.3.7)

021 229 0015



## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்
## பான் ஏஷியா வங்கி யாழ்ப்பாணக் கிளை

ஓய்வூதியர்களுக்கான கடன் வசதியின் சலுகைகள்

- கடனைப் பெற்றுக்கொள்ள பிணைகள் தேவையில்லை
- ரூ. 1,000,000/- வரை கடன் தொகை
- 7 வருட மீள செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீள செலுத்தக் கூடிய வசதி
- கடனைப் பெறுபவருக்கு மரணம் சம்பவிக்கும் போது குடும்பத்தினருக்கு கடன் சுமையை வழங்காமல் காப்புறுதியினால் கடன் தொகை விலக்களிக்கப்படும் மேலும் பின்னுரித்தாளருக்கான விசேட பணச்சலுகைகள் (ரூ. 100,000/- கடனிற்கு கடன் காப்பீட்டிற்காக ரூ. 602/- மட்டுமே)

ஓய்வூதியர்களுக்கான சிறப்பு சேமிப்புக் கணக்கின் மேலதிக சலுகைகள்

- உங்கள் விசேட சேமிப்புக் கணக்கிற்கு கவர்ச்சிகரமான வட்டி
- VISA குறி உள்ள எந்தவொரு ATM இலும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி
- தனிப்பட்ட சேமிப்புப் புத்தகம் வழங்கப்படும்
- ரூ. 200/- ஆரம்ப வைப்பாக வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிக்க முடியும்
- இச்சலுகை ரூ. 10,000/- திற்கு அதிகமாக மாதாந்த ஓய்வூதியத் தொகையை பெற்றுக்கொள்பவர்களுக்கு வழங்கப்படும்
- ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களும் இச்சலுகையினை பெறமுடியும்
- விதவை ஓய்வூதியப்பணம் பெறுபவர்களும் இச்சலுகையினை பெறமுடியும்

இந்த கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை (29.03.2015) ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் (வண்ணார் பண்ணை சிவன் கோவில் அருகாமையில்) நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,
**PAN ASIA BANK PLC.**
பான் ஏஷியா வங்கி
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
021- 4925118 / 021- 4976777 / 021- 4925119

பான் ஏஷியா வங்கி

## 3 ஆம் ஆண்டின் நீங்காத நினைவுகள்

## ஏ.றெனோல்ட் எல்ரன் (B.A)

மலர்வு
13.06.1985

உதிர்வு
28.03.2012



பல்கலையும் கற்று, பார்புகழ
வாழ்வாயென
நாமிருக்கப் பாதியிலே
போனதேனோ?
உன்னைச்சுமந்த வயிறு
துடிக்குதடா!
உன்னை இழந்த உறவுகள்
தவிக்குதடா!
கண்ணீரில் உன் முகம் தேடி
கதறி இங்கே அழுகின்றோம்!
உன் உறவுகள் மகிழ்ந்திட
உலகம் உன்னைப் புகழ்ந்திட மறு ஜென்மம்
எடுத்து நீயும் இங்கே வருவாய்!

இவரின் ஆத்ம சாந்திக்காக கப்பலேந்தி மாதா தேவாலயத்தில் இன்று (28.03.2015) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

கட்டைக்காடு.
முள்ளியான்.

குடும்பத்தினர்.
(51398)(4.7.3)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1934 . 09 . 15

மறைவு 2014 . 04 . 08

அமரர் **செல்லம்மா செல்லையா**

திதி: நவமி

காலத்தின் தேவையறிந்து
நான் வெளிநாடு சென்றேன்
கள்ளமில்லா உங்கள்
அன்புதனைப் பிரிந்தேன்
கலையாத நினைவுகளோடு
அம்மம்மா உங்களைக்
காலமெல்லாம் என்
நெஞ்சினில் சுமப்பேன்
[illegible]

அன்புப்பேரன்
சந்திரலிங்கம், அருண் + ஜெனோவா (சுவிஸ்)
"அகலகம்" கொற்றாவத்தை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **விஜயலட்சுமி நடேஸ்வரன்**

தோற்றம்
19.12.1953

மறைவு
26.02.2015

அக்கா!
எம் அருகில் இருந்த நாள்களை
கண்ணிமைக்கும் பொழுதெல்லாம்
அக்காவின் நினைவுகள் இனித்திடுகின்றன
எப்போது காண்போம் இனி உங்களை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல பேச்சியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர்கள், உறவினர்.

சாயி போட்டோ
1010/11, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

## நாளை குருத்தோலை ஞாயிறு

கொழும்புத்துறை, மார்ச் 28

கிறிஸ்தவர்கள் அனுசரித்து வரும் தவக் காலத்தின் இறுதி வாரத்தின் ஆரம்பமான குருத்தோலை ஞாயிறு தினமாகிய நாள் நாளையாகும். அன்றைய தினம் அனைத்து கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட வழிபாட்டுடன் திருப்பலிகள் இடம்பெறும்.

இயேசு தமது இறுதி நாள்களில் மானுட விடுதலைக்காக தன்னையே பலியாக்கும் நோக்கில் ஜெருசலேம் பாஸ்காவிழாவில் கலந்து கொள்ள நகருக்கு வந்த போது மக்கள் அவரை அரசரென வரவேற்று பவனியாக 'ஓசன்னா' பாடி அழைத்துச் சென்றதை நினைவு படுத்துவதே நாளைய தினமாகும்.

நாளை காலை ஆலயங்களில் ஒன்று கூடும் மக்கள் ஆசீர்வதிக்கப்பட்ட குருத் தோலைகளை கைகளில் ஏந்தியபடி குரு வுடன் இணைந்து பவனியாகச் சென்று திருப்பலியில் பங்கெடுப்பர். அதனைத் தொடர்ந்து அந்த வாரம் புனித வாரமாக அனுசரிக்கப்படும். (ஒ–135)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் அன்னரெத்தினம் இராசையா



தோற்றம்
15.03.1933

மறைவு
26.02.2015

கடந்த 26.02.2015 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி அன்னரெத்தினம் இராசையா அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.03.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 89/3, நாயன்மார் வீதி, நல்லூரிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசியூடாக உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக் கும், மலர்வளையம் சாத்தியோருக்கும் மற்றும் எமக்குப் பலவழிகளிலும் உதவியவர்களுக்கும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

89/3, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(58162(4.6.3)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
16.08.1976

உதிர்வு
28.03.2009

### கனகரத்தினம் சுரேஸ்குமார் (சுரேஸ்)

(புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஊழியர்)

அன்பில் சிறந்தவனாய் மண்ணிலே உதித்த என் இதயக் கோயிலே
உங்கள் திருமுகம் எங்கு ஒடி மறந்தாய் என் குல விளக்காய் வாழ்ந்து
என்னை பரிதவிக்க விட்டதேனப்பா... ஆண்டுகள் ஆறு ஆன போதும்
ஆறிடுமோ என் இதயம்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: சு.பரிமளம் (மதி)
தாவளை இயற்றாலை, வரணி.
(51934)(4.7.3)



மலர்வு
17.05.1984

உதிர்வு
13.03.2009

### கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)

ஒரு கூட்டுக் கிளியாக வாழ்ந்த
எம் உயிரே நீ ஒடித்திரிந்த எம்
நித்திலம் இன்று ஒளி இழந்து நிற்குதடா....
இமை மூடித் திறப்பதற்குள்
ஆண்டுகள் ஆறு கடந்ததுவோ...
குறும்புச் செயல் சொல்லிச் சிரிக்கும்
உன் முகத்தை இனி எங்கு காண்போமோ...

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார்,
அண்ணிமார், தம்பிமார், மருமக்கள், பெறாமக்கள்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)

விநாயகர் ஸ்ரோர்ஸ், (முன்னாள் பங்குதாரர் குகன் ஸ்ரோர்ஸ், குகன் எரிபொருள் நிலையம்) மீனாட்சி அரிசிஆலை



| நிஜமாக | தேடிக்களைத்து விட்டேன் | நிழலாக |
|---|---|---|
| 29 | உங்களை... | 15 |
| * | ஏங்கும் முன் | * |
| 09 | தாங்கி நின்றீர்கள் | 03 |
| * | கேட்கும் முன் | * |
| 1941 | கொடுத்தீர்கள் | 2008 |
| | வாழ்வின் வழியைக் காட்டினீர்கள். | |

எல்லாவற்றின் மதிப்பையும்
அன்பால் சொன்னீர்கள்
துக்கமோ சுகமோ
உங்கள் அரவணைப்புக்காக
ஏங்குகின்றோம்.

144/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன் மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன்

## அறை வாடகைக்குத் தேவை

நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஆண் ஒருவருக்கு யாழ்.நகரப்பகுதியில் அறை வாடகைக்குத் தேவை.

(சி/17240) (4.3.7)

தொடர்பு: 071 722 8232

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

சங்கத்தானை, சாவகச்சேரி, ஏ 9 றோட் அருகில் சங்கத்தானை ஞானோதயா ரியூட்டறி அருகில் 2 அறை வீடும் கிணறும் சேர்ந்த 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 869 7268, 077 980 6447

(58124)(4.3.7)

## கடை வாடகைக்கு

ஏ9 வீதி, கொடிகாமம் சந்தியில் 52 அடி நீளமும் 11 அடி அகலமும் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய கீழ் மாடி மேல் மாடியுடன் அறை வாடகைக்கு விடப்படும். (சி/17222)(4.3.7)

குறிப்பு: அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 653 4204, 077 493 7585

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கில்னர் ஒழுங்கையில் அமைந்துள்ள ஒரு பரப்பு உறுதிக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 851 8519

(56242)(4.3.7)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாண நகர மத்தியில் முதலாம் குறுக்குத் தெருவில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் வீடொன்று வாடகைக்கு உண்டு. இதனை வீடாகவோ, கல்வி நிறுவனமாகவோ, காரியாலயமாகவோ, களஞ்சியமாகவோ (பாரமான Hard Ware பொருள்களுக்கு அல்ல) பாவிக்கலாம். முற்பகுதியில் வாகனம் நிறுத்தவும் இடமுண்டு.

தேவையுடையவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 072 919 8499 or 071 486 6628

(58157)(4.3.7)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் உள்ள வயோதிப தாய் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு 40-50 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.

(58131) (4.3.7)

தொடர்பு: 077 645 3443

## மணமகள் தேவை

1976 ஆம் ஆண்டு பிறந்த, மிருகசீரிடநட்சத்திரம் 4 ஆம் பாதம், 7 இல் செவ்வாய் கிரக பாவம் 24½ உடைய, கனடா பிரஜாவுரிமை பெற்ற, கனடாவில் நீண்டகாலமாக சுயமாக தொழில் நிறுவனம் நடத்திவரும் யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மண மகனுக்கு அழகும் நற்குணமும் உடைய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(58137)(4.3.7)

தொடர்பு: 077 226 3560

## 4 லீற்றர் வெற்றுக்கான்கள் கொள்வனவு செய்யப்படும்

ஒவ்வொன்றும் 15/= விலையில் 4 லீற்றர் வெற்றுக்கான்கள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: 0777233876

## மணமகள் தேவை

★ 71 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 42¾ பாவமுடைய BA ஆசிரியருக்கு அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகள் தேவை.

★ 78 இல் பிறந்த 7இல் சூரியனும் செவ்வாயும் 25½ பாவமுடைய ஜேர்மனி பிரஜாஉரிமைபெற்ற Phd இஞ்சினியர் மணமகன் வந்துள்ளார். பட்டதாரி மணமகள் தேவை.

★ 75 இல் பிறந்த 8இல் செவ்வாய் 31¼ பாவமுடைய DI Office இல் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

★ 85 இல் பிறந்த இஞ்சினியர் மணமகனுக்கு கதலிக் வேதத்தில் பட்டதாரி மணமகள் 5 அடி 2 அங்குலத்தில் தேவை.

★ 88 இல் பிறந்த பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு கதலிக் வேதத்தில் படித்த அழகான மணமகள் தேவை.

★ 85இல் பிறந்த 11இல் சூரியனும் செவ்வாயும் 45½ பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

★ 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 37 பாவமுடைய MSC இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:
**கமலக்கண்ணன் திருமண சேவை**
இல.62, இராமலிங்கம் வீதி,
முடமாவடி, பூங்கனிச்சோலையடி.
**T.P:0776070862**

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் அறைகள் வாடகைக்குண்டு.

(58142)(4.3.7)

தொடர்பு: 077 609 0837

## நாய் விற்பனைக்கு

இரண்டு வருடம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண் நாய் உடன் விற்பனைக்குண்டு.

விலை ரூபா 15, 000/=

தொடர்பு: 077 615 6807, 021 226 3846

(56452)(4.3.7)

## தென்னந்தோட்டம் விற்பனைக்கு

பளைக்கும் தர்மக்கேணிக்கும் இடையில் உள்ள 35 ஏக்கர் தென்னந் தோட்டம் இரண்டு, மூன்று பகுதிகளாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 729 9031, 072 525 4133

(56735) (4.3.7)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA HIGHER EDUCATION FOR THE TWENTY FIRST CENTURY (HETC) PROJECT WALK IN INTERVIEW

Applications are invited from suitable candidates for the following post to work under the guidance of the Grant Coordinator of the study programme (Physical Science).

**PROJECT MANAGEMENT ASSISTANT (on Contract)**

**Required Qualifications and Skills:**

Should have

- passed G.C.E (A/L) examination,
- knowledge and skills in MS Office applications , email and internet communication,
- written and oral communication skills especially in English to deal with people of diverse backgrounds,
- skills in setting priority and managing multiple assignments
- systematic record keeping skills and
- experience in preparing reports

Must be

- 18-35 years old,
- an initiator in taking responsibilities and
- an efficient team worker

**Remuneration:** Rs.15,000/- per month (fixed)
**Contract period:** End of December 2015
**Recruitment:** By interview. Successful candidates should be able to start work immediately.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV in the prescribed form available in the University website www.jfn.ac.lk relevant documents and National Identity Card on 04.04.2015 at 9.30 am in the Board Room, University of Jaffna, Thirunelvely. Canvassing in any form will be a disqualification.

**Vice-Chancellor**
**University of Jaffna**

(சி/17238)(4.3.7)






# கோணேசப் பெருமான் இன்று வலம் வருவர் நகர் எங்கும்

திருகோணமலை, மார்ச் 28
ஈழத்தில் வரலாற்றுச்சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தில் கடந்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற மகாகும்பாபிஷேகத்தை அடுத்து நேற்றுடன் மண்டாலாபிசேஷம் நிறைவடைந்தது.
இன்று சனிக்கிழமை மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமானின் நகர்வலம் இடம் பெறும்.
இம்முறை நகர்வலம் ஒருநாள் மட்டுமே இடம் பெறுவதால் திரு கோணமலை பிரதான வீதிகளுடாக மட்டுமே நகர்வலம் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித் துள்ளது.
இன்று பி.ப. 4 மணிக்கு மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமான் ஆலயத்தி லிருந்து புறப்பட்டு கோட்டை வாசல் வழியாக வலது பக்கம் ஏகாம்பரம் வீதி, வீரநகர் புனி கிணற்றடி, வலது பக்கம் திருக்கடலூர் பத்திரகாளி அம்பாள் கோயில், திரும்பி வந்து ரயில் நிலையவீதி, சனீஸ்வரன் கோயில்; கிருஷ்ணபகவான் கோயில் மடத் தடி சந்தி, இடது பக்கம் மத்திய வீதி, மணிக்கூட்டு கோபுரசந்தி, வலது பக்கம் கடற்படைத்தள வீதி, வலது பக்கம் பிரதான வீதி, மடத்தடிச் சந்தி, இடது பக்கம் மாரியம்மன் கோயில், திருஞானசம்பந்தர் வீதி, சிவன் கோயில், கற்பகப் பிள்ளையார் கோயில், முத்துக் குமாரசுவாமி கோயில், இடது பக்கம் இராஜவ ரோதயம் வீதி, வலது பக்கம் வித்தியாலயம் வீதி, பத்திரகாளி அம்பாள் கோயில், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வீதி, இரட்ண சிங் கப்பிள்ளையார் கோயில்,
வலது பக்கம் கிறீன் வீதி, இடது பக்கம் மின்சார நிலைய வீதி, நீதிமன்ற வீதி, வலது பக்கம் சுங்க வீதி, இடது பக்கம் கந்தசுவாமி கோயில் வீதி, வில் லூன்றிக் கந்தசுவாமி கோயில், கந்தசுவாமி கோயில் இடது பக்கம் கடற்படைத் தளவீதி, நீதிமன்ற வீதி, மனையா வெளி வல்லபசக்தி அம் பாள் கோயில், அதே வழியில் திரும்பி நீதிமன்ற வீதி, வலது பக்கம் டைக் வீதி, வலது பக்கம் கடற்படைத்தள வீதி, வலது பக்கம் பிரட்றிக் கோட்டை வீதி வழியாக கோணேசப் பெருமான் திருக்கோயிலைச் சென்றடைவார். (வ–40)

## கைதடி ப. கூ. ச. கிளைக்குழு உறுப்பினர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 28
தென்மராட்சி மேற்கு, கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடத்தப்படும்.
இந்த சங்கத்தின் 11 கிளை நிலையங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படுவார்கள் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.
கைதடி வடக்கு மினி கூட்டுறவு நகர், கைதடி மத்தி, கைதடி மேற்கு, நாவற்குழி மினி கூட்டுறவுநகர், கோயிலாக்கண்டி, கைதடி நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கைதடி நாவற்குழி தெற்கு மினி கூட்டுறவு நகர், கோயிலாக் கண்டி மத்தி ஆகிய சங்க கிளை நிலையங்களுக்கு இந்தத் தேர்தல் நடத்தப்பட வுள்ளன.
மேற்படி குறிப்பிட்ட கிளைகளில் இடம்பெறும் கிளைக்குழு தேர்தலில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனியான அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிவித்தல் கிடைக்காதவர்களும் தத்தம் கிளை நிலையங்களுக்கு சமுகமளிந்து தமது வாக்கைப் பயன் படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (வ–17)

## பங்குனிப் பொங்கல்

தென்மராட்சி, மார்ச் 28
தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பெரும்படை கண்ணகை அம்பாள் பங்குனிப் பொங்கல் உற்சவம் இன்று இரவு 7 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8 மணிக்கு தனங்களப்பு முனீஸ்வரன் ஆலயத்திலிருந்து மடை பண்டங்களுடன் காவடிகள், பாற்செம்பு ஆகியவை ஆலயத்துக்குக் கொண்டுசெல்லப் பட்டு இரவு 7 மணிக்கு பொங் கல் இடம் பெறும்.
உற்சவத்தின் எட்டாம் மடை எதிர் வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும். (வ–9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
செம்மணி இந்து மயான சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
மயான மண்டபத்தில் மயான சபைத் தலைவர் லயன் சி.இலட்சுமிகாந் தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக சி.வீ.கே. சிவஞானம் கலந்துகொள்ள வுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் வ.க.துரைசிங்கம், வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர், கிராம அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
பொதுக்கூட்டத்தில் அறிக்கைகள் மற்றும் மனு வாசிப்பு, புதிய நிர்வாகத் தெரிவு ஆகியன இடம்பெற வுள்ள தாகவும் இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் செம்மணி இந்து மயான சபை தெரிவித்துள்ளது. (வ–10)


நன்றியுடன் வாழ்த்துக்கள்



பற்றிக் டிறஞ்சன்
SLAS-1

Best Wishes

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை யாழ். மாவட்ட உதவி ஆணையாளராகவும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 மாசி மாதம் வரை வடமாகாண பிரதி ஆணையாளராகவும் இருந்து பல நெருக்கடியான காலகட்டங்களிலும் விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி இன்று **வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராக** பதவி உயர்வு பெற்றுச்சென்ற **பற்றிக்டிறஞ்சன்** அவர்கள் மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று விவசாயப் பெருமக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் தன்னுடைய அளப்பரிய சேவையினைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவர் வாழ்வில் வளமோடு வாழ வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையச்சமூகம்.


# இலவச சமஸ்கிருத வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் நடத்தும் இலவச சமஸ்கிருத வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தில் ஆரம்பமாகின்றன.
இன்று காலை 9 மணிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல் கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.பிரணஹார்த்திகரக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார். சிறப்பு விருந்தினர்களாக பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா, பிரம்மஸ்ரீ சு.நவனீத கிருஷ்ண சர்மா ஆகியோர் கலந்து கொள் வார்கள்.
இதுவரை பதிவுகளை மேற் கொள்ளாதவர்களுக்கு இன்றைய தினம் பதிவுகளை மேற்கொண்டு வகுப்புகளில் சமுகமளிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 28
தேச மார்க்சிய குழு நடத்தும் தேசிய அரசும் அதன் எதிர் காலமும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு டி.சி.எம். தனியார் கல்வி நிலையத்தில் சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலையில் தற்போது அதிபராகக் கடமையாற்றும்
திருமதி **செல்வராணி செல்லையா**
(Hinduism, Trd. BA, Dip in Ed, SLPS-1)

மேற்படி பாடசாலையில் 21.04.1997 தொடக்கம் இன்று வரை அதிபராகக் கடமையாற்றியமைக்காக அதிபர் சேவையில் SLPS-1 இற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் **கொழும்பு இராஜகிரிய மகா வித்தியாலயத்தில் 10.03.2015** இல் நடைபெற்றது. இவர் தனது சேவையைச் சிறப்பாக நிறைவு செய்த பின்னர் ஓய்வுக்காலமும் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம்வல்ல இறைவன் இவருக்கு உடல்உள ஆரோக்கியத்தையும் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: **சகோதரர்களும், பிள்ளைகளும், மைத்துனி சரோஜினிதேவி.**
(58173)(4.7.3)



யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்
மணிவிழா நாயகனை மனம் நிறைந்து
வாழ்த்துகின்றோம்



உயர்திரு. **அ. சா. அரியகுமார்**
SLPS-1
(சமாதான நீதிவான்)

Congratulations!

செம்மை பெறு சீர் நிறை அதிபரே
எம்மை சிறப்புடன் வழி நடத்தும் வித்தகரே
அறுபதாம் அகவையைக் காணும் நன்நாளில்
அனைவரும் வாழ்த்துகின்றோம் வாழ்க!

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/பரு. சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை.
(58451)(4.7.3)



TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# அதியுயர் ஊடக விருதுகள் 2014

சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும்
16 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்குக் கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிரிவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96,பேணார்ட் சொய்சா மாவத்தை, (கிருல வீதி), கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 10 ஏப்ரல் 2015 ஆகும்




# பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்

**ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்**

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டு
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000


70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830–1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900–1730
ஞாயிறு: 0900–1600 (விசாரணைகளுக்கு மட்டும்)

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk



## மீள்தன்மை கொண்ட புதிய (OLED) ஓலெட் திரை

LG நிறுவனம் ஸ்மார்ட் கைபேசிகள் மற்றும் டேப்லட்களில் பயன்படுத்தக்கூடிய மீள்தன்மை கொண்ட புதிய OLED தொடுதிரையை உருவாக்கியுள்ளது.

இது சாதாரண கிளாஸ் திரைகளைப் போன்று துல்லியம், வர்ணங்களை உருவாக்கும் திறன் என்பவற்றைக் கொண்டுள்ளது.

தற்போது காணப்படும் வளைதன்மை கொண்ட திரைகள் மெல்லிய கிளாஸினால் ஆக்கப்பட்டுள்ளதுடன், அவை 75 மில்லி மீற்றர்கள் வரை வளையக்கூடியன. ஆனால் தற்போது உருவாக்கப்பட்டுள்ள இத்தொடுதிரை பிளாஸ்ரிக் தொழில்நுட்பத்தை உள்ளடக்கி 30 மில்லி மீற்றர் ஆரை கொண்ட வட்டத்துக்கு இணையாக வளைக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ.....

சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். /காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/அனுமதிக் கட்டணம் 250/= /அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

30 அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# இந்தியர்களை ஏற்றிவர விரைகின்றன கப்பல்கள்

## யேமனில் நிலவும் பதற்றத்தை அடுத்து



டில்லி,மார்ச் 28
யேமனில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளதால் அந்த நாட்டில் வசிக்கும் இந்தியர்களை அழைத்து வருவதற்கு இந்திய மத்திய அரசு சிறப்புக் கப்பல்களை அனுப்பியுள்ளது.

யேமன் நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சியாளர்கள், அந்த நாட்டின் அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளளனர். அந்த நாட்டின் பல்வேறு இடங்களிலும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு யேமனின் தலைநகர் சனாவையும் கைப்பற்றியுள்ளனர். யேமன் நாட்டின் ஜனாதிபதி மன்சூர் காதியின் கோரிக்கையை ஏற்று சவூதி அரேபியா உள்ளிட்ட நாடுகளும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல்களை தற்போது ஆரம்பித்துள்ளனர். யேமனில் தற்போது போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளதையடுத்து அங்கு வசிக்கும் இந்தியர்களை மீட்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கமைவாக சிறப்புக் கப்பல்கள்களை யேமன் நாட்டுக்கு அனுப்பியுள்ளது. யேமன் நாட்டில் 3 ஆயிரத்து 500 இந்தியர்கள் வசிப்பதாகவும், அதில் 2 ஆயிரத்து 500 கும் மேற்பட்டவர்கள் யேமனின் தலைநகர் சனாவில் வசிப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. (14)

## ருசியான மோடி மாம்பழம்



லக்னோர்,மார்ச் 28
புதிய ர்கமுடைய சுவையான மாம்பழம் ஒன்றுக்கு பிரதமர் நரேந்திர மோடியின் பெயரை உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் விவசாயி ஒருவர் சூட்டியுள்ளார்.

உத்தரப் பிரதேசம் லக்னோவில் உள்ள மலிஹாபாத் பகுதியை சேர்ந்தவர் ஹாஜி. கலிமுல்லா என்ற விவசாயி. தனது தோட்டத்தில் 300 இற்கும் அதிகமான பல்வேறு ரகங்களையுடைய மாம்பழங்களை உற்பத்தி செய்து வருகிறார். தற்போது புதிய ரக மாம்பழத்தை உற்பத்தி செய்துள்ள குறித்த விவசாயி அந்த மாம்பழம் சுவை அதிக சுவையுடன் இருப்பதுடன் ஏனைய மாம்பழங்களின் சுவையையும் அதிகமாக இருப்பதாலும் பிரதமர் நரேந்திர மோடியின் பெயரைச் சூட்டியுள்ளார். பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத்திலும் அந்த மாம்பழத்தை உற்பத்தி செய்யத்திட்டமிட்டுள்ள அந்த விவசாயி, இதற்கு முன்னர் நடிகை ஐஸ்வர்யா ராய், கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் ஆகியோரின் பெயரையும் மாம்பழங்களுக்கு சூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## குழந்தை வரம் கேட்டு நாக்கை அறுத்த இளைஞன்


சென்னை,மார்ச் 28
குழந்தை வரம் கேட்டு நாக்கை அறுத்து ஆலயம் முன்பாக வைத்த இளைஞரின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையின் பொன்னேரி கிராமத்தில் உள்ள வேடியப்பன் ஆலயம் முன்பாக இருந்த சுதாகர் என்பவர் திடீரென தனது கையில் வைத்திருந்த பிளேற்றை எடுத்து நாக்கை அறுத்து, ஆலயத்தின் முன்பாகவிருந்த கல்லின் மீது வைத்துள்ளார். அதனால் இரத்தம் வழிந்த நிலையில் கிடந்த அந்த இளைஞரை மீட்டு, அந்தப்பகுதி மக்கள் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். விசாரணைகளின்போது திருமணமாகி 3 வருடங்களாக குழந்தை இல்லாத காரணத்தால் குழந்தை வரம் கேட்டு கடவுளுக்கு காணிக்கையாக நாக்கை அறுத்துக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார். (14)



பிரான்ஸ் மலைப்பகுதி விமான விபத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 4 மொழிகளிலான கல்வெட்டு ஜேர்மனியில் அமைக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்தில் ஊழியர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (14)

## குளிர்சாதனப் பெட்டியில் குழந்தையின் சடலங்கள்



வொஷிங்டன்,மார்ச் 28
அமெரிக்காவில் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து இரண்டு குழந்தைகள் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தில் உள்ள டெட்ரொய்ட் நகரின் வீடொன்றில் இருந்து அந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வருட காலமாக குளிர்சாதனப் பெட்டிக்குள் அந்த குழந்தைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும், சந்தேகத்தின் பெயரில் குழந்தைகளின் தாயார் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டபோது தனது குழந்தைகளைத் தானே கொலை செய்ததாக அந்தத் தாயார் வாக்குமூலம் அளித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (14)

## சிசுவை விற்க விளம்பரம்

பகோடா,மார்ச் 28
கொலம்பியாவை சேர்ந்த பெண் ஒருவர் தனது வயிற்றில் வளரும் சிசுவை விற்க விளம்பரம் செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொலம்பியாவில் சமூக நலத்துறையில் தொழில் புரிந்த 27 வயதுடைய பெண்ணொருவர் தன்து வயிற்றில் உள்ள இரண்டு மாதங்களான சிசுவை 80 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு விற்கத் தயாராக இருப்பதாக இணையத்தளம் ஒன்றில் விளம்பரம் செய்துள்ளார். குறித்த பெண்ணுக்கு ஏற்கனவே மூன்று குழந்தைகள் உள்ளனர். எனினும் மீண்டும் இவர் கர்ப்பம் தரித்ததால் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)

## தாடி வளர்க்கும் அமெ.பெண்




வொஷிங்டன்,மார்ச் 28
அமெரிக்காவில் ஆண்களைப் போன்று நீண்ட தாடியுடன் ஒரு பெண் வசித்து வருகிறார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சன்னிவேல் நகரத்தைச் சேர்ந்தவர் அனாலிசா ஹாக்குல்மேன். அவருக்கு 13 வயதான போது, ஒரு வகை நோய்த்தாக்கத்தால் அவரது உடலில் அளவுக்கு அதிகமான முடி வளர்ச்சி காணப்பட்டுள்ளது. மேலும் உடல் மட்டுமன்றி ஆண்களை போல் தாடியும் அவருக்கு வளர ஆரம்பித்துள்ளது. இளம்வயதில் சில முறை தாடியை நீக்கியதும், அது வேகமாக வளரத் தொடங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து, தாடியை நீக்குவதை அடியோடு விட்டுவிட்டு, அதனை வளர்க்க ஆரம்பித்துள்ளார். தற்போது திருமணம் செய்து 5 வருடங்கள் கடந்துள்ள அவர் தனது நீண்டகாலத் தாடியை நீக்க முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (14)

## ‘ஜெ’ வழக்கு தீர்ப்பு விரைவில்

சென்னை,மார்ச் 28
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான மேல் முறையீட்டு மனுவின் தீர்ப்பு இந்த மாத இறுதியில் வெளியாக வாய்ப்புள்ளது.

அ.தி.மு.க வின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்த பெங்களூர் சிறப்புநீதிமன்றம் நான்கு வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இத்னை எதிர்த்து நான்கு பேரும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த நிலையில் இந்த மாத இறுதியில் அல்லது எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் தீர்ப்பு வெளியாகலாம் என தகவல் வெளியாகியுள்ளது. (14)

## நால்வருக்குத் தூக்குத்தண்டனை

இஸ்லாமாபாத், மார்ச் 28
பாகிஸ்தானில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட மேலும் 4 பேர் கடந்த புதன்கிழமை தூக்கிலிடப்பட்டுள்ளனர். அந்த நாட்டின் சிந்து மாகாணத்திலுள்ள சிக்கூர் சிறையில் 2 பேரும், சஹிவால், பஹாவல்பூர் ஆகிய நகரங்களிலுள்ள சிறைகளில் தலா ஒருவரும் என நான்கு பேர் தூக்கிலிடப் பட்டுள்ளனர். (14)

## லீ குவான் யூ இறுதிச்சடங்கில் கிளிண்டன் பங்கேற்பார்



வொஷிங்டன், மார்ச் 28
சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூ உடல்நலக்குறைவு காரணமாக கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார். அவரது இறுதிச்சடங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அதில் கலந்துகொள்ள முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் தலைமையிலான அமெரிக்கக் குழுவினர் சிங்கப்பூருக்குச் செல்ல விருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. சிங்கப்பூரின் நாடாளுமன்ற வளாகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக லீ குவான் யூ-வின் பூதவுடல் வைக்கப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் அணி அணியாக திரண்டு வந்து அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்திய பிரதமர் மோடி உள்ளிட்ட பல ஆசிய நாட்டு தலைவர்களும், லீ குவான் யூ-வின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## ஐந்து மாடிக்கட்டத்தில் தீ விபத்து



நியூயோர்க், மார்ச் 28

அமெரிக்காவின் மன்ஹேட்டன் நகரில் ஐந்து அடுக்கு மாடி கட்டிடத்தில் பயங்கர சத்தத்துடன் திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. அத்துடன் அந்தக் கட்டடத்துக்கு அருகே இருந்த மற்றொரு அடுக்கு மாடிக் கட்டடமும் இடிந்து விழுந்துள்ளது.

மன்ஹேட்டன் நகரின், நியூயோர்க் பல்கலைக் கழகத்துக்கு அருகேயுள்ள ஈஸ்ட் வில்லேஜில், நேற்று முன்தினம் மாலை அந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தீயணைப்பு துறைக்கு அழைப்பு வந்துள்ளது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த சுமார் 250 தீயணைப்புப்படை வீரர்கள், கடுமையாகப் பரவிய தீயை தீயணைப்பு வாகனம் ஊடாக தண்ணீரை அடித்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்துள்ளனர்.

ஈஸ்ட் வில்லெஜின் இரண்டாம் அவென்யூவில் உள்ள 121 மற்றும் 123 என்ற அந்த இரண்டு அடுக்கு மாடிக் கட்டடங்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதன் போது 123 என்ற அடுக்கு மாடிக் கட்டடமும் இடிந்து விழுந்துள்ளது. பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ள 121 என்ற கட்டடம் இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது. அந்த விபத்தின் போது 30 பேர் காயமடைந்துள்ளதாகவும், அதில் 3 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் சட்ட அமலாக்கத் துறை அறிவித்துள்ளது.

# யேமனில் போர் உக்கிரம்; நாடுகள் பலவும் ஆதரவு

ஏடன், மார்ச் 28

யேமன் நாட்டில் உள்நாட்டுப்போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளதால், சவுதி அரேபியா வான் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

அரேபிய தீபகற்பத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள யேமன் நாட்டின் ஜனாதிபதியாகவுள்ள அபேத்ரப்போ மன்சூர் காதியின் அரசுக்கு எதிராக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

அந்த கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருவதால் யேமனின் பல்வேறு பகுதிகளிலும் தாக்குதல்களைத் தொடங்கியுள்ள கிளர்ச்சியாளர்கள் கடந்த மாதம் யேமன் தலைநகர் சனாவை கைப்பற்றியுள்ளதுடன், சன்னி பிரிவினரின் பகுதிகளை நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளனர்.

அதன் காரணமாக ஜனாதிபதி மன்சூர் காதி தலைநகர் சனாவை விட்டு வெளியேறி ஏடன் நகரில் தஞ்சம் புகுந்துள்ளார். தனது ஆதரவாளர்களுடன் தொடர்ந்து அங்கே முகாமிட்டுள்ள மன்சூர் காதி தனது அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை முறியடிக்க உதவுமாறு சவுதி அரேபியாவுக்கு நேரடி வேண்டுகோளை விடுத்திருந்தார். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சவூதிஅரேபியா ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் களத்தில் இறங்கியுள்ளது.

யேமனின் தலைநகர் சனா மற்றும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் வசமிருக்கும் பகுதிகளில் 100 இக்கும் மேற்பட்ட சவுதி அரேபிய போர் விமானங்கள் அதிரடியாக குண்டுகளை வீசியுள்ளன. அதன் போது



கிளர்ச்சியாளர்களின் ஏராளமான போர் விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து உடனடியான தகவல் எதுவும் அறிவிக்கப்படவில்லை. மேலும் சவுதி அரேபியாவை சேர்ந்த 1 லட்சத்து 50 ஆயிரம் படை வீரர்கள[illegible] யேமனில் குவிக்கப்பட்டுள்ளத[illegible] தகவல்கள் வெளியாகியுள்ளன

சவுதி அரேபியப் படைகளுடன், கட்டார், ஜோர்தான், குவைத், பஹ்ரைன், எகிப்து, மொராக்கோ மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்பட 10 நாடுகளின் படைகளும் இந்த தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளன. மேலும் பாகிஸ்தான் மற்றும் சூடான் போன்ற நாடுகளும் இந்தத் தாக்குதலல்களில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளன.

யேமன் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டுள்ள அரபுப் நாட்டு படைகளுக்கு ஆயுத விநியோகம் மற்றும் உளவுத்துறை உதவிகளை செய்ய அமெரிக்காவும் முன் வந்துள்ளது. இதனால் யேமனில் மிகப்பெரும் தாக்குதல் நடைபெற வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் யேமனில் நிலவி வரும் உள்நோட்டுப் போர் கவலையளிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஹவுத்தி படையினரின் வசமிருந்த ஏடன் விமான நிலையத்தை மீட்க, ஜனாதிபதி மன்சூர் காதியின் ஆதரவு படை யினர் கடும் தாக்குதல்களை நடத்தினர் பெரும் சமரின் பின்னர் ஏடன் விமான நிலையம் மீட்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே யேமனில் உள்நாட்டுப்போர் தீவிரமடைந்துள்ளதால் உலகம் முழுவதும் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, கச்சா எண்ணெய் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எண்ணெய் வளம் மிகுந்த சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் இருந்து வரும் எண்ணெய் வாகனங்கள் ஏடன் வளைகுடா வழியாகவே ஐரோப்பிய நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது. (14)

## சிலி நாட்டில் திடீர் வெள்ளம்



சண்டியாகோ,மார்ச் 28

உலகின் மிக வறண்ட பிரதேசங்களில் ஒன்றான சிலியின் அடகமா பாலைவனப் பகுதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாக, ஆயிரக் கணக்கானவர்கள் குடிதண்ணீர் மற்றும் மின்சார வசதிகளின்றித் தவித்து வருகின்றனர்.

ஆண்டெஸில் பெய்த கனமழையின் காரணமாக, தாழ்வாக இருந்த பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் நகரங்களிலும் வெள்ள நீர் புகுந்துள்ளது. காபியாபோ நகரின் ஆற்றுக் கரைகளும் உடைக்கப்பட்டுள்ளன.

அந்தப்பகுதியில் நிலச்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதால் ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிலி பாலைவனப் பிராந்தியத்தில் மழை நீடிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளதால் சானரல் என்ற பாலைவன நகரில் நிலைமை மோசமாகியுள்ளது.

கடந்த இருதினங்களாக கடும் புயல் வீசுவதால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருப்பதுடன், மின்சாரம், தொலைத்தொடர்பு வசதிகளும் பாதிப்படைந்துள்ளன. லட்சக் கணக்கான மக்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தென்பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயும் வறட்சியும் சிலி நாட்டுக்கு சிக்கலை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் இந்த வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (14)

## தஞ்சம் கோரு[illegible]ோர் அதிகரிப்பு

லண்டன்,மார்ச் 28

தொழில்மயமான நாடுகளில் தஞ்சம் கோரும் அகதிகளின் எண்ணிக்கை கடந்த வருடம் 50 சதவீதத்தால் அதிகரித்து எட்டு லட்சத்து 60 ஆயிரத்தையும் தாண்டியுள்ளது.

சிரியாவில் நடந்துவரும் போர் காரணமாக ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். சிரியாவிலும் ஈராக்கிலும் நடந்து வரும் மோதலே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்று அகதிகள் நலனுக்கான ஐ.நா அமைப்புத் தெரிவித்துள்ளது.

துருக்கி, லெபனான், ஜோர்டான் போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள பல லட்சம் பேர் ஐ.நா அகதிகள் அமைப்பு வெளியிட்டுள்ள எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை.

கடந்த வருடம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் விண்ணப்பங்களைப் பெற்ற ஜேர்மன் தான் உலகில் அதிக அளவில் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்களைப் பெற்ற நாடாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## பிரேஸிலில் நாய்களுக்கான மையம்



சாபாலோ,மார்ச் 28

குழந்தைகளுக்கு மையங்கள் இருப்பதை அறிந்திருக்கின்றோம், ஆனால் பிரேஸிலில் வீட்டில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளான நாய்களுக்கென பிரத்தியேக மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

அந்த நாட்டின் சாபாலோ மாகாணத்தில் நாய்களுக்கான டாகி டே கேர் என்ற பெயரில் மிகப்பெரிய அளவிலான மையம் ஒன்று இயங்கி வருகிறது. பெரும் நகரங்களில் வீட்டில் உள்ளவர்கள் வேலைக்கு செல்வதால் செல்லப் பிராணிகள் வீட்டில் தனியாக இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. அதனைத் தடுக்கும் வகையில் வேலைக்குச் செல்பவர்கள் தங்களது செல்லப் பிராணிகளை அந்த மையத்தில் விட்டுச் செல்கின்றனர். அந்த மையத்தில் நாய்களுக்கு ஆராக்கியமான முறையில் தயாரிக்கப்பட்ட காய்கறி மற்றும் இறைச்சியுடன் கூடிய உணவு, உடற்பயிற்சி, புத்துணர்வு குளியல் போன்ற சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (14)

## விமான விபத்துக்கு துணை விமானியே காரணம்

பரிஸ், மார்ச் 28

ஜேர்மன் விமானத்தை துணை விமானியே அல்ப்ஸ் மலையில் மோதி விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என்று விசாரணை அதிகாரி ஒருவர் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஸ்பெயின் நாட்டின் கடலோர நகரமான பார்சிலோனாவில் இருந்து ஜேர்மன் டஸ்சல்டோர்ப் நகருக்கு புறப்பட்ட ஜெர்மன்விங்ஸ், 4யூ 9525 விமானம் பிரான்ஸின் அல்ப்ஸ் மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது. அந்த விமானத்தில் பயணம் செய்த 150 பேர் உயிரிழந்தனர்.

அந்த விமான பயணத்தின்போது 28 வயதான அண்ட்ரியாஸ் லுபிட்ஸ் துணை விமானியாகச் சென்றுள்ளார். விமானி காக்பிட்டை விட்டு வெளியே வந்தபின்னர் காக்பிட் பூட்டிக்கொண்டது. அதன் பின்னர் காக்பிட்டில் இருந்த துணை விமானி கதவைத்திறக்காது இருந்துள்ளார். மலைக்கு மேல் 32 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும்போது, திட்டமிட்டு மிகவும் சாமர்த்தியமாக விமானத்தை செலுத்த வேண்டும். மேலும், தரையில் இருந்து காக்பிட்டுக்கு பலமுறை தகவல் தொடர்பு கொண்டும். அங்கே இருந்து ஒரு பதிலும் வரவில்லை. விமானி பெயர் சொல்லாமல் பலமுறை சத்தம்போட்டுக் கதவைத் தட்டியுள்ளார். ஆனால் துணை விமானி அமைதியாக இருந்ததைப் பார்க்கும் போது அந்த விபத்துக்கு அவரே காணமாக இருக்கக்கூடும் எனவும் அதிகாரி தெரிவித்துள்ளார். (14)

## சிறுவர்களைச் சேர்க்கும் ஐ.எஸ். தீவிரவாதிகள்

டமாஸ்கஸ்,மார்ச் 28

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களது அமைப்புக்கு ஆள்களைச் சேர்த்து வரும் நிலையில் சிரியாவில் தங்கள் பகுதியில் வாழும் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களிடம் சென்று அவர்களது குழந்தைகளை தங்கள் முகாமுக்கு அனுப்பும்படி தூண்டுகின்றனர்.

சிறுவர்களின் மனதில் வன்முறையை விதைத்து, ஆயுதங்கள் கையாள்வது, எதிரிகளைத் தாக்கிச் சமாளிப்பது உள்ளிட்ட பயிற்சிகளையும் அ[illegible]த்து வருகின்றனர். மேலும் பண [illegible]சை போன்ற பல்வேறு வசதி[illegible]ள செய்து அவர்களை சொகுசு [illegible]க்கைக்கு அடிமையாக்கியுள்[illegible]ர். சொகுசு வாழ்க்கை ஆசைக்[illegible]டிமையாகி, இதுவரை 400 சி[illegible]ர்கள் ஐ.எஸ். தீவிரவாத அமை[illegible]ல் இணைந்துள்ளதாக சிரியா [illegible]த உரிமைகள் கண்காணிப்பு [illegible] தகவல் தெரிவித்துள்ளது.

# இன்னிசையால் சைவம் வளர்த்த பெருமகனார்

லயன் சி.ஹரிகரன்,
(உறுப்பினர்–வலி.வடக்குப் பிரதேச சபை.)

## சிவானந்தவாரிதி சிவத்திரு வ.குமாரசாமி ஐயா



கலியுகம் என்று அழைக்கப்படுகின்ற இந்தக் காலத்தில், ஆன்மிகத்தின் மீது மாணவர்களுக்கு நாட்டம் மிகவும் குன்றி வருகின்றது. தென்னிந்திய சினிமா, சின்னத்திரை போன்றவற்றில் நாட்டம் அதிகரித்து வருகின்றது. சைவ கலாசாரம் மிக்கவர்கள் யாழ்ப்பாணத்து மக்கள் என்று முன்பு எமது மக்கள் பிற இடத்தவர்களால் போற்றப்பட்டார்கள். மீண்டும் அந்த சைவக் கலாசாரத்துக்கு மக்களை மீட்கவேண்டும் என்று இன்னிசைச் சொற்பொழிவுகளை நடத்தி சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பெரிதும் பங்காற்றியவர் பிரசங்கவாருதி சிவத்திரு வ.குமாரசுவாமி ஐயா.

1945ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி காங்கேசன்துறை சிவத்திரு வல்லிபுர ஐயா–காமாட்சி அம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனாக இவர் பிறந்தார். தமது கல்வியை காங் கேசன்துறை அமெரிக்கமிஷன் ஆங்கில பாடசாலை, நடேஸ்வராக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் க.பொ.த. உயர்தரம் வரை கற்று தமிழ், ஆங்கிலம், சமயம் போன்ற கல்வித்துறை களில் மிகப் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

ஐயா 1963ஆம் ஆண்டு தமது 18 ஆவது வயதில் சுன்னாகம் சிவஸ்ரீ மாணிக்க தியாகராஜக் குருக்கள் புத்திரன் பண்டிதர் குமாரசாமி ஐயா தலைமையில் காங்கேசன்துறை அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் தமது கன்னிப் பிரசங்கத்தை ஆரம்பித்து இன்றுவரை இன்னிசையுடன் கூடிய சொற்பொழிவை ஆற்றிச் சைவ மக்களின் உள்ளத்தில் நிலையான இடத்தைத் தமதாக்கிக் கொண்டவர். “இன்னிசையால் தமிழ்பரப்பும் குமாரசுவாமி” என்று போற்றப்படும் அளவுக்கு இவரது சொற்பொழிவுகள் அமைந்துள்ளன. கேட்போரின் உள்ளத்தைக் கவரும் தன்மையுடையவை. மாற்று மதத்தவர்கள் கூட இவரின் சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறும் நிகழ்வை இன்றும் பல இடங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஐயா ஏழாலை களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள், அருள்மிகு செல்வச்சந்நிதி வேற்பெருமானின் திருவருளில் பூரண நம்பிக்கை கொண்டு அவர்களின் திருவருளினாலேயே தாம் தமது துறையில் மேலோங்கி வருவதாக உணர்ந்து கொண்டவர். இதனால் இவர் இந்தத் துறையில் பிரபல்யம் பெற்று சிவானந்த வாரிதி, சைவமாமணி, இசைஞான திலகம், வாரியார் வாரிசு, அருள் ஞானவித்தகர், சித்தாந்தவித்தகர், செந்தமிழரசு, அருள்மொழியரசு, வண்டமிழ்வேந்தன், தத்துவமுத்து, சைவத்தமிழிசை வாரிதி, அருளமுதச் சொல்வாரி, வியாசானுக்கிரகவாசகமாமணி, செந்தமிழ் சுரபி, சைவாசாரியசிகாமணி போன்ற பல பட்டங்களையும் பல தங்க, வெள்ளிப் பதக்கங்களையும் தமதாக்கிக் கொண்டவர். இவரின் இசை கேட்போரை மெய்மறக்கச் செய்யும்.

மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம், தேவி பாகவதம், மகாபக்த விஜயம் போன்ற புத்தகங்களில் புராண வரலாறுகளைக் கையாண்டு அதே நேரத்தில் அதற்குரிய தத்துவார்த்த விளக்கங்களையும், இவைகள் மூலமாக எமது வாழ்வியலில் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகளையும் மிக விளக்கமாக சிறுவர் முதல் முதியோர் வரை புரிந்துகொள்ளக் கூடிய இலகு தமிழில் எழுத்துருவாக்கி நல்ல சைவ இலக்கிய நூல்களூடாகவும் சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், கி.வா.ஜெகன்நாதன் ஐயா ஆகியோரிடம் நேரடியாக அருளாசியைப்பெற்று, அவர்களின் நூல்களைக் கற்று வந்தமையினாலேயே தாம் மேல் நிலைக்கு வந்தார் என்று தமது பக்தர் களிடம் அடிக்கடி கூறுவார். இவர் வலி. வடக்கு பிரதேச சபையில் நூலகராகக் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகப் பதவி வகித்த காரணத்தினால் அங்கு பல நூல்களைக் கற்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தமை தமது குருநாதன் செல்வச்சந்நிதி வேலவனின் பெருங்கருணையெனக் கூறி மெய்யுருகுவார்.

சிவஸ்ரீ கைலாயக்குருக்கள், மௌனகுரு கடவுள் சுவாமிகள், குடைச்சுவாமிகள், சபாரட்ணம் சுவாமிகள் போன்ற சித்த புருஷர்களை ஞான குருவாகப் பெற்றுத் தமது வாழ்க்கையைத் தெய்வீகமாக்கிக் கொண்டார். செல்வச் சந்நிதி, சந்நிதியான் ஆச்சிரமத்துடன் மிக நெருக்கமானவர். ஆச்சிரம முதல்வர் சிவத்திரு மோகன தாஸ் சுவாமிகளின் நன்மதிப்புக்கும் ஆசிக்குமுரியவர். ஆச்சிரம சைவக்கலைப் பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் “ஞானச்சுடர்” என்னும் சஞ்சிகையில் “மானிடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் மகாபாரதத்திலிருந்து” என்ற தலைப்பில் 10 ஆண்டுகள் எழுதப்பட்ட மகாபாரதம் பகுதி I,II பேரவையினால் வெளியிடப்பட்டது. “ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் மௌனகுரு கடவுள் சுவாமிகள்” என்ற நூலும் ஐயா அவர்களால் ஆக்கப்பெற்றது.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட தமிழ் விழாவில், ஐயா ஆற்றிய சமய, தமிழ்ப் பணிகளைக் கௌரவித்து தமிழ் ஆராய்ச்சியாளரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவால் “மாருதப்புரவீகம்” என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றார்.

சைவ உலகுக்கு அரும் சேவையாற்றி வரும் ஐயா இன்னும் பல ஆண்டுகள் இப்பிரபஞ்சத்தில் வாழ்ந்து மேன் மேலும் பல சைவப் பணிகளை ஆற்றி இறையின்பம் அடைய வேண்டுமென அன்னை வசந்த நாகபூஷணி அம்பிகையையும், செல்வச்சந்நிதி வேலவனையும் மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

# 4ஆவது ஆண்டில் கால் பதிக்கும் நொதன் சென்றல் வைத்தியசாலை

### விரைவில் டயலிசிஸ் சிறுநீரகமாற்று சிகிச்சைப்பிரிவுகள் அமைக்கத்திட்டம்

யாழ்ப்பாண மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்கிவரும் நொதன் சென்றல் வைத்தியசாலை கடந்த 25ஆம் திகதி தனது நாலாவது ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ளது. கடந்த மூன்று வருட காலமாக யாழ். மக்களுக்கு மட்டுமல்லாது வடகிழக்கில் வாழும் மக்களுக்கும் நியாயமான கட்டணங்களில் தரமான வைத்திய சேவையை வழங்கிவரும் நொதன் சென்றல் வைத்திய சாலை எதிர்காலத்தில் மக்கள் நலன் கருதி மேலும் பல நவீன வைத்திய சேவைகளை வழங்கவுள் ளதாகவும் இதன் முதற் கட்டமாக கொழும்பு வெஸ்ரேன் இன்பொமரி வைத்திய சாலையுடன் இணைந்து விரைவில் டயலிசிஸ் சிகிச்சைப் பிரிவும் அதனைத் தொடர்ந்து சிறுநீரக மாற்றுச்சிகிச்சை பிரிவும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிய வருகின்றது.

கடந்த ஆறு மாத காலத்தில் 28 இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது. கடந்த 7 மாத காலமாக ஐவிஎப் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. முறையான சோதனைக்குழாய் குழந்தை சிகிச்சை முறைகளை மேற்கொள்ளப்படுகின்றது. பல வருடங்களுக்கு முன்னர் வடக்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழும் மக்கள் நவீன சிகிச்சை முறைகளைப் பெறமுடியாமல் இருந்தது. இவர்கள் கொழும்புக்கே சென்று சிகிச்சைகளை செய்ய வேண்டிய நிலைக்குட்பட்டிருந்தனர். இவ்வாறானவர்களின் சிரமத்தை நீக்கும் பொருட்டு பிந்திய சிகிச்சை வசதிகளை இந்த மக்கள் எவ்வித இடர்பாடுகளின்றி தமது சொந்த மண்ணில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவாவில் உருவாக்கப்பட்டதே நொதன் சென்றல் வைத்தியசாலை. எவ்வித சுயநல நோக்கமுமின்றி நியாயமான கட்டணங்களில் நோயாளிகளுக்குத் தேவையான தரமான மருத்துவ சேவையை வழங்கி வருகின்றது. இந்த வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சையும் ஐ.வி.எப் சிகிச்சையையும் நாம் ஆரம்பித்தது ஒரு வரப்பிரசாதமாகும். மேலும் குழந்தைகள் இல்லாத வர்கள் சோதனைக் குழாய் மூலம் குழந்தையைப் பெற்றுக்கொள்வது இம்மண்ணில் கனவாகவே இருந்து வந்தது. இது வரை அனேகர் பெரும் செலவு செய்து இந்தியாவிலே செய்து வந்தார்கள். இந்நிலை தொடரக் கூடாது என்ற சேவை மனப்பான்மையில் சோதனைக்குழாய் குழந்தை சிகிச்சை முறையை இவ்வைத்தியசாலை வெற்றிகரமாக வழங்கி வருகின்றது.

இங்கு சாதாரண சிகிச்சைகள், நரம்பியல் சிகிச்சைகள், கண் சத்திர சிகிச்சை, காது மூக்கு தொண்டை பகுதிகளுக்கான சத்திர சிகிச்சை, பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை போன்ற சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மகப்பேற்று சிகிச்சை நிலையத்தில் சாதாரண மற்றும் சத்திர சிகிச்சை மூலம் குழந்தைப் பிரசவம் இடம் பெறுகின்றது.

அல்றாசவுண்ட் எக்ஸ்றே, ஈ.எம்.ஜி, ஈ.ஈ.ஜி, எக்கோ உட்பட அனைத்து ஸ்கானிங் பரிசோதனைகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சில வாரங்களில் எம்.ஆர்.ஐ ஸ்கான் வசதியும் கிடைக்கவுள்ளதாகத் தெரிகின்றது.

24 மணிநேர ஆய்வுகூட வசதி, மருந்தக வசதி என்பன இருப்பதால் எந்நேரமும் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பெரு வெற்றிக்கு இங்கு பணியாற்றும் வைத்திய ஆலோசகர்களும் வைத்தியர்களுமே காரணமெனத் தெரிய வருகின்றது. (த)

# 2017 இல்


## தேயிலைக் கண்காட்சி

சிலோன் ரீ எக்ஸ்போ கண்காட்சியை 2017ஆம் ஆண்டில் நடத்துவதற்கு பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கொண்ட பரிந்துரையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. உள்நாட்டு தேயிலை உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களின் பங்களிப்புடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

முதலில் இந்த கண்காட்சி 2015ஆம் ஆண்டு நடத்தப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் போதியளவு திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் வழங்கும் வகையில் இந்த புதிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலையை சர்வதேச மட்டத்தில் பிரபல்யப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடாக இந்த கண்காட்சி அமைந்திருக்கும். இலங்கையின் தேயிலை பெருந்தோட்டத் துறை என்பது 1865 ஆம் ஆண்டில் வர்த்தகச் செய்கையாக அறிமுகம் செய்யப்பட்டு 150 ஆண்டுகளை பூர்த்தி செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# வாசகர் திருமுகம்



## உணவகத்தில் இப்படியும் நடந்தது

யாழ். நகரில் நீண்ட காலமாக இயங்கி வரும் அந்நிய நாடு ஒன்றின் பெயருடன் இணைந்த உணவகம் ஒன்றுக்கு சில தினங்களுக்கு முன்னர் பிற்பகல் வேளையில் சென்றிருந்தேன் உள்ளே சென்று ஒரு மேசை முன்பாக அமர்ந்து கொண்டேன். கடைக்குள் கூட்டம் அதிக மில்லை. அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சிலரே காணப் பட்டனர். எனக்கு எதிரேயுள்ள கதிரையில் சற்று வயதான ஒருவர் அமர்ந்திருந்தார். அவ ரைப் பார்க்கும் போது படித்தவர், வேலையிலிருந்து ஓய்வு பெற்ற வர் என எண்ணத் தோன் றியது. அவர் எனக்கு முன்னரே அங்கு வந்து காத்திருப்பது தெரிந் தது. சிவப்பு நிறத்தையுடைய சீரு டையை அணிந்த பரிசாரகர்கள் அங்குமிங்கும் சென்று கொண் டிருந்தனர். ஆனால் எவரும் எம் இருவரையும் கருத்தில் கொள்ள வில்லை. பொறுமையிழந்த எனக்கு முன்னால் அமர்ந்திருந்த பெரியவர் மதிய உணவுப் பொதிகள் வழங்கும் இடத்துக்கு முன்பாக நின்று கொண்டிருந்த ஒருவரிடம் தாம் நீண்ட நேரம் காத்திருப்பது தொடர்பாகத் தெரிவித்தார். உடனே அவர் நீங்கள் காத்திருக்கத்தான் வேண் டும் என்று அலட்சியத்துடன் தெரிவித்தார். பின்னர் அங்கு, வந்த வேறொரு பரிசாரகரிடம் 'கழிவுகள் வந்து கரைச்சல் தரு குதுகள்'' என்று கூறிச் சிரிக்க மற்றவரும் சிரித்தார்.

இவர்கள் என்ன சும்மாவா உணவு கொடுக்கிறார்கள்? வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுதான் உணவகங்களின் முக்கிய கட மையாகும். இதை விடுத்து அவர் களைக் காத்திருக்க வைப்பதும், அவமானப்படுத்துவதும் எந்த வகையில் நியாயம்?

மேற்படி உணவகத்தின் பொறுப் பாளர்கள் இதனை உணர்ந்து தமது பரிசாரகர்கள் மூலமாக வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்க வேண்டும். தவறினால் கடையின் நற்பெயர் கெட்டுவிடும்.

*மு.வரோதயன்,தட்டாதெரு.*

## தண்ணீர்த் தாங்கி அமைக்க வேண்டும்

சுண்டுக்குளிச் சந்தியில் இருந்து கொழும்புத்துறை வீதி ஊடாக வசந்தபுரம், மணியந்தோட்டம், உதயபுரம் செல்லும் மக்களும் மாணவர்களும் தற்போதைய கடும் வெப்பத்தினால் பாதிக்கப்படுகின்றனர்.


முக்கியமாக மேலே குறிப்பிட்ட இடங்களில் இருந்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், கொழும் புத்துறை துரையப்பா வித்தியாலயம் ஆகிய பாடசா லைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் நீண்ட தூரம் தண்ணீர்த் தாகத்தோடு நடந்தே செல்கின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு கொழும்புத்துறை 3ஆம் குறுக்குச் சந்தியில் ஒரு தண்ணீர் தாங்கியை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*எஸ் .கல்கி, கொழும்புத்துறை*

## இன்னும் ஏன் இந்த வீதித்தடை

ஸ்ரான்லி வீதியிலே அமைச்சர் ஒருவருக்கு தங்குமிட காரியால யம் ஒன்று இருந்தது. அப்போதைய அடாவடி அரசு, அடி வருடி அமைச் சர் கேட்டதற்கமைய வீதியில் வீதித்தடையைப் போட்டி ருந்தது. ஆனால் இன்று அமைச்சரின் கனவு கலைந்து நிர்க்கதியான பின்பும் ஏன் இந்த வீதித் தடை போடப் பட் டுள்ளதென்பதை எவரிடம் சொல்லி அழுவது என் பது தெரிய வில்லை. இந்த வீதித் தடையால் சகல வாகன தாரிகளும் அசௌகரியத்துக் குட் படுகின்றார்கள் என்பதை நீங்க ளும் அறியீரோ. *பா.பாலநாதன்*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# வடக்கு அரசை மதிக்காத ரணில்

தனது வடக்குக்கான பயணத்தின்போது வடக்கு மாகாண சபையை மதிக்காமல் வடக்கு மக்களின் ஜனநாயகத்தை ஏற்காமல் புறந்தள்ளி இருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

வடக்குக்கு நான்கு நாள் பயணம் மேற்கொண்டுள்ளார் பிரதமர் ரணில். தனது பயணத்தின்போது வடக்கு முதலமைச்சரை சந்திக்கும் திட்டம் எதனையும் அவர் தனது நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கவில்லை. வடக்கு முதலமைச்சரை சந்திக்கமாட்டேன் என்று பகிரங்கமாகத் தெரிவித்து வடக்கு அரசுடன் முரண்பாட்டு நிலையை வெளிக்காட்டி உள்ளார் அவர்.

வடக்கு மக்களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டதே வடக்கு மாகாண சபை. வடக்கு மக்களுக்கான ஒரு குட்டி அரசாக அது விளங்குகிறது. வடக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் குரல் கொடுக்கும் ஒரு ஜனநாயக அரசாக அது விளங்குகிறது. வடக்கு மக் களின் ஏகோபித்த ஆதரவினால் தெரிவான அந்த அரசை வெளி நாட்டில் இருந்து வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளும் தலைவர்க ளும், ராஜதந்திரிகளும் சந்தித்துப் பேசுவது வழக்கம். அதேநேரம் உள்நாட்டு அரசியல் தலைவர்களும் வடக்குக்கு வரும்போது வடக்கு மாகாண அரசுடன் சந்திப்புக்களை நடத்துவர். வடக்கு மக்க ளின் ஒட்டுமொத்தக் குரலாக இந்த மாகாண அரசு விளங்குகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பயணத்தின்போது இந்த அரசை புறந்தள்ளி நடந்துகொண்டமை பல்வேறு மட்டங்களிலும் பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியிருக்கிறது.

இனப்படுகொலை தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறை வேற் றப்பட்டதை அடுத்து வடக்கு முதலமைச்சருடன் பிரதமருக்கு கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இந்தியத் தொலைக் காட்சி ஒன்றுக்கு செவ்வி அளித்த பிரதமர், வடக்கு முதலமைச்சர் மீது கடும் விமர் சனங்களை முன்வைத்ததுடன் வடக்குப் பயணத்தின் போது அவரைத் தான் சந்திக் கப் போவதில்லை பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவ்வாறே நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் ரணில் கலந்துகொண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் வடக்கு மாகாண சபை யைச் சேர்ந்த யாரும் பங்கேற்கவில்லை. முதலமைச்சரைச் சந்திக்க பிரதமர் மறுப்புத் தெரிவித்தமையால், அதன் எதிரொலியாக மாகாண சபை உறுப்பினர்களும் பிரதமருடைய நிகழ்வுகளைப் புறக்கணித்தனர்.

ஏற்கனவே மஹிந்தவின் காலத்தில் வடக்கு மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் இடையே தொடர்ச்சியான முறுகல் நிலை இருந்து வந்தது. இதற்கு அப்போதைய ஆளுநரும், பிரதம செயலாளரும் மத்திய அரசினால் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட்டனர். மாகாண சபையின் திட்டங்களையும் முன்மொழிவுகளையும் அங்கீகரிக்கா மல் அதன் செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வந்தமையால் மாகாண சபையால் திறம்பட செயற் படப் போனது. மஹிந்த ஆட்சியில் இருந்து அகலும் வரை இந்த நிலை நீடித்தது.

ஆயினும் நல்லாட்சியை உருவாக்கும் நோக்கில் மாற்றத்துக்காக வாக்களித்த மக்கள் மைத்திரிபாலவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். அவர் ஜனாதிபதியாவதற்கு வடக்கு மக்களின் வாக்கு களே முக்கிய பங்காற்றியிருந்தனர். இதன் பின்னர் வடக்கு மாகாண சபையுடன் நெருங்கி செயற்படுவதற்கான திட்டங்களை வகுத்த மைத்திரி, தனது முதல் பணியாக வடக்கு மாகாண ஆளுநரையும், பிரதம செயலரையும் மாற்றி ஒரு சாதகமான நிலைப்பாட்டை ஏற் படுத்தி இருந்தார். வடக்கு மாகாண சபைக்கும் இந்த நடவடிக்கை நன்கு பிடித்துப்போக மத்திய அரசுடன் ஒன்றிணைந்து பல்வேறு திட் டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள் ளப்பட் டன. மத்திய அரசுடன் வடக்குக்கு இருந்த முரண்பாடு மைத்திரி வருகையுடன் நீங்கிக் கொண்டிருந்த வேளையில் குட்டையைக் குழப்பி மீண்டும் ஒரு மோதல் போக்கை உருவாக்கி விட்டுள்ளார் பிரதமர் ரணில். ரணிலின் இந்த நடவடிக்கை வடக்கு மக்கள் மத்தி யில் கடும் வெறுப்பை உண்டு பண்ணி இருக்கிறது. மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை மாகாண சபை மேற்கொள்ள திட்டமிருந்த வேளை ரணில் இவ்வாறு நடந்து கொண்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

ஒரு நாட்டின் பிரதமர் என்ற ரீதியில் அனைத்து இனங்களையும் மதங் களையும், சமூகங்களையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டிய பொறுப்பும் கடமையும் கட்டாயமும் அவருக்கு உண்டு. அதை விடுத்து பொறுப்பான ஒரு பதவியில் இருந்து கொண்டு தனது விருப்பு வெறுப் புக்கு ஏற்றவாறு அவர் செயற்படுவது அரசியல் தலைவர் ஒருவ ருக்கு அழகல்ல. அதனை அவர் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

வடக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு மதிப் பளிப்பதன் மூலம் வடக்கு மக்கள் மத்தியில் அவர் மீதான ஒரு நல் லெண்ணத்தை உருவாக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வடக்கு அரசை புறக்கணித்து நடந்துகொள்வது இலங்கையின் நாடாளு மன்றில் அதிக காலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பெரு மைபெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உரிய ஜனநாயகப் பண்பு அல்ல.

ஆகவே வடக்கு அரசுடன் ஒரு சுமுக உறவை உண்டாக்கி அதன் மூலம் வடக்கு மக்களின் மனங்களை வெல்ல ரணில் முயற் சிக்க வேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேசிய நல்லிணக்கம் என்ற வாய்ப்பந்தல் ஈடேறுமா....?

தேசிய நல்லிணக்கத்தை நாட்டில் உருவாக்கவும் அதனைக் கட்டி எழுப்பவும் அரசாங்கம் முன்னுரிமை வழங்கிச் செயற் படுகிறது --

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் தேசிய நல்லிணக்கத்துக்கான, தேசிய ஒருமைப்பாட்டுக்கான பிரிவு ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டு வருகிறது --

மேற்கண்ட தகவலைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெட்டி முழக்கி வெளிப்படுத்தி உள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இது குறித்து விவரித்தார்.

நாட்டில் வாழும் சகல மக்களும், இன, மத, அரசியல் வேறுபாடின்றி வாழ்வதற்கும், தேசிய ஐக்கியத்தை உருவாக்கவும் முனைப்புடன் செயற்படும்ஓர் அமைப்பாகவே, தேசிய நல்லிணக்க அமைப்புக் கட்டி எழுப்பப்படும் என்றும் அவர் சிலாகித்தார்.

அத்தோடு பிரதமர், மற்றொரு முக்கிய அம்சத்தையும் எடுத்துரைத்தார். தென்னாபிரிக்காவின் உண்மை அறியும் குழுவின் பொறுப்புக்கூறலுக்கான நெறிமுறைகள், அவற்றை நடைமுறையாக்குவதற்கு மேற்கொண்ட செயல்வடிவங்களை ஆராய்ந்தும், உத்தேச தேசிய ஒருமைப்பாட்டுக்கான பிரிவு செயல் முறைச் சாத்தியமானவற்றை உள்வாங்க வகை செய்யப்படும் என்றும் பிரதமர் கோடி காட்டி இருக்கிறார்.

பிரதமர் வெளிப்படுத்தி உள்ள கருத்தும், அவரது தேசிய நல்லிணக்கம் நாடிய செயற்பாடும் கேட்பதற்கு ஆக்கபூர்வமானவை யாகவே தோன்றுகின்றன. ஆனால்..........

அவற்றைச் செயலாக்குவதற்கு, இன்னும் ஒரு சில வாரங்களே இயங்கப் போகும் இப்போதைய அரசு தொடர்ந்து நீளுமா என்ற வினா குறுக்கே வந்து விழுகிறது!

நாட்டின் பொதுத்தேர்தல், ஆக முந்தியது இன்னும் மூன்று மாதங்களில் நடத்தப்படும் என்ற அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கும் அம்சத்தையும், பிரதமர் ரணிலின் தேசிய ஒருமைப்பாட்டுக் கருத்தியலையும் கூட்டிக் கழித்து பெருக்கிப் பிரித்து "கணக்கு"ப் பார்க்க வேண்டிய தேவையும் எழுகிறது. அல்லவா........?!

அதாவது, ஆட்சி மாற்றம் வருவதற்கு முன்னர், நாட்டின் பிரதான கட்சிகளாகச் செயற்பட்டதில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சியால் -- அதன் தலைவரான தற்போதைய பிரதமரால் -- மஹிந்த ராஜபக்ஷவை மீறி, மேலெழுந்து எதனையும் செயலாக்க முடியாத கையறு நிலைமை தொடர்ந்தமை தெரிந்ததே.

எனினும் உத்தேசமாக ஜூன் 2015 இல் நடைபெற உள்ள தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்ற சமன்பாடு மேல் எழுகிறது,... அல்லவா?

அதற்கான முன்னோட்டமே, தேசிய நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதில் உள்ள நாட்டம் எனில் அது விதண்டாவாதம் இல்லையே.......

இலங்கை என்ற சிறிய தீவைப் பிளவுபடுத்தாது, தமிழ் மக்கள் மீண்டும் தமக்கான ஆட்சியியல் மற்றும் அரசியல் உரிமைப் போரில் ஈடுபடாது தவிர்ப்பதற்கே - தடுப்பதற்கே --தேசிய நல்லிணக்கம் குறித்துப் பிரதமர் இப்போது உச்சரிக்கின்றார் என்று கருதுவதும் தப்பன்று......

வடக்கில், தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் மஹிந்த அரசாங்கத்தினால் -- அதன் இராணுவத்தினால் -- கபளீகரம் செய்யப்பட்ட காணிகளை வழங்குவதில், பிகு பண்ணும் இராணுவத்துடன் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுவதும் --

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோர், காணாமற் போனோர் தொடர்பில் ஒளித்துப் பிடித்து விளையாடுவதும் --


ரணில் அரசு, தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுமா என்ற சந்தேகத்தை ஊன்றி விதைத்துக் கொண்டு --

தேசிய நல்லிணக்கம் குறித்து வாய்ப்பந்தல் போடுவதை நம்பமுடியுமா, நம்பவேண்டுமா என்ன....??

### தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான ஆட்சியதிகாரம்

# மோடியின் கருத்து இங்கு எடுபடுமா?

■ வந்தியத்தேவர்



மாகாணங்களுக்கு அதிக அதிகாரத்தைத் தரக்கூடிய ஒத்துழைப்புடனான சமஷ்டியே பிரச்சினைகளுக்குத் தீர்வு தர முடியும் என்ற தனது அனுபவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இலங்கை நாடாளுமன்றத்திலும் இதனைத் தெரிவித்துள்ளார். மோடியின் வருகை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தும் என, தமிழ் மக்கள் உறுதியாக நம்பிக்கொண்டிருக்கும் நிலையில் மோடி தமிழ்த் தலைவர்களிடம் இதனை வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி மைத்திரியிடம் பேசிய அவர், தமிழ் மக்கள் சமஉரிமை பெற்று வாழ்வதற்கு 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு இணைவு குறித்து உரையாடல்கள் இடம் பெற்றதாக இல்லை. அரசுடனான பேச்சில் கடல் விமானப் போக்குவரத்து, வியாபாரம், சுகாதாரம் உட்பட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த ஒப்பந்தங்களில் இரு தரப்பும் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன.

கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் பல்வேறு அவலங்களுக்கு உள்ளாகிக் கொண்டுள்ள நிலையில் இன்னமும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கூட்டமைப்பைக் கேட்டுள்ள மோடி கூட்டமைப்புத் தரப்பினரிடம் முரண்பாடுகள், குழப்பங்கள் உள்ளதாகவும் அவர்கள் ஒன்று பட வேண்டும், புதிய அணுகு முறையில் சிந்திக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டு அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக இந்தியா என்றும் உங்களுடன் இருக்கும் எனவும் ஆறுதல் வேறு கூறிச் சமாளித்துள்ளார்.

> கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் பல்வேறு அவலங்களுக்கு உள்ளாகிக் கொண்டுள்ள நிலையில் இன்னமும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கூட்டமைப்பைக் கேட்டுள்ள மோடி கூட்டமைப்புத் தரப்பினரிடம் முரண்பாடுகள், குழப்பங்கள் உள்ளதாகவும் அவர்கள் ஒன்று பட வேண்டும் புதிய அணுகுமுறையில் சிந்திக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டு அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக இந்தியா என்றும் உங்களுடன் இருக்கும் எனவும் ஆறுதல் வேறு கூறிச்சமாளித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பதிலாக கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முறை தேவை என்பது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்து. இது தொடர்பாக அவர் மோடியுடன் உரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இரு நாட்டு உறவுகள் தொடர்பாக பேச்சுக்கள் இடம்பெற்றாலும், இரு நாடுகள் சம்பந்தப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள், மீனவர் பிரச்சினைகள் குறித்து இந்தியா தனது நிலைப்பாட்டை இன்னமும் இழுத்துக் கொண்டே செல்கிறது போல் தெரிகின்றது. ஓர் உறுதியான தீர்க்கமான நிலையை இந்தியாவால் கூட எடுக்க முடியாதுள்ளது போல தெரிகின்றது. மீனவர் விவகாரம் தொடர்பாக தமிழகத்தில் கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுவதுடன் அங்குள்ள அரசியல் கட்சிகளின் கண்டனங்களுக்கு மத்தியிலும் வருகை தந்த பிரதமர் மோடி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றைக் கூடக் கண்டுகொள்ளாதவராகி விட்டார்.

இந்தியப் பிரதமரின் வருகையால் இரு நாடுகளின் உறவும் வலுவடைந்துள்ளதாகவும் அதனால், தான் மிகவும் சந்தோஷத்தில் இருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரி தெரிவிக்கிறார்.

தமிழ் மக்களது பிரச்சினைகளின் தீர்வு தொடர்பான பெரிய அளவு நெருக்குதல்கள் இல்லாமையால் அதற்கான தீர்வு மேன்மேலும் தாமதமாகிக் கொண்டே போகும் என்பதுதான் மோடி வருகையின் பின்னரான நிலையாகவும் இருக்கும்.

இருபத்தி எட்டு வருடங்களின் பின் ஓர் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தருவது முக்கியத்துவம் மிக்க ஒன்றாக இருப்பினும், நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சூழ்நிலையைத் துரிதமாக உண்டு பண்ணிய ஒரு பிரதமராக மோடியின் வருகை அமையும் பட்சத்திலேயே இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றில் இடம்பிடித்த ஒரு பிரதமராவார். இந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் தான். இப்போது தமிழ் மக்களிடம் காணப்படுகிறது.

■ தொகுப்பு: சரா
ஆதாரம்: மவ்பிம



# மஹிந்த எப்படிப்பட்டவர் என்பது தெரியும் தானே!

## அதனால் தேர்தலன்று குடும்பத்துடன் குருநாகலையில் தங்கியிருந்தேன்

### -மனம் திறக்கிறார் ஜனாதிபதி-

**தேர்தல் தினமான அன்றைய இரவில் குருநாகல் – தொடங்கஸ்லந்த பிரதேசத்தில் தென்னந்தோட்டத்தில் எனது நண்பரின் வீட்டிலேயே எனது மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட ஏனைய எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருடனும் நான் தங்கியிருந்தேன். தேர்தலின் முடிவு தலைகீழாக மாறியிருந்திருக்குமானால் இன்று நானோ, பிள்ளைகளோ உயிர்பிழைத்திருப்போமா என்பதைக் கூறமுடியாது.**

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற அன்றையதினம் இரவு தாம் குருநாகலில் உள்ள தமது நண்பர் ஒருவரின் வீட்டிலேயே தங்கியிருந்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று இரவு ஜனாதிபதி எங்கு தங்கியிருந்தார்? அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்ததா? என்ற கேள்விகள் அவரிடம் எழுப்பப்பட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். ஒருவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் தம்மீதும் தனது குடும்பத்தின் மீதும் அவர் மேற்கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் எவ்வாறானவை என்பதை அறிந்து கொண்டிருந்ததாலேயே தாம் அவ்விதம் நண்பரின் வீட்டில் தங்கியிருந்ததாகவும் அவர் பதிலளித்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேன, அவரது துணைவியாரான ஜயந்தி புஸ்பகுமாரி, பிள்ளைகளான தஹம், சத்துரிகா, தரணி சிறிசேன ஆகியோரும் மருமகன்னான திரிண, பேரன்மார், பேர்த்திகளுடன் அன்றைய இரவில் கறுப்புநிற பீஎம்டபிள்யூ வர்க்கத்தைச் சேர்ந்த வாகனமொன்றில் மைத்திரிபால சிறிசேனவின் நெருங்கிய நண்பர் ஒருவருக்குச் சொந்தமான தொடங்கஸ்லந்த பிரதேசத்தின் தென்னந்தோட்டம் ஒன்றில் அமைந்திருந்த வீட்டிலேயே அதன்போது அவர்கள் தங்கியிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் இரவில் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் விடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் மூலம் சிறிசேன தற்போது எங்கிருக்கிறார் என வினவப்பட்டபோது, தாம் பொலநறுவையில் இருப்பதாக அவர் தெரிவித்திருந்ததாகவும், தமக்கு வந்திருந்த தொலைபேசி அழைப்புக்களிடையே தாம் தெரிவு செய்திருந்த சில அழைப்புக்களுக்கு மாத்திரமே பதிலளித்திருந்தார் எனவும் அந்த சில மணித்தியாலங்களில் அவரும் குடும்பத்தாரும் எங்கே தங்கியிருந்துள்ளனர் என விசேடமாக வினவியவர்களுக்கு தாம் பொலனறுவை வீட்டில் இருப்பதாகவே அவர் தெரிவித்திருந்ததாகவும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த நாள் அதிகாலையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்திருந்ததை அடுத்து பீ.எம்.டபிள்யூ வாகனத்தின் முன்புறம் தேசியக் கொடியொன்று பொருத்தப்பட்டதன் பின்னர் மைத்திரிபால சிறிசேனவும் அவரது குடும்பத்தினரும் கொழும்பு நோக்கிப் பயணப்பட்டதாகவும் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இவை இவ்வாறிருக்க இது சம்பந்தமாக தொடர்ந்தும் கருத்து வழங்கியிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் தினத்தன்று இரவில் தாம் தங்கியிருந்த இடம் சம்பந்தமாக பி.பி.சிக்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:–

தேர்தல் தினமான அன்றைய இரவில் குருநாகல் – தொடங்கஸ்லந்த பிரதேசத்தில் தென்னந்தோட்டத்தில் எனது நண்பரின் வீட்டிலேயே எனது மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட ஏனைய எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருடனும் நான் தங்கியிருந்தேன். தேர்தலின் முடிவு தலைகீழாக மாறியிருந்திருக்குமானால் இன்று நானோ, பிள்ளைகளோ உயிர்பிழைத்திருப்போமா என்பதைக் கூறமுடியாது.

அதுதான் மஹிந்த ராஜபக்ஷக்களின் ஜனநாயகம்; அதை நான் நன்றாகவே அறிவேன். அவர்கள் இன்று ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினாலும், நான் தோற்கடிக்கப்பட்டு மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டிருந்திருப்பாரேயானால், தேர்தலுக்குப் பின்னரான வன்செயல்கள் எப்படியிருக்கும் என்பது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தெரியவந்தது. அது நடந்தேறியிருந்தால் இன்று எத்தனை பேர் உயிரிழந்து, எத்தனை பேர் கை, கால்கள் உடைக்கப்பட்டு, எத்தனை பேர் தமது பணிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை நான் அறிவேன். விசேடமாகக் கூறுவதானால் நான் தோற்றுப்போயிருந்தால் எனது ஒட்டுமொத்த குடும்பத்தவர்களையும் சிறைசெய்து ஒழித்துக்கட்டி விடுவதற்கே அவர்கள் திட்டமிட்டிருந்தனர் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அதற்காக உயிருக்குப் பயந்து நான் அங்கு தங்கியிருக்கவில்லை. உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் தென்பட்டதாலேயே நான் அவ்விதம் செயற்பட்டிருந்தேன்.



பயத்தைச் சுமந்துகொண்டு இந்த அரசியலுக்கு வந்தவனல்ல நான். எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமும் எனக்கில்லை. உயிர்மீதுள்ள ஆசையைக் கைவிட்டே, நான் அரசிலிருந்தும் வெளியேறினேன்; தேர்தலிலும் நின்றேன். அந்த அச்சுறுத்தலின் பாரதூரம் எந்தளவானது என்பதையும் நான் அறிவேன். அவர்கள் எப்படி நாட்டை நிர்வாகம் செய்தனர், அவர்களது எதிர்பார்ப்புக்கள் எவை, அவர்களது செயல்கள், வார்த்தைகள் எப்படியானவை என்பதையும் நான் மிக நன்றாகவே அறிந்து வைத்திருந்தேன்.

தேர்தல் தினத்தன்று இரவு நான் ஒளிந்திருக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என எதிர்பார்க்கப்பட்ட ஆபத்துக்களுக்கு முகம்கொடுப்பதற்குத் தயார்படுத்திக் கொள்வது எவ்வாறு என்பதையே நான் சிந்திந்தேன். ஒளிந்துகொள்ளும் எண்ணம் எனக்கில்லை. அதற்கான அவசியமும் எனக்கில்லை. ஒளிந்து மறைந்து கொள்ளவும் மாட்டேன். மிகவும் தைரியமாகவே எதையும் எதிர்கொள்ள என்னால் முடியும். ஆனாலும்கூட அன்று நான் தேர்தல் முடிவுகள் சம்பந்தமாக எழும் நிலைப்பாட்டை எவ்வாறு சமாளிப்பது என்பதைச் சுயாதீனமாகத் தீர்மானிப்பதற்காகவே கொழும்பை விட்டும், பொலனறுவையை விட்டும் நீங்கி வேறு பிரதேசமொன்றில் தேர்தலன்று இரவில் தங்கியிருந்தேன் என ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

## தவக்காலச் சிந்தனை

# ஞானம் நடுநிலையின் ஆணிவேர்

உள்ளம், உள்ளங்கை அளவுதான். ஆனால் அதன் சிந்தனை வெளிப்பாடும், ஆற்றலும் உலகை வியக்கவைக்கும் சக்தி கொண்டது. அதே போன்று கீழ்த்தரமான செயற்பாடுகள் பொதிந்து கிடப்பதும் அதே உள்ளத்தில்தான். தீயதைக் கட்டுப்படுத்தி நன்மையை மேலோங்க விடுவது சுயகட்டுப் பாட்டிலும், ஞானத்தின் தெளிவிலும் தங்கியுள்ளது. அந்த ஞானமே நடுநிலையான தீர்ப்பைக் கூறி அதன் வழியில் எம்மை நடக்கத் தூண்டுகிறது.

உண்மையை எதிர்த்துப் பொய்யுரைப்பதும், பொறாமை, மனக்கசப்பு, கட்சிமனப்பான்மை, மண்ணுலகு சார்ந்த ஞானமாகும். விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும், பொறுமை கொள்ளும். இணங்கிப்போகும். இரக்கம் காட்டும். நற்செயல்களுடன் நடுநிலை தவறாது அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் கனி விழைகிறது.(யாக் 33:17–18) மெஞ்ஞானத்தின் உருவமான இறைவனின் திருச்சித்தத்தை நிறைவேற்றவே இயேசு நடுநிலையானவராகப் பிறந்து எமக்காக இரத்தம் சிந்தி இறந்து விடுதலை தந்தார். எமது பணிவு, நன்னடத்தை சரி பிழை ஆய்ந்துணரும் நடுநிலைத் தன்மைகளால் எமது வாழ்வில் மெய்ஞானத்தை வெளிப்படுத்தி அமைதியையும் நீதியையும் நிலைநாட்ட உழைப்போம். இதுவே இன்றைய தலைமைகளுக்கும் இறைவன் விடும் அழைப்பாகும்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## நாளை

**பங்குனி-15**
**ஞாயிற்றுக்கிழமை**
**29.03.2015**

திதி: நவமி மு.ப.07.20
நட்சத்திரம்: புநர்பூசம் மு.ப.09.50 வரை
சுபநேரம்: 09.13–10.43 வரை
இராகுகாலம்:04.43–06.13 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



# பொதுநலம் பேணுங்கள்

பெற்றோரை மகிழ்விக்கும் பிள்ளைகளைக் கண்டு கடவுள் மகிழ்ச்சி கொள்கிறார். அன்பினால் செய்யப்படும் செயல்கள், ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசிரியராக எமக்கு பாடம் கற்பிக்கிறது.

அறிவோடு ஒன்றிவிடுங்கள். பிழைகளை அகற்ற இதுவே அறிவியலுக்கு ஒத்த முடிவாகும். தன்னலத்தை ஒழியுங்கள். மனதில் மகிழ்ச்சி ஊற்றெடுப்பதை உணர்வீர்கள். பெற்றுக் கொள்பவனை விட, பிறருக்கு கொடுப்பவனே உண்மையில் பேறு பெற்றவன்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–40 | 50 | 30 | 60 | 20–40 | 60 | 40–60 | 20 |
| கத்தரி | 30–40 | 40 | 40–60 | 60 | 20–40 | 60 | 60–80 | 40 |
| கரட் | 100–120 | 110–140 | 100–120 | 120–140 | 100 | 120–160 | 140–160 | 60 |
| மரவள்ளி | 40–60 | 50 | 40 | 50 | 40 | 80 | 45–60 | 30 |
| பயிற்றை | 60–80 | 60 | 60–80 | 40–60 | 70–80 | 120 | 80–100 | 60 |
| பாகல் | 80–100 | 100 | 100 | 120 | 80 | 100 | 100–120 | 90 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50–70 | 80–100 | 60–80 | – | 80–100 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 80–100 | 50–80 | 90 | 60 | 100 | 80–100 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 60–80 | 50–70 | 70 | 70–80 | 80–100 | 80–100 | 50 |
| பூசணி | 50–70 | 50 | 50 | 60 | 40 | 60 | 80–100 | 60 |
| தக்காளி | 40–60 | 50 | 50 | 50 | 40–60 | 80 | 80–100 | 60 |
| வாழைக்காய் | 50–70 | 70–90 | 50 | 70 | 60–80 | 80 | 80–100 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 20 | 30–40 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40–60 | 30 | 40 | 20 | 20 | 10 | 20 |
| பச்சை மிளகாய் | 40 | 60–90 | 50–90 | 50 | 50–70 | 60–90 | 60–80 | 80 |
| புடோல் | 40 | 50 | 40 | 50–70 | 30–40 | 60 | 60–80 | 60 |
| கோவா | 30 | 50 | 40 | 40–60 | 20–40 | 60 | 60–80 | 40 |
| வெண்டி | 40 | 40 | 40 | 50–70 | 40–50 | 40 | 60–90 | 60 |
| போஞ்சி | 120 | 100 | 110 | 120–160 | 100–130 | 140 | 80–100 | 80 |
| லீக்ஸ் | 140–160 | 140 | 130–150 | 120–160 | 140 | 180–220 | 120–160 | 100 |
| தேங்காய் | 60–70 | 40–60 | 60 | 40–60 | 40 | 50–70 | 30–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 | 80 | 90 | 90 | 80 |
| தேசிக்காய் | 80 | 80 | 80–100 | 80 | 70–90 | 40 | 40–80 | 70 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 100–120 | 100 | 100–130 | 120 | 110 | 160 | 120–160 | 130 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 120 | 80–110 | 100 | 120 | 110 |
| பனங்கிழங்கு | 04 | 03 | 03 | 04 | 05 | 05 | 04 | 03 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 550 | 800 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 250 |
| கணவாய் | 600 | 400 | 650 | 500 | 450 |
| பாரை | 450 | 400 | 500 | 350 | – |
| சுறா | 550 | 500 | 650 | 500 | – |
| சீலா | 400 | 300 | 500 | 300 | 350 |
| விளை | 450 | 250 | 550 | 350 | 400 |
| முரல் | 350 | 200 | 550 | 300 | 300 |
| கும்பிளா | 500 | 200 | 600 | 400 | – |
| கிழாக்கன் | 400 | 500 | 400 | 350 | – |
| ஒரா | 400 | 200 | 300 | 350 | – |
| திரளி | 300 | 200 | 350 | 250 | 300 |
| நகரை | 250 | 250 | 350 | 300 | – |
| சூடை | 150 | 100 | 150 | 100 | 150 |
| ஒட்டி | 150 | 150 | 250 | 250 | 150 |
| திருக்கை | 150 | 250 | 200 | 250 | 150 |
| பாலை | 350 | 300 | 400 | 400 | – |
| வாளை. | 200 | 200 | 250 | 250 | 300 |
| கொய் | 80 | 100 | 120 | 100 | 110 |
| மதளம் | 250 | 200 | 300 | 250 | 250 |

# குழந்தை ஆரோக்கியம்


குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால், காய்ந்த திராட்சைப் பழத்தை பசும்பால் அல்லது தண்ணீரில் ஊற வையுங்கள். அரை மணி நேரத்துக்குப் பிறகு பழத்தைப் பிழிந்து அதன் சாற்றை மட்டும் குடிக்கக் கொடுத்தால், மலம் தாராளமாகப் போக ஆரம் பிக்கும்.

குழந்தைகள் சிலநேரம் உணவு ஜீரணமாகாமல் அவதிப்படுவார்கள். அப்படிப்பட்ட நேரங்களில், நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும் சதக்குப்பையை தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து, வடிகட்டி, சர்க்கரை சேர்த்துக் கொடுத்தால் பிரச்சினை சரியாகும்.

சிறுநீர் கழிக்க குழந்தைகள் சிரமப்பட்டால்... வெள்ளரி விதைகளை நீர் விட்டு அரைத்து அடிவயிற்றில் பற்று போட்டால் அடுத்த சில நிமிடங்களில் சிரமமின்றி சிறுநீர் கழியும். மேலும் சுடுநீரை போத்தலில் நிரப்பி வயிற்றில் ஒத்தடம் கொடுத்தாலும் பலன் கிடைக்கும்.

குழந்தைகள் சிலநேரங்களில் காரணமில்லாமல் அழும். அது வயிற்று வலியாகவும் இருக்க வாய்ப்புள்ளது. அந்த மாதிரி நேரங்களில் நாலைந்து புதினா இலைகளை எடுத்து) வதக்கி, அதில் ஒரு ரம்ளர் தண்ணீர் ஊற்றி கொதிக்கவைத்து, பாதியாக வற்றியதும் ஒரு பாலாடை அளவு குடிக்க கொடுத்தால் வயிறுவலியாக இருக்கும் பட்சத்தில் அது சரியாகிவிடும்.

மழைக்காலத்தில், குழந்தைகளுக்கு ஜலதோஷம், சளி பிரச்சினைகள் வந்து அடிக்கடி தொல்லை கொடுக்கும். மூக்கடைப்பு, ஜலதோஷம், சளி வந்தால்... நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கக் கூடிய ஜாதிக்காயை நீர் விட்டு அரைத்து கரண்டியில் வைத்து சூடுபடுத்த வேண்டும். பிறகு இளம்சூட்டோடு மூக்கின்மேல் பற்று போட்டால் மூக்கு வடிதல் நிற்பதோடு அடைப்பு விலகும்.



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | | | 8 | 1 |
| 5 | 4 | | | 8 | 2 | 6 | 7 | |
| 7 | | | | | 1 | | | |
| | 5 | | 8 | | | | 9 | |
| | | 9 | 3 | 4 | 7 | 5 | | |
| | 8 | | | | 9 | | 2 | |
| | | | 1 | | | 8 | | 2 |
| | 1 | 2 | 6 | 7 | | | 4 | 5 |
| 4 | 6 | | | | | | 3 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 4 | 8 | 6 | 9 | 3 | 5 | 2 |
| 5 | 3 | 8 | 1 | 2 | 4 | 9 | 6 | 7 |
| 6 | 2 | 9 | 3 | 7 | 5 | 8 | 1 | 4 |
| 1 | 5 | 2 | 9 | 8 | 3 | 7 | 4 | 6 |
| 8 | 9 | 7 | 6 | 4 | 2 | 1 | 3 | 5 |
| 3 | 4 | 6 | 5 | 1 | 7 | 2 | 9 | 8 |
| 2 | 8 | 5 | 4 | 3 | 1 | 6 | 7 | 9 |
| 4 | 6 | 1 | 7 | 9 | 8 | 5 | 2 | 3 |
| 9 | 7 | 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நீகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மிருகங்கள், யானை, பாம்பு இவைகள் கனவில் வந்தால்

# கனவுகளின் பலன்கள்

சிங்கம் உங்களை துரத்தி வருவது போல கனவு கண்டால், அரசால் பிரச்சினை உண்டாகும். புதிய நபர்களின் ஆதரவினால் பெரிய பாதகத்தில் இருந்து தப்பிப்பீர்கள். நீண்ட நாள்களாக மனதில் இருந்த பயம் போகும். சிங்கத்தை தடவிவிடுவது போல கனவு கண்டால், விசேஷ லாப பலன்கள் உண்டாகும். முடியாமல் பல நாள்களாக இழுத்தடித்த வேலைகள் நீங்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு திருப் தியாக முடியும். அசையும் பொருள்களோ, அசையாத பொருள்களோ வாங்குவீர்கள்.


மனதில் புதிய உற்சாகமும், தெம்பும் ஏற்படும். சிங்கம் உங்களை கடிப்பது போல கனவு கண்டாலோ அல்லது உங்கள் குடும்பத்தாரை கடிப்பது போல கனவு கண்டாலோ, புத்திரர்களால் சில பிரச்சி னைகள் உண்டாகும். அல்லது ஏதாவது வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தாலும், புத்திரர்களால் தடை உண்டாகும். துர்க்கை அம்மனை வணங்கினால் பாதகம் எல்லாம் சாதகமாகும். பாம்பைக் கனவில் கண்டால் என்ன பலன்? பாம்பை கனவில் கண்டால், தெய்வ பலன்கள் அதாவது உங்களின் நல்ல நேரத்தை விரைவிலேயே அனுபவிப்பீர்கள். ஆயுள் விருத்தியுண்டாகும். பெண்களால் ஆதாயம் ஏற்படும்.

நீண்ட நாள்களாக இருந்த உடல் உபாதைகள் விலகும். புதிய மருந்தால் உடல் வலிமை பெரும். பாம்பு உங்கள் உடலின் மேல் ஏறுவது போல கனவு கண்டால், பிரச்சினைகள் விலகும். தந்தை வழியில் மன சங்கடங்கள் ஏற்படும். வியாபாரத்தில் இருந்த பணப் பிரச்சினை விலகும். மணவாழ்க்கையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பின்னர் சுமுகமாக பிரச்சினைக்ள் விலகும். பாம்பு படம் எடுப்பது போல கனவு கண்டால், பொறாமையாளர்களால் விரயம் ஏற்படும்.

பயணத்தில் எச்சரிக்க்கயாக இருக்க வேண்டும். குடும்பத்தில் நிம்மதி இருக்கும். நண்பர்களால் லாபம் ஏற்படும். இருந்தாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

யானையை கனவில் கண்டால், அரசால் லாபமும், யோகமும் ஏற்படும். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த வழக்குகளுக்கு நல்ல விதமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் தீர்ப்பு கிடைக்கும். யானை உங்களைத் துரத்தி வருவது போல கனவு கண்டால், பழைய விவகாரங்களால் மனசங்கடங்களும், புதியதாக பிரச்சினைகளும் உருவாகும். அரசால் தொல்லைகள் எழும். வில்லங்க விவகாரங்களில் சிக்கித் திண்டாடுவீர்கள். இதனால் மனசஞ்சலம், கடன் சுமையும் உண்டாகும். யானை உங்களுக்கு மாலை போடுவது போல கனவு கண்டால், பெரிய பதவி கிடைக்கும். பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். செல்வாக்கு உயரும். திருமணம் ஆகாதவர்களுக்கு நல்ல இடத்திலிருந்து வரன் அமையும். யானை மீது நீங்கள் உட்கார்ந்து வருவது போல கனவு கண்டால், வேலைக்காக முயற்சி செய்து கொண்டு இருந்தால் வேலை கிடைக்கும். பதவியில் இருப்பவர்களுக்கு உயர் பதவி ஏற்படும். குடும்பத்தாரிடத்தில் உறவினர்களிடத்தில் மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். பொது வாகவே இரவு ஒரு மணிக்கு கனவு கண்டால் ஒரு வருடத்திற்குள் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்திற்குள் பலன் கிடைக்கும். மூன்று மணிக்கு கனவு கண்டால் ஒரு மாதத்திற்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்கிறது கனவு சாஸ்திரம். சிலருக்கு கனவு கண்ட சில தினங்களிலேயே பலிக்கும். நல்ல கனவு கண்டால் மகிழ்ச்சி அடைவோம். அதுவே எதிர்மாறான கனவு கண்டால் அந்த கனவை நினைத்து நினைத்தே வேதனைப்படுவர்களும் இருப்பார்கள். அப்படி தீய கனவை கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத்தில் இறைவன் ஒருவனே மிக பெரியவன். அவனையே முழு மனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வர்ழ்நாள் முழுவதும் எதிலும் சாதிக்கலாம், புகழ் பெறலாம்.









# தனியாக பயணிக்கும் பெண்கள்

தனியாக பயணம் மேற்கொள்ளும் பெண்கள் பலவித பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. கொலைகள், கற்பழிப்புகள் மற்றும் ஜாடை மாடையாக கேலி செய்வது போன்ற தொந்தரவுகள், ரயில்கள் மற்றும் பஸ்களில் பயணம் செய்யும் போது, குறிப்பாக தனியாக பயணிக்கும் போது, சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன. இது போன்ற சூழல்களில், பெண்கள் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதில் அதிக கவனத்தோடும் விழிப்புணர்வோடும் பயணிப்பது மிக முக்கியம்.

தனியாக பெண்கள் பயணம் செய்வது என்பது பிரம்மப் பிரயத்தனமான செயலாகவே உள்ளது. பெண்களை விழுங்குவது போன்று பார்ப்பதில், அலாதி அல்ப சுகம் காணும் ஆண்களின் அலைபாயும் கண்களிலிருந்து பெண்கள் தப்பவே முடியாது. பெண்கள், இன்னும் சமூக கட்டுப்பாடுகள் மற்றும் பழைமைவாதம் நிலவும் ஒரு நாட்டில் தான் வாழ்கிறோம் என்பதை மறக்கக் கூடாது. இது போன்ற ஒரு சமூகக் கட்டமைப்பில், பெண்கள் தாங்கள் எவ்வாறு வெளியிடங்களில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை தெளிவாகக் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் கலாசாரப் பெரு மைக்கு இழுக்கு உண்டாக்காமல் இருக்கவும், தனி யாக பயணிக்கும் போது எப்படி இருக்க வேண்டும் என்றும் சில முக்கியமான விடயங்களைப் பார்ப்போம்.

**உடைகளில் கவனமாய் இருக்கவும்**

என்ன மாதிரி உடைகளை அணிகிறோமோ, அதைப் பொறுத்துத் தான் கவன ஈர்ப்பின் தன்மை உள்ளது. அதிலும் உடலை இறுக்கிப் பிடிக்கும் உடைகள் மற்றும் குட்டைப் பாவாடைகள் போன்ற உடைகள் அணிவதைத் தவிர்ப்பதன் மூலம், பெண்கள் தங்கள் மேல் விழும் அந்நியர்களின் தேவையில்லாத பார்வைகளைத் தவிர்க்கலாம். எப்போதும் சுடிதார் அணிந்து, அதற்கு மேல் துப்பட்டா அணிவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும்.

**அந்நியர்களுடனான உரையாடல்களைத் தவிர்க்கவும்:**

அரட்டை அடிப்பதில் ஆர்வம் உள்ளவராய் இருக்கலாம். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், தனியாகச் செல்லும் போது, அவ்வாறான அரட்டைகளைதவிர்ப்பது நல்லது. முடிந்தவரையில், யாரோடும் தேவையில்லாத உரையாடல்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும். மேலும் பயணிப்போர் யாரேனும், உரையாடல்களில் கலந்து கொள்ளும்படி நச்சரித்தால், குறைந்த அளவில் உரையாடல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக தனிப்பட்ட தகவல்கள் எதையும் பகிர்ந்து கொள்ள கூடாது.

**உடைமைகளின் மேல் ஒரு கண் வைக்கவும்:**

உடைமைகள் அருகிலேயே இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவை மீது வைத்திருக்கும் கண் பார்வையிலிருந்து அகலக் கூடாது. வணக்கம் என்று சொல்லி முடிக்கும் முன், பொருள்கள் மாயமாய் மறைந்திருக்கும். ஆகவே எந்நேரமும் விழிப்புணர்வோடு கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

**பணப்பையின் மேல் பிரியம் கொள்ளவும்:**

பணம் வைத்திருக்கும் கைப்பையை மிக அருகிலேயே அல்லது கைகளிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், கொண்டு செல்லும் பணத்தை ஒரே இடத்தில் வைக்காமல், அவற்றை பிரித்து, பின் பாக்கெட் அல்லது பையின் பக்க வாட்டுப் பகுதிகள் போன்ற, வெவ்வேறு இடங்களில் போட்டு வைக்க வேண்டும். ஏதேனும் துரதிர்ஷ்டவசமான நிகழ்வின் போது, அச்சூழலில் இருந்து வெளியே வருவதற்கு, இந்தப் பணம் மிகவும் உதவியாக இருக்கும்.

**தைரியமாக இருக்கவும்:**

முதன்முறையாக தனியாக பயணிப்பவராய் இருப்பின், தைரியமாக நடந்து கொள்ள வேண்டும். அதுவும் முதன்முறையாக தனியாக பயணிக்கிறீர்கள் என்பது வெளியே தெரியும் படி எந்த தருணத்திலும் நடந்து கொள்ளக் கூடாது. என்ன செய்கிறோம், எங்கே செல்கிறோம் என்பதில் தெளிவாக இருப்பதாகவே எப்போதும் காட்டிக் கொள்ள வேண்டும். தலை நிமிர்ந்து நடந்து, திடமான குரலில் பேச வேண்டும்.

**எதையும் கடன் வாங்கக் கூடாது:**

அந்நியர்களிடம் இருந்து எந்த விதமான பொருளையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. யாரேனும் பிஸ்கட் அல்லது பழங்கள் கொடுத்தால், அதை பணிவாக மறுத்து விட்டு, இருக்கைக்குத் திரும்ப வேண்டும்.


**தனிமையைத் தவிர்க்கவும்:**

ரயிலில், பஸ்ஸின் ஓரத்தில், ஓர் ஆணின் பக்கத்தில் தனியாக இருப்பதாக உணரும் பட்சத்தில், பெண்கள் அதிகம் உள்ள பகுதிக்கு உடனே செல்ல வேண்டும். அருகில் அமர்ந்திருக்கும் நபரினால் தர்மசங்கடமாக உணர்ந்தால், இருக்கையை மாற்றித் தரக் கோரலாம் அல்லது சக பயணிகளிடம் பேசி, அவர்களை உங்கள் இருக்கையில் அமர்த்தி, அவர்களின் இருக்கையில் நீங்கள் சென்று அமரலாம்.

**அதிக பாரமின்றி பயணிக்கவும்:**

ஏகப்பட்ட பொருள்களைத் தூக்கிச் செல்ல வேண்டாம். அவ்வளவையும் ஒருவரே கையாள வேண்டிய நிலைக்கு ஆளாக நேரிடும். அதனால், எப்போதும் எடை குறைவாக, ஒரு தோள் பையோ அல்லது ஒரு சிறு பையோ மட்டும் கொண்டு செல்வது நல்லது. அதே போல், நிறைய நகையோ அல்லது பணமோ கொண்டு செல்வதும் நல்லதல்ல.

திலகம்



# உப்பு வியாபாரியும் கழுதையும்

ஒரு ஊரில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான்.அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அவனது ஊரில் ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது.பக்கத்து ஊருக்குச் செல்லக் கூட ஆற்றைக் கடக்க வேண்டும். அவன் தினமும் அடுத்த ஊருக்குச் சென்று உப்பு மூடையைக் கழுதையின் முதுகில் ஏற்றி, ஆற்றைக் கடந்து தன் ஊருக்கு வந்து உப்பு வியாபாரம் செய்து வந்தான்.

அப்படிச் செய்கையில், ஒரு நாள் உப்பு மூடையுடன் கழுதையை ஆற்றில் இறக்கி நடந்து வந்த போது..ஆற்றின் நீர் மட்டம் உயர..உப்பு மூடை நனைந்து அதில் இருந்த உப்பு சற்றுக் கரைய..கழுதைக்கு சுமந்து வந்த சுமை சற்று குறைந்தது.இதனால் மனம் மகிழ்ந்த கழுதை. அடுத்தடுத்த நாள்களில் உப்பைச் சுமந்து வரும்போது. வேண்டுமென்றே தண்ணீரில் அமிழ்ந்து உப்பைக் கரைத்தது. இதனால். வியாபாரத்தில் நஷ்டமடைந்த வியாபாரி. ஒருநாள் கழுதை செய்யும் தந்திரத்தை அறிந்தான். உடன் கழுதைக்கு பாடம் கற்பிக்க எண்ணினான். அடுத்த நாள் அவன் கழுதையை கட்டிப் போட்டுவிட்டு. உப்புக்கு பதில்..பருத்தி பஞ்சை ஒரு மூடைளை வாங்கி வந்து கழுதையின் முதுகில் கட்டினான். வழக்கம் போல ஆற்றைக் கடக்கையில் கழுதை தண்ணீரில் அமிழ்ந்தது.பஞ்சு மூடை தண்ணீரில் நனைய. மூடையின் சுமை ஏறியது.கழுதையும் கடக்க முடியாமல் ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது. தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டதை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது. நாமும் நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படிச் செய்தால் என்றோ ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும்.அன்று அவமானம் அடையும் நிலை வரும்.அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்.

# தவளை



ஆழமான குளத்திலே
அழகு மிக்க தவளையாம்!
அருகில் உள்ள மரத்திலே
அணிலு மொன்று
வாழ்ந்ததாம்!
நீரில் மட்டும் வாழ்ந்ததால்
நீரே உலகில் பெரிதென
நீரில் வாழ்ந்த தவளையும்
நினைத்துக் கொண்டு
வாழ்ந்ததாம்!
நிலத்தில் மட்டும் வாழ்ந்ததால்
நிலமே மிகவும் பெரிதென
அணிலும் நினைத்துக்
கொண்டுதான்
அங்கு மிங்கும் திரிந்ததாம்!
இருவர் எண்ணும் எண்ணமும்
தவறு என்று உணர்த்திட
குளத்தின் அருகே வேகமாய்
கொக்கு ஒன்று வந்ததாம்!
தவளை அணிலை
முதுகின்மேல்
தாவி ஏறச் சொல்லியே
அகிலம் முழுதும் சுற்றியே
அந்தக் கொக்கும் வந்ததாம்!
உலகில் நீரே அதிகமென்று
நினைத்திருந்த தவளையும்
நிலத்தின் மீது பறக்கையில்
நினைப்பை மாற்றிக்
கொண்டதாம்!
நிலமே அதிகம் என்றுதான்
நினைத்திருந்த அணிலுமே
கடலின் மீது பறக்கையில்
கருத்தை மாற்றிக்
கொண்டதாம்!
தனது எண்ணம் பெரிதென
எண்ணும் யாரும் உலகிலே
தவறு செய்யும் மக்களாம்!
தப்பு அந்த எண்ணமாம்!
தேர்ந்து தெளிந்து எதையுமே
தெரிந்து சொல்ல வேண்டுமே!
ஆய்ந்து அறிந்து கொள்ளலே
அறிவு என்று ஆகுமே!




## அறிந்ததும் அறியாததும்!

உலகின் மிக நீளமான நதி...எகிப்தில் உள்ள நைல் நதி என்பது உங்களுக்குத் தெரியும் தானே. ஆனால், அந்த நைல் நதிக்கு அடி பரப்பில் இன்னொரு நதி ஒன்று ஓடுகிறது. அதன் தண்ணீரின் அளவு, மேற்பகுதில் ஓடும் நைல் நதியின் தண்ணீரின் அளவை விட ஆறு மடங்கு அதிகம்.

★★★

ஒரு மணிநேரம் தொடர்ந்து நீங்கள் ஹெட்போனை தொடர்ந்து பயன்படுத்தி னால், அது உங்கள் காதுகளில் உள்ள கிருமிகளை 700 மடங்கு அதிகரிக்கும்.

★★★

உலகின் அதிக அளவு மனித உயிர்கள் பலியாகக் காரணமாக இருக்கும் ஒரேயொரு உயிரினம் நுளம்பு ஆகும்.

★★★

ஓர் ஆய்வின்படி, வலது கைப் பழக்க முடைய மனிதர்கள், இடது கைப் பழக்க முடைய மனிதர்களை விட, சுமார் ஒன் பது வருடங்கள் அதிகமாக வாழ்கி றார்கள்.

★★★

நமது மூளை, ஒரு சிறந்த கணிப் பொறியை விட நுட்பமானது. அதில், சுமார் 100 மில்லி யன் நரம்பு செல்கள் உள்ளன.

★★★

ஒரு மனிதன் சாவடையும்போது, முத லில் செயல் இழக்கும் உறுப்பு.. அவனது காதுகள்.

★★★

ஒரு மனிதனின் விழித்திரைகள் 45 சதவிதம் அதிகமாக விரிவடைவது, அவன் தனக்கு பிரிய மானவற்றைக் காணும்பொழுது ஆகும்.

# வெற்றியின் அனுபவங்கள்...

அறிவுரை வழங்க அறிவு தேவையில்லை. எவரும் எவருக்கும் அறிவுரை வழங்கலாம். காது கொடுத்து கேட்க ஆள்களிருந்தால், காசின்றி அறிவுரை வழங்கவும் ஏராளமான ஆள்கள் தயாராக இருக்கிறார்கள். அறிவுரை வழங்கத் தங்களுக்கு முழுத் தகுதியும் இருப்பதாகத் தான் பெரும்பாலானோரும் நம்புகின்றனர். அவர்களிடம் மாட்டிக் கொள்ளாமல் தப்பிக்கவே விவரமானவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆனால் மிகப்பெரிய சாதனைகள் செய்து காட்டியவர், மிக வெற்றிகரமாக வாழ்ந்து காட்டியவர், மற்றவர்கள் எட்டாத உயரங்களுக்கு சென்று காட்டியவர் அறிவுரை வழங்குவாரேயானால் அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் ஓராயிரம் கோடி பெறும்; வெற்றிக்கு வழி காட்டும்; எத்தனையோ அனுபவங்களுக்கு ஈடாகும். அது போன்ற அறிவுரைகளைக் கேட்டு கடைப்பிடிக்க எந்த ஒரு புத்திசாலியும் தவறி விடக் கூடாது.




மாற்றங்களும், இழப்புக்களும், நாம் நம்பிக்கையையும் ஆர்வத்தையும் இழக்காத வரை கசப்பாக இருந்தாலும் கூட மிகப்பெரிய நன்மையையே ஏற்படுத்தும். என்பது அவருடைய இரண்டாவது அனுபவ அறிவுரை. அதனால் எதை நேசிக்கிறீர்களோ அதை விட்டு விடவும் வேண்டாம், எதை நேசிக்கிறோம் என்று தெரியா விட்டால் அதைக் கண்டுபிடிக்கிற வரை ஓய்ந்து விட வும் வேண்டாம்.

வெற்றியை பணத்தால் மட்டும் அளக்க முடியாது. மனம் விரும்பிய ஒரு நல்ல வாழ்க்கையை வாழ முடிந்தால் அதுவே மிகப்பெரிய வெற்றி. அப்படி வாழ முடிந்தவன் பணத்தைச் சம்பாதிக்க முடியாது என்பது முட்டாள்தனம். மனம் விரும்பிய வாழ்க்கையுடன், பணத்தையும், வெற்றியையும் சேர்த்தே ஒருவன் பெற முடியும.



# கழிவு ஒயில் மாசு குறித்து ஆராய உயர் மட்டக் குழு

சேனநாயக்கா மற்றும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி கேமா, பிரதி அமைச்சர் விஜயகலா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

**விஜயகலா கவலை**

நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பிதழ் அனுப்பியபோதும், அவர் கலந்து கொள்ளாதமை குறித்து தனது உரையில் விஜயகலா கவலை தெரிவித்தார். எத்தகைய கோபங்கள் இருந்தாலும் அவற்றைப் புறமொதுக்கிவிட்டு நிகழ்வில் முதலமைச்சர் கலந்து கொண்டிருக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

பகல் 10.30 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் பிரதமர் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. வலிகாமம் வடக்குப் பகுதியில் மீள்குடியமர்வு, முன்னாள் போராளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை, குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை ஆகியன குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது.

**மீள்குடியமர்வு**

இராணுவத்தினரின் பேச்சைக் கேட்டு மீள்குடியமர்வு செய்வதென்றால் அது ஒரு போதும் நடக்கப் போவதில்லை என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு எடுத்துக்கூறினர். "இராணுவம் விவசாயம், ஹோல்ப் விளையாட்டு மைதானம், ஹோட்டல் நடத்துகின்றனர். இதுவா தேசியப் பாதுகாப்புத் தேவை? மக்களின் காணிகள் மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதை அரசியல் தீர்மானமா எடுங்கள்" என்று வலியுறுத்தினார்கள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

"ஏப்ரல் மாதத்திற்குள் ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்படும். மேலும் காணி விடுவிப்புத் தொடர்பில் இராணுவத்தினருடன் பேசுவோம்" என்று பிரதமர் பதிலளித்தார்.

**குடிதண்ணீர்ப் பிரச்சினை**

வலிகாமம் பிரதேச நிலத்தடி நீருடன் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பிலான பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்றும் பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டது.

"நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் இது தொடர்பில் ஆராய்வோம். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் இந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆகியோருடன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் அழைத்து இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுப்போம்" என்று பிரதமர் குறிப்பிட்டார்.

**இழுவைப் படகுக்கு முற்றுப்புள்ளி**

மீனவர் பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட்டது. இந்திய இழுவைப் படகுகளினால் தாம் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து மீனவர் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். "இந்திய – சிங்கள – சீன மீனவர்களின் ஆதிக்கத்திலேயே வடக்கு கடல் இருக்கின்றது. இதனால் வடக்கு மீனவர்கள் பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளைப் பறிமுதல் செய்ய வேண்டும்" என்றனர்.

கடல் வளத்தை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று ரணில் பதிலளித்தார். "இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது. இழுவை மடியைப் பயன்படுத்தி மீன்பிடி மேற்கொள்வதை அவர்கள் கைவிட்டால், எமது அடுத்த கட்டப் பேச்சு மற்றும் எமது கடல் பரப்பில் குறித்த காலம் மீன்பிடிக்க அனுமதிப்பது குறித்து ஆராயலாம்" என்றும் தெரிவித்தார்.





**இரகசிய தடுப்பு முகாம்**

இரகசிய தடுப்பு முகாம்கள் குறித்த விடயத்தை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் எடுத்துக் கொடுத்தார். தனக்குத் தெரிந்த வரையில் அப்படி முகாம்கள் இல்லை என்றும் அவரே கூறினார். ஆனாலும் இது தொடர்பில் மக்கள் மத்தியில் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இரகசிய தடுப்பு முகாம் என்று எதுவும் இல்லை என்று தான் விசாரித்து அறிந்துள்ளார் என்று ரணில் குறிப்பிட்டார். ஆனால் இரகசிய முகாம் பற்றிய ஆதாரம் தன்னிடம் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் கடத்தப்பட்ட 5 மாணவர்கள் திருகோணமலை கடற்படை முகாமில் வைத்துக் கொல்லப்பட்ட நீதிமன்ற வழக்கையும் சுட்டிகாட்டினார். இது தொடர்பில் உண்மையான விசாரணை நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை இங்கும் உருவாக்கும்போது அதற்கூடாக இந்த விடயத்தையும் விசாரணை செய்யலாம் என்று ரணில் தெரிவித்தார்.

**தமிழ் அரசியல் கைதிகள்**

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் என்று கூட்டமைப்பினர் வலியுறுத்தினர். "ஜே.வி.பியினரை கடந்த காலங்களில் இரண்டு தடவைகள் அவ்வாறு விடுதலை செய்திருக்கின்றனர். எனவே, தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்" என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. 6 மாத காலத்தினுள், எதுவித பிரச்சினையும் அற்றவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

**யாழ்ப்பாண பொருளாதார வலயம்**

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கில் பலர் வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா சுட்டிக்காட்டினார். இந்தப் பிரச்சினை சகல இடங்களிலும் இருக்கின்றது என்று குறிப்பிட்ட பிரதமர் ரணில், யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை ஆகிய இடங்களில் பொருளா தார வலயம் உருவாக்கப்படும் என்றார்.

**விசேட கவனம்**

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு அதிகள விலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த பிரதமர், ஏனைய மாகாணங்களை விட இந்தப் பிரதேசத்தில் அதிக கவனம் செலுத்தப் படும் என்று தெரிவித்தார்.

**முன்னாள் போராளிகள்**

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 2 ஆயிரத்து 389 பேர் இருக்கின்றனர். இவர்களில் 25 சதவீதத்தினர் பெண்கள். அவர்கள் தற்போது எதிர் கொள்கின்ற முக்கிய பிரச்சினையாக வாழ்வா தாரம் இருக்கின்றது. அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மேலும் அவர்களில் 20 சதவீதம் பேர் தொழில்வாய்ப்பு அற்று இருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்து பிரச்சினையைத் தீர்க்க குழு அமைக் குமாறு ரணில் பணிப்புரை விடுத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சர்கள் ஆகி யோரை அதில் உள்ளடக் குமாறும் அறிவுறுத்தினார்.

**சுற்றுப் பயணம்**

மாவட்டச் செயலகச் சந்திப்பின் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்றார். அங்கு நேற்றைய தினம் கல்வி இராஜாங்க அமைச்சரினால் தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் பங்கெடுத்தார். அதனைத் தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி கோயிலில் பூசை – அர்ச்சனை வழிபாடுகளில் ஈடுபட்டார். நல்லை ஆதீன குருமுதல்வரையும் சந்தித்தார். பின்பு, யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகத்தைச் சந்தித்து உரையாடினார். தென்னிந்தியத் திருச்சபையின் பேராயரையும் அதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தவர்களையும் பிரதமர் சந்தித்துப் உரையாடினார். (உ–5,4,109)

# பெண் தலைமைத்துவ

விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. அதன்போது பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையால், வடக்கு – கிழக்கு பெண்கள் தொடர்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரைக்கு அமைவாக வடக்கு மாகாணத்துக்குரிய குழு ஆரம்பிப்பது என்றும், அதன் பின்னர் மாவட்ட ரீதியிலான குழு ஆரம்பிப்பது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண அமைச்சரவை, மகளிர் விவகார அமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சு, பெண்கள் அமைப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வன்னியிலேயே பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே அமையவுள்ள பிராந்தியக் காரியாலயத்தை வன்னி மாவட்டத்தில் அமைக்குமாறு கோரிக்கை விடுத்தார். இதற்கு பிரதமர் ரணில் சம்மதம் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அங்குள்ள இராணுவத்தினரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகக் கூடிய சூழல் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். வாழ்வாதாரம் அற்ற நிலையில் வாழும் அந்தக் குடும்பங்களுக்கு, இராணுவத்தினர் உதவிகளைச் செய்கின்றனர். இதனூடாக அவர்கள் வேறு தேவைகளை அடைய முற்படுகின்றனர்.

போர் முடிந்துள்ள சூழலில் கிராமங்களில் இவ்வாறு அதிகளவிலான இராணுவத்தினர் தேவையில்லை. இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். அந்தப் பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கக் கூடிய விதத்தில், தொழிற்சாலைகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு, பிரதமர் ரணில் இணக்கம் தெரிவித்தார். (ற–5)

**வெல்டிங் வேலைக்கு ஆள்கள் தேவை**

கேட், கிரில் வேலையில் தேர்ச்சி பெற்ற வர்கள் அவசியம். மேலதிக விவரத்துக்கு தொடர்பு கொள்ளவும் T.P: 0771942865

**கணினி மலிவு விற்பனை**

HP Full Set Computer

24750/= மட்டுமே

FREE - NK PHONE (இலவசம்)

HP DELL ASUS 3rd 4th 5th Generation

சகல விதமான LapTop களும் மலிவு விலையில் உண்டு.

ST. ANTONY'S 187, KKS ROAD, JAFFNA TOWN 021 222 4865 0750698608

(16 ஆவது வருட சேவையில்)

**Facial, Bridal Makeup செய்பவர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு**

**மணப்பெண் அலங்காரப் போட்டி-2015**

Jaffnanews.lk Online Media நடத்தும் மணப்பெண் அலங்கார போட்டியில் பங்குபற்றி விஜய் TV சுப்பர் சிங்கர் பாடகர்களின் கைகளினால் உயரிய விருதுகளைவெல்ல இதோ பொன்னான வாய்ப்பு.

மேலதிக விவரங்களுக்கு www.Jaffnanews.lk இணையத் தளத்தை பாருங்கள்.

விண்ணப்பங்களுக்கும், தொடர்புகளுக்கும் இப்போதே அழையுங்கள்...

0765244710, 0765244711

முடிவுத்திகதி: 31.03.2015

**பகிரங்க அறிவித்தல்**

**திருநெல்வேலி இந்துமயான அபிவிருத்தி சபைக்கூட்டம்**

நல்லூர் பிரதேசசபையினால் 29.03.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கலாமன்ற சனசமூக நிலையத்தில் இந்துமயான அபிவிருத்திச் சபைக்கூட்டம் நடத்துவதற்கு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. மேற்படி அபிவிருத்திக் கூட்டத்துக்கு திருநெல்வேலி இந்துமயான நிர்வாகசபை அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து அபிவிருத்திக்கு உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

# நுண்கலை மாணவர்களின் கோரிக்கைக்கு தீர்வில்லை

திங்களும் போராட்டமென்று அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.பல்கலைக்கழக நுண்கலைக் கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்களின் கோரிக்கை தீர்க்கப்படாதமையால் அவர்கள் பதாகைகளுடன் நேற்றைய தினமும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலாம் அரையாண்டுக்கான செயல்முறைப் பரீட்சைகள், இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் என்பன ஆரம்பிக்கப் படவேண்டும். இல்லையேல் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான கல்வி திட்டமிடல், நான்காம் வருட மாணவர்களுக்கான ஆய்வு அறிக்கை உட்பட எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இவற்றில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் மாணவர்களால் அமைதியான முறையில் கடந்த சில நாள்களாகப் போராட்டத்தை முன்னெடுப்பதும் அதிகாரிகள் வாக்குறுதி அளிக்க போராட்டத்தைக் கைவிடுவதுமாக இருந்தது. அனால் மாணவர்களது கோரிக்கை நிறைவேற்றப் படாதமையால் நேற்றுமுன்தினமும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஒன்றுகூட்டி இன்று (நேற்று) தீர்வு காண்பதாக யாழ். பல்கலைக்கழக மாணவ ஆலோசகர்களினால் வாக்குறுதி அளிக்கப் பட்டதால் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். ஆனால் இன்றும் (நேற்று) இந்த பிரச்சினை குறித்து எந்த தீர்மானமும் எடுக்கப் படவில்லை. இதனால் தாம் போராட்டத்தில் ஈடுபடுவதாக மாணவர்கள் தெரிவித்தனர். எதிர்வரும் திங்கட்கிழமை கலைப்பீட அனைத்துத்துறை மாணவர்களும் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பேராசிரியர் புஸ்பரட்ணத்துடன் தொடர்பு கொண்டபோது, தவிர்க்க முடியாத காரணத்தால் கலைப் பீடாதிபதி நேற்றுச் சமுகமளிக்கமுடியவில்லை. இதனால் நேற்றைய கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமைக்குப் பிற்போடப் பட்டுள்ளது. அன்று முற்பகல் 10 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறும். அன்று தீர்வு எட்டப்படும் என்று தெரிவித்தார். (த–4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
01★04★1966

மறைவு
26★02★2015

அமரர்
**ஜீவரட்ணம் தங்கேஸ்வரி**

கடந்த 26.02.2015 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி அமரர் ஜீவரட்ணம் தங்கேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.03.2015) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நீங்கா நினைவுகள்

**திருநாவுக்கரசு இராஜேஸ்வரி**



தோற்றம்
09.03.1920

மறைவு
08.04.2014

திதி: நவமி

ஸ்ரீராம நவமியில் தெய்வமாகிவிட்ட எங்கள் அன்பு அன்னையே!!
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டாயினும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலா.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

8ஆம் கட்டை, மல்லாகம்.

## ஓய்வு பெற்ற அதிபருக்கு மணி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28
கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி இராஜேஸ்வரி திருஞானசிவத்துக்கு பிரதேச மக்கள் நடத்தும் மணி விழா நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு கைதடி மாவடிக் கந்தன் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் திருமதி இ.கணராஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வரவேற்புரையை ஆசிரியை திருமதி சோ. நாகராஜாவும் ஆசியுரையை சிவஸ்ரீ யோ.குருசாமிக் குருக்களும் நிகழ்த்துவர். மணிவிழா மலரை கிளி நொச்சி மாவட்ட ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் வெளியிட்டு வைப்பார்.

வெளியீட்டுரையை தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி க.சிறிதரன் நிகழ்த்துவார். (த–9)

## வட்டுக்கோட்டையில் குருதிக்கொடை முகாம்

வட்டுக்கோட்டை, மார்ச் 28
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வர ஆலய மற்றும் கண்ணகை அம்மன் ஆலயங்களில் வருடாந்த உற்சவங்களை முன்னிட்டு வருடா வருடம் இடம்பெறும் குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மூளாய் வீதி, வட்டுக்கோட்டை ஸ்ரீகணேச வாசிகசாலையில் இடம்பெறவுள்ளது.

இக்குருதிக்கொடை முகாமில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கி உதவுமாறு ஆலயபரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் கேட்டுள்ளனர்.

## 29 ஊழியர்களுக்கு நியமனம் சுகாதார அமைச்சு வழங்கியது



கிளிநொச்சி, மார்ச் 28
சிறுவர் நன்னடத்தை, சமூக சேவைகள் திணைக்களத்தில் அமைய அடிப்படையில் பணி யாற்றிய 29 ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு புதன் கிழமை வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத் தில் இடம்பெற்றது.

நீண்ட நாள்களாக சிறுவர் நன்னடத்தை, சமூகசேவைகள் திணைக்களத்தில் அமைய அடிப்படையில் ஒரு சிறிய வரு மானத்துடன் ஊழியர்களாக பணியாற்றிய குறித்த 29 ஊழி யர்களுக்குமான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம் வழங்கினார்.


கடந்த சில தினங்களில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கத்தில் மருத்துவமனைகளில் தற்காலிகமாகப் பணியாற்றிய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் 834 பேருக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங் கப்பட்டன.

இதனடிப்படையில் சிறுவர் நன்னடத்தை, சமூகசேவைகள் திணைக்களமும் தற்போது வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதன் காரணமாக இந்த திணைக்களத்தில் பணியாற்றிய 29 ஊழியர்களுக்கும் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம், சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் எஸ். விஸ்வரூபன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (வ–21)

## வன்செயல்களால் பாதித்தோரின் விண்ணப்பங்கள் சீராக்கும் பணி

தென்மராட்சியில் நேற்று நடைபெற்றது



தென்மராட்சி, மார்ச் 28
தென்மராட்சி பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக பாதிக்கப் பட்டவர்களின் விண் ணப்பங்கள் சீராக்கும் பணிகள் நேற்று கொழும்பு புனர்வாழ்வு அதிகார சபையின் உத்தி யோகத் தர்களால் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற் றது.

அந்தக்காலப்பகுதியில் ஆயி ரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் உடைய அரச உத்தி யோகத்தர்கள், ஓய்வூதியர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், வர்த்தகர்கள், வாகனங்கள் வைத்திருந்த ‘உ’ பங்கீட்டு அட்டை காரர்களும் வன்செயல்களால் உயிரிழந்த மற்றும் பாதிப்புக் குள்ளான குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். கோவைகள் சீராக்கல் பணியில் 774 சொத் தழிவு விண்ணப்பங்களும் 90 வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்களின் விண்ணப்பங்களும் புனர்வாழ்வு அதிகாரிகளால் சீராக் கப்பட்டன.

விண்ணப்பித்தவர்களில் சிலர் இறந்துபோனதால் அடுத்த வாரிசுகளின் விவரங்கள் பெறப்பட்டு கோவைகள் சீராக்கப்பட்டன. புனர்வாழ்வு அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் எஸ்.வதூர்தீன் தலைமையில் வருகை தந்த புனர் வாழ்வு அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கு தென் மராட்சி பிரதேச செயலக புனர் வாழ்வு பிரிவு உத்தியோகத்தர்களும் கிராம அலுவலர்களும் சீராக்கலுக்கு தேவையான உதவிகளை வழங்கினர்.

இதேவேளை பிரதேசத்தைச் சேர்ந்த 59 போருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் வழங்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. பணிகள் நேற்றுக்காலை 8 மணிக்கு ஆரம்பமான போது நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (வ–9)

# கோத்தபாய உட்பட மேலும் பலரின் வங்கிக் கணக்குகளை பரிசோதிக்குக

## காலி நீதிவான் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்துக்கு உத்தரவு

கொழும்பு, மார்ச் 28

பாதுகாப்பு அமைச்சின் முன் னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மேலதிக செயலாளர் டி.எம். எஸ்.ஜயரத்ன மற்றும் அவன்கார்ட் நிறுவனப் பணிப் பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்களினதும் வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்குமாறு காலி நீதிவான் நிலுபுலி லங்காபுர நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்துக்குச் சொந்தமான காலி துறை முகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள மிதக்கும் ஆயுதக் களஞ்சிய கப்பல் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் மேலதிக அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிதி தூய்மையாக்கல் சட்டத்தின் கீழ் குற்றச்செயல் இடம்பெற் றுள்ளதா என்று விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற நிலையில், குறிப் பிட்ட நபர்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பான அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான உத்தர வைப் பிறப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தது.

இதுதவிர, தற்போது நாட்டுக்கு வரு கைதந்துள்ள பாதுகாப்பு அமைச் சின் முன்னாள் மேலதிக செயலாளர் டி.எம்.எஸ். ஜயரத்ன மீண் டும் வெளிநாடு செல்வதற்கும் நீதி மன்றம் தடை விதித்துள்ளது.

இதேவேளை, கப்பலின் காப் புறுதிக் கான கால வரையற்ற இம்மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைவதாக, ஆயுதக் களஞ்சிய கப்பல் உரிமையாளர் நிறுவனத்தின் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி நீதி மன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கப்பல் மிகவும் பழைமை வாய்ந்தது என்பதுடன், எண்ணெய்க் கசிவு ஏற்படுமாயின் துறை முகம் மற்றும் அதனை அண்மித்த சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் பிரதி வாதிகள் தரப்பு சட்டத்தரணி நீதி மன்றத்தில் தெரிவித் துள்ளார்.

இதன் காரணமாக கப்பலிலுள்ள ஆயுதங்களுடனான 22 கொள் கலன்களையும் வேறொரு கப்பலில் ஏற்றுவதற்கும், சோர்வு அடைந்துள்ள கப்பல் பணியாளர்களுக்குப் பதில் வேறு பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கும் சட்டத்தரணி நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளார்.

இதற்கமைய அந்தப் பணியாளர்களுக்குப் பதிலாக வேறு பணியாளர்களைக் கப்பலில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கிய காலி நீதிவான், ஆயுதங்களை வேறொரு கப்பலில் ஏற்றுவதற்கான கோரிக்கையை நிராகரித்தார்.

(வ–சி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா பேதுருப்பிள்ளை



வைத்தீஸ்வரா வீதி, உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா பேதுருப்பிள்ளை 27.03.2015 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளையின் அன்பு மனைவியும், சண்முகநாதன், ஜேசுதாசன் (இத்தாலி), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் புஸ்பமலர் நாகேந்திரன், கெங்காதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், சரஸ்வதி, மகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் போதகர் யோவேல் உதயகுமார், சைலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.03.2015) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் மேற்கு.**
**தொடர்புக்கு: 0770225169**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## திருமதி வாசுகி பத்மநாதன்



யாழ். நவாலியைப் பிறப்பிடமாகவும், இங்கிலாந்து Hertfordshire, Bishops Stortford ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வாசுகி பத்மநாதன் 23-03-2015 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நகுலேசு-சீதாவதி தம்பதியரின் அன்பு மகளும், தெல்லிப்பளை பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைரமுத்து இரத்தினம்-செல்வநாயகி தம்பதியரின் மருமகளும், பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும், விஜயலஷ்மி, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகதாசன், பாரதி, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. தேவகுமாரன், திலானி ஆகியோரின் பாசமிகு மாமியும், இராமநாதன், லோகநாதன் ஆகியோரின் அன்பு அண்ணியும், Dr. சக்திதரன், அர்ச்சுனா, பிரகாஷ், செந்தில், சாந்தினி ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும், விஜயலட்சுமி, தனலட்சுமி(மல்லிகா) மங்கையர்க்கரசி, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், இராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணி, விஷாலா, தனஞ்ஜெய், பால்ராம், சந்தானலஷ்மி, ஆராதனா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**பத்மநாதன் பிரித்தானியா**
தொலைபேசி: +441279757074
**இராமநாதன் பிரித்தானியா**
தொலைபேசி: +441268766624
செல்லிடப்பேசி: +447956369557
**லோகநாதன் பிரித்தானியா**
செல்லிடப்பேசி: +447956377298

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கந்தையா கனகரத்தினம்



நுணாவில் கிழக்குச் சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், கொக்குவில் மேற்கு கொக்குவிலில் வசித்து வந்தவருமான கந்தையா கனகரத்தினம் 24.03.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கணேசு, செல்லம்மா ஆகியோரின் சகோதரனும், சதாசிவம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (கனடா) மற்றும் பஞ்சாட்சரம் (கனடா), தர்மகுலசிங்கம் (நோவா-கனடா), மகாராணி, சித்திராதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளமலர் (வாணி-கனடா), மனோகரி (கனடா), முருகதாசன் (ஓய்வுநிலை ஆசிரியர், யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்- தமிழ், தென்மராட்சி), நடேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், இந்துமதி-பரதன், கௌசல்யா-ராஜ்குமார், மதுமதி-சிவகுமார், பரணிதரன்-துஷ்யந்தினி, தரணிதரன் (கோபி)-காயத்திரி, நரேந்திரன்-துக்ஸிகா, மயூரன், அரவிந்தன், அனுஜன், அர்வின், அபர்ணா, மீரா-பிரதீபன், மயூரி-ஜனார்த்தனன், பார்த்தீபன், சித்திரப் பிரஷாத்-பிறேமிளா, அனித்தா-சுயந்தன், அஜந்தா-பிரதாப் ஆகியோரின் அன்புப் பேரனும், மாறன், சேரன், ஆர்த்தி, கவின், காவியா, சக்தி, ஜோதி, கதிர், செழியன், ஹரிஷ், விக்னேஸ், அபினேஸ், ஏரன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை முதலிகோவிலடி கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்குத் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**21/4A, முதலிகோவிலடி,**
**K.K.S. வீதி, (குளப்பிட்டி சந்தி அருகில்)**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி அம்பிகையம்மா தியாகராசா (கண்ணகி)

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகையம்மா தியாகராசா (கண்ணகி) நேற்று (27.03.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-அமிர்தம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தில்லைவனம் (நயினாதீவு 5ஆம் வட்டாரம்) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தியாகராஜாவின் அன்பு மனைவியும், சத்தியசீலன் (பிரான்ஸ்), ஜெகசீலன் (உரிமையாளர்-ஜெகன் பாமசி, கிறீன் கிறாஸ் ஹொட்டல் -யாழ்ப்பாணம்), குகசீலன் (பிரான்ஸ்), திருச்செல்வி (அஜந்தி-பிரான்ஸ்), சசிகலா (ராஜா கிறீம் ஹவுஸ்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**
**தொடர்புக்கு: 0212212343**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



## பொன்னம்பலம் விஜயரட்ணம்

திருநெல்வேலி, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாக வும் கொண்ட பொன்னம்பலம் விஜயரட்ணம் (ஆசாரியார்) 23.03.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புச் சகோதரனும், மகேஸ் வரியின் பாசமிகு கணவரும், கேதீஸ்வரி, ஜெயரட்ணம், கோணேஸ்வரி, யோகரட்ணம், சுகிர்தரட்ணம், சதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மணிவாசகம், கலைச்செல்வி, ஆனந்தன், லலிதா, ஜெயமலர், அஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், பார்த்தீபன், கார்த்திகா, பிரசன்னா, பிரியங்கா, பிரத்திகா, ஆரபி, பைரவி, நர்த்தனன், விதுர்ஷன், நிறோஜன, கிருத்திகன், கேசினி, கேசிகன், நிறஞ்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி, சுந்தரலிங்கம், இரத்தினம், பாலசுப்பிரமணியம் மற்றும் கனகமலர், வடிவேலு, துரைசிங்கம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, கமலாதேவி, விக்னேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே. 076 553 4708,**
**021 321 0090**

**மான்ஸ் பாடசாலை வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

(58143)(45.3.7)

# உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக அனைத்துலக விசாரணை விரைவில்

கொழும்பு, மார்ச் 28

உக்ரேனிலுள்ள பிரிவினை வாதப் போராளிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதர், உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக அனைத்துலக விசாரணைகள் நடத் தப்ப டவுள்ளது.

அவர் மீதான குற்றச்சாட்டுத் தொடர் பாக விசாரணை செய் வதற்கு, அனைத்துலக மட்டக் குழுவொன்று நியமிக்கப்ப டவுள்ளதாக பதில் வெளி விவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

தற்போது சீனா சென்றுள்ள வெளி விவகார அமைச்சர் மங்கள சமர வீர, நாடு திரும் பியதும். இந்த விசாரணைக் குழு நியமிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டு மிகவும் பார தூரமானது என்றும் அஜித் பெரேரா குறிப்பிட்டார்.

உக்ரேன் பிரிவினைவாத அமைப் புக்கு எவ்வாறு? எப்போது? யாருக்கு? எந்த வகையான ஆயு தங்களை உதயங்க வீரதுங்க பெற் றுக் கொடுத்தார் என்பது பற்றிய உள்ளிட்ட விரிவான விளக் கத்தை உக்ரேன் வெளிவிவகார அமைச்சு, இலங்கை வெளி விவகார அமைச் சுக்கு எழுத்து மூலம் அனுப்பி வைத் துள் ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் மருமக னான உதயங்க வீரதுங்க, இலங் கையின் வெளிநாட்டு இராஜதந்திர விதிமுறைகளுக்கு முரணாக, மஹிந்தவின் ஆட்சிக் காலம் முழுவதும், 9 ஆண்டுகளாகத் தூதுவர் பதவியை வகித்திருந்தார். புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், அவரை நாடு திரும்ப உத்தரவிட்ட போதும், அவர் நாடு திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ–சி)

## சு.கட்சி

சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவையும் மீறி சு.க. உறுப்பினர்களில் ஒரு தொகுதி யினர் மஹிந்தவை ஆத ரிக்க துணிந்துள்ளமையானது அக் கட்சி யின் எதிர்காலத்துக்குப் பெரிய சவாலாக அமையும். மஹிந்த தலைமையில் மூன்றாம் கூட்டணி யொன்று உருவாகலாம்.

தம்மை ஆதரித்து நடைபெறும் கூட்டங்களில் மஹிந்த பங்கேற்கா விட்டாலும், வாழ்த்துச் செய்தி யொன்றை அனுப்புவதை வழமை யாகக் கொண்டுள்ளார். பிரதமர் வேட்பாளராகக் களமிறங்க தான் தயார் என்ற தகவலையே இதனூ டாக அவர் வழங்குகிறார் என அர சியல் விமர்சகர்கள் தெரிவிக்கின் றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின் னர், கூட்டணி அரசில் அங்கம் வகித்த பொதுஜன ஐக்கிய முன் னணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஹெல உறுமயவின் மாற்றுத்தரப்பு ஆகியன பிரதமர் வேட்பாளராக மஹிந்த களமிறங்கவேண்டும் என வலியுறுத்தி அவருக்கு சார்பாக மக்கள் கூட்டங்களை நடத்திவரு கின்றன. இக்கூட்டங்களில் சுதந்தி ரக் கட்சி உறுப்பினர்களைப் பங் கேற்கவைப்பதில் மேற்படி கட்சிகள் குறியாக இருக்கின்றன. அந்தவகை யில் சு.கவின் முக்கியஸ்தர்களுக்கு தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கப் பட்டு வருகின்றது.

நுகேகொடையில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் சு.கவின் சில உறுப்பினர்கள் பங்கேற்றதைய டுத்து, அத்தகைய கூட்டங்களில் பங்கேற்பதைத் தவிர்க்குமாறு சு.க. முடிவெடுத்திருந்தது. இந்நிலை யில், இரண்டாவது கூட்டம் கண்டி யில் நடைபெற்றது. கட்சியின் தடையை மீறி இதிலும் சில உறுப் பினர்கள் பங்கேற்றனர். தற்போது இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் பெருந்தொகையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங் கேற்றுள்ளமை யாலேயே சு.கவின் உயர்பீடம் சீற்றமடைந்துள்ளது. இவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படக்கூடிய வாய்ப் பிருக்கிறது.

சீனாவுக்கு பயணம் மேற்கொண் டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும் இது விடயத்தில் காத்திரமானதொரு முடிவு எடுக்கப்படலாம் என அரசி யல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, சி.பி.ரத்நாயக்க, மஹிந்தா னந்த அளுத்கமகே, ரோகித அபேகுண வர்த்தன, பந்துல குணவர்த்தன, திலும் அமுனுகம, லோகான் ரத்வத்த, காமினி லொக்குகே, மனுச நாணயக்கார, உதித்த லொக் குபண்டார, விதுர விக்கிரமநாயக்க, கீதாஞ்சன குண வர்த்தன, வீரகு மார திஸ நாயக்க, செகான் சேம சிங்க, சாலிந்த திசநா யக்க, சிறி யானி விஜேவிக்கிரம, ரி.பி.எக்க நாயக்க மற்றும் விமல் வீரவன்ஸ, .வாசு தேவ நாணயக் கார, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட மாகாணசபை உறுப் பினர்கள் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட னர். (ற–சி)

## முன்னாள்

முன்னாள் போராளிகள் சிலரும் கிராமிய பெண்கள் அபிவிருத்தி மன்றங்களின் பிரதிநிதிகளும் கலந் துரையாடலுக்கு அழைக்கப்பட்டி ருந்தனர். மகளிர் விவகார அமைச் சர், பிரதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங் கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்படும் என்று அழைக்கப்பட்ட பிரதிநிதி களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கூட்டத்தில் இந்த விடயங்கள் எடுக் கப்பட்டு ஆராயப்பட்டபோது, தமது தரப்புக் கருத்துக்கள் எவையும் கேட் கப்படவில்லை என்று கலந்து கொண்டவர்கள் 'உதயன்' பத்திரி கையிடம் தெரிவித்தனர். ஆராய எடுக்கப்பட்ட விடயங்களை விட்டு விட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கள் வேறு விடயங்களைப் பேசிய தால் தமது பிரச்சினைகளைக் கூற வாய்ப்புக் கிட்டாமலேயே போய் விட்டது என்று அவர்கள் கவலை தெரிவித்தனர். "பெண் தலைமைத் துவக் குடும்பங்களின் பிரச்சினை குறித்தே இப்போது பேசுவோம் என்று பிரதமர் இரண்டு தடவைகள் குறிப்பிட்ட பின்னரும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் வேறு விட யங்களையே பேசிக் கொண்டிருந் தனர்" என்றும் அவர்கள் குறைப்பட் டனர்.

கடைசியில் பிரதமரும் நாடாளு மன்ற உறுப்பினர்களும் மட்டுமே இந்தப் பிரச்சினை குறித்து ஆராயும் கூட்டமாக அது நடந்து முடிந்து விட்டதாக பெண்கள் தெரிவித்தனர். "அவர்கள் இரு தரப்பினரும் பேசுவ தாக இருந்தால் நாடாளுமன்றத் திலேயே அதனைப் பேசி இருக்க லாமே! இங்கு ஏன் வந்து, எங்களை யும் அழைத்தார்கள்?" என அவர் கள் கேள்வி எழுப்பினர்.

பிரதியமைச்சர் விஜயகலா, "வடக்கு பெண்களின் பிரச்சினை பற்றி பிரத மருக்கு எல்லாம் தெரியும் என்கின் றார். எல்லாம் தெரியும் என்றால், எங்களை எதற்கு அழைத்தார்கள்? இவ்வளவு நேரம் காக்க வைத்தார் கள்?" என்றும் அவர்கள் குமுறி னார்கள்.

முன்னாள் போராளிகளின் பிரச்சி னைகள் ஆராயப்பட்டபோதும் இதுவே நடந்தது என்று அவர்கள் தெரிவித்தனர். மீனவர்களின் பிரச் சினை ஆராயப்பட்டபோது மட் டுமே அழைக்கப்பட்டிருந்த மீனவர் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு வழங்கப் பட்டது.

### வதங்கிய கர்ப்பிணித்தாய்மார்

இதேவேளை, வீரசிங்கம் மண்டபத் தில், கர்ப்பிணித் தாய்மாருக்கு போசணை உணவு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் 750 கர்ப்பிணித் தாய்மார் வரையில் கலந்து கொண்டனர். கடுமையான வெக்கை காரணமாக அவர்கள் வாடிவதங்கினர். உரிய முறையில் மின்விசிறிகள் செயற்படாமையி னால், அவர்கள் வெக்கையின் கடு மையான பாதிப்பை எதிர்கொண் டனர். (உ–5)

## இந்தியக்

இந்தியக் கடற்படையின் முதலா வது பயிற்சி வழங்கும் கப்பல் தொகுதி இலங்கைக்கு கிரமமான முறையில் வருகை தந்து பயிற்சி களை வழங்கி வருகின்றது. இது கடைசியாக 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இங்கு வருகை தந்து பெறுமதி வாய்ந்த பயிற்சிகளுக் கான வாய்ப்பை இலங்கைக் கடற்படைக்கு வழங்கியது.

இந்த முதலாவது பயிற்சிக் கப்பல் தொகுதி வைஸ் அட்மிரல் எஸ்.பி. எஸ் சீமாவை தளபதியாகக் கொண் டது. மேலும் இந்தியக் கடற்படை யின் கௌவரவத்துக்குரிய தென் பிராந்திய கப்பல் படையணியின் ஒரு பிரிவாகவும் இயங்கி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இந்தியக் கடற்ப டையினர் கடந்த நான்கு தசாப்த காலமாக 40 நாடுகளைச் சேர்ந்த சுமார் 11 ஆயிரம் பேருக்கு பயிற்சி களை வழங்கியமை குறிப்பிடத் தக்கது. (க)

## கடும்

பிரதமரது வாகனத் தொடரணி பயணம் செய்யும் போது, வீதிகளில் ஏனைய வாகனங்கள் பயணிப் பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட செயலகத்தில் பல் வேறு நிகழ்வுகளிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கெடுத் தார். அதனால் மாவட்டச் செயல கத்துக்குள் செல்லும் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் யாவரும் சோதனை செய்யப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர். இதனால் அவர்கள் பெரும் அசௌகரி யங்களை எதிர்நோக்கினர். முன் னைய அரசின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கெடுக்கும் நிகழ்வு களில் மாத்திரமே இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவது வழமை.

அத்துடன் கடந்த காலங்களில் முன் னைய அரசின் பிரதமர் வந்து செல் லும் போது இவ்வாறு கடுமையான சோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதில்லை.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவ ராக ரணில் விக்கிரமசிங்க இருந்த போது, யாழ்ப்பாணத்திற்கு பல தடவைகள் வந்து சென்றிருந்தார். இதன் போது இவ்வாறான சோத னைக் கெடுபிடிகள் எதுவும் இருக்க வில்லை. (ற–5)

## 6 ஆயிரம்

அதை மீள் பரிசீலனை செய்து அந்தப் பிரதேச மக்களிடமே காணியை ஒப்படைக்க வேண்டும் – இவ்வாறு கோரியுள்ளார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவ சக்தி ஆனந்தன்.

அரசின் 100 நாள் வேலைத்திட்டத் தின் கீழ் நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் பேருக்கு காணி உறுதிப்பத் திரங்கள் வழங்கும் நிகழ்வின் ஒரு கட்டமாக வவுனியா நகரசபை கலா சாரமண்டபத்தில் கடந்த செவ் வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்து 464 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட் டன.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடா ளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறியுள்ளார்.

"இந்தக் காணி அனுமதி பத்திரம் நீண்டகாலபோராட்டங்களுக்கு பின்னர் கிடைக்கிறது. இதனைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வரும் இதனைச் சரியாக பயன்படுத் திக் கொள்ள வேண்டும். கடந்த காலத்திலே வடக்கு, கிழக்கு பிரதே சத்தில் போர் நடைபெற்றது. அதன் பின்னர் மக்களினுடைய ஆயிரக் கணக்கான நிலங்களை இராணு வம் தன்வசப்படுத்தி வைத்திருக் கிறது. இதனால் பல ஆயிரக் கணக் கான குடும்பங்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, அதனை பெற்றுக் கொடுக்க வேண் டிய பொறுப்பு இந்த புதிய அரசுக்கு இருக்கிறது."– என்று அவர் குறிப் பிட்டார்.

"வவுனியா மாவட்டத்தில் செட்டி குளம் பிரதேசத்தில் அருவித் தோட் டத்தில் இருக்கின்ற கிட்டத்தட்ட 600 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங் கள் இராணுவத்தின் வசம் உள்ளது. அதுபோன்று ஏ–9 வீதியில் இறம் பைக்குளத்தில் 44 குடும்பங்க ளுக்கு சொந்தமானகாணியை இராணுவம் கையகப்படுத்தியுள் ளது. பேயாடி கூழாங்குளம், மூன்று முறிப்பு போன்றபகுதிகளில் பல குடும்பங்களுக்கு சொந்தமான காணிகள் பிடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலங்களை மீளவும் மக்களி டம் வழங்க வேண்டும்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் எமது தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண் டும் என்பதற்காகவும் தான் ஒரு ஆட்சி மாற்றத்தை எல்லோரும் இணைந்து ஏற்படுத்தியிருந்தோம். இந்த அரசு தோற்றம் பெறுவதற்கு தமிழ் மக்களுடைய பங்கு அளப் பரியது. இதனை இந்த அரசு புரிந்து கொண்டு மக்களின் பிரச்சினை களை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்"– என்றும் அவர் குறிப் பிட்டார்.

இந்த நிகழ்வில் காணி ஆணையா ளர் நாயகம், வடக்கு மாகாண காணி ஆணையாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமா காணசபைஉறுப்பினர்களானம.தியா கராசா, தர்மபால செனவிரட்ன, ஜெயதிலக,வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் இணைப்பாளர் முத்து முகமது, வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர, பிர தேச செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற–402)

## நிகழ்வுகள்

வழங்கப்படவில்லை. வடக்கு மாகாண சபையினர் நிகழ்வுகளை புறக்கணிப்பதாக அறிவித்த பின் னரே, ஒவ்வொரு உறுப்பினர்களுக் கும் தொலைபேசியூடாக நிகழ்வுக்கு வருமாறு மாவட்டச் செயலகத் தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

கர்ப்பிணிகளுக்குப் போசணை உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு மற்றும் மாவட்டச் செயலகத்தில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பி லான கலந்துரையாடல் ஆகிய இரு முக்கிய நிகழ்வுகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பங் கேற்றிருந்தார்.

இந்த நிகழ்வுகளுக்கு, வடக்கு முதல மைச்சருக்கு உரிய அழைப்பு விடுக் கப்படவில்லை. பிரதமர் வடக்குப் பயணத்தின் போது பல்வேறு தரப் பினரையும் சந்தித்தபோதும் வடக்கு மாகாண சபையினரைச் சந்திக்க வில்லை. அதனால் இலங்கைப் பிரதமர் ரணிலின் வடக்குப் பயணத் தைப் புறக்கணிப்பதாக வடக்கு மாகாண சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்த நிலையில் நேற்றுக்காலை, வீரசிங்க மண்டபத்துக்கு வந்த பிரத மர் ரணில், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களிடம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது என்று குறிப் பிட்டார்.

இருந்தபோதும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வீரசிங் கம் மண்டப நிகழ்வில் பங்கெடுக்க வருமாறோ, மாவட்டச் செயலக நிகழ்வில் பங்கெடுக்க வருமாறோ எந்த அழைப்பும் விடுக்கப்பட வில்லை. அதனை வடக்கு மாகா ணசபை உறுப்பினர்கள் 'உதய னுக்கு' உறுதிப்படுத்தினர். அத்துடன் மாவட்டச் செயலக அதிகாரிகளும், மாகாணசபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என் பதை 'உதயனுக்கு' உறுதிப்படுத் தினர்.

மாவட்டச் செயலக நிகழ்வு ஆரம் பித்த பின்னர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொரு வருக்கும் தொலைபேசியூடாக மாவட்டச் செயலக நிகழ்வுக்கு வரு மாறு அழைப்பு விடுக்கப்பட்டது. "அமைச்சிலிருந்து நேற்று பத்து மணியளவிலே மாகாணசபை உறுப் பினர்களுக்கு அழைப்பு விடுக்கு மாறு தெரிவிக்கப்பட்டது. அதற்க மையவே நாம் அவ்வாறு செயற் பட்டோம்"– என்று மாவட்டச் செய லக அதிகாரிகள் தெரிவித்தனர். (ற–5)

## கஞ்சா

குறித்த நபரை இரவோடிரவாக வவுனியா கொண்டு சென்ற பொலி ஸார் அவரை வவுனியா வைத் தியசாலையில் சேர்ப் பித்துள்ளனர். குறித்த நபர் வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், குறித்த நபரை சாவகச்சேரியில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுவதாகப் பொலிஸார் தெரி வித்தனர். (ற–9)

## இரவோடிரவாக

'கட்–அவுட்' மண்டபத்துக்கு அருகே நிறுவப்பட்டது. பின்னர் ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் அதிலிருந்த மஹிந்தவின் உருவப் படம் மறைக் கப்பட்டது. அந்த மறைப்பு கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் இனம் தெரியாதவர்களால் அகற் றப்பட்டது.

இந்தநிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வீரசிங்கம் மண்டபத்துக்கு வந்திருந்தார். அதற்கு முன்னதாக – நேற்று முன்தினம் இரவு மஹிந்தவின் 'கட்–அவுட்' முழுமையாக அகற்றப் பட்டது. அதேபோன்று யாழ்.மணிக் கூட்டுக் கோபுர சுற்றாடல் மற்றும் முற்றவெளி பிரதேசங்களில் இருந்த மஹிந்தவின் 'கட்–அவுட் களும்' அகற்றப்பட்டுள்ளன. (ற–17)

# கிராம அபிவிருத்திக்கு ரூ. 35 மில்லியன் நிதி

## வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

*ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களை தெரிவு செய்து, அவர்களுக்கு தேவையான துறைசார்ந்த பயிற்சிகள், சுயதொழில் கடன்களை வழங்கி அவர்களில் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.'*

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களங்களின் செயற்பாடுகளுக்கு 2015ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 35 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"வடமாகாணத்திலுள்ள ஒவ்வொரு கிராம அபிவிருத்தித் திணைக்களங்கள் ஊடாக வாழ்வாதாரத் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். 5 மாவட்டங்களிலும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம். மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள், தையல் இயந்திரங்கள், கைப்பணி உபகரணங்கள் வழங்கல், தையல் பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல் போன்றன இடம்பெறுகின்றன."– என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களை தெரிவு செய்து, அவர்களுக்கு தேவையான துறைசார்ந்த பயிற்சிகள், சுயதொழில் கடன்களை வழங்கி அவர்களில் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன."– என்று தெரிவித்துள்ளார். (ற)



*வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் 3 ஆம் நாள் திருவிழாவான நேற்றுமுன்தினம் மாலை அம்பாள் சர்ப்ப வாகனத்தில் எழுந்தருளி வெளிவீதி உலா வருகின்றார். (வ–40)*

## யாழ். வடகடல் நிறுவனத்தால் 120,000 கி.வலைகள் உற்பத்தி

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்திலுள்ள வடகடல் நிறுவனம் கடந்த வருடம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய வலைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளதாக அதன் முகாமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அவ்வாறு 20 வகையான வலைகள் ஒரு அங்குலம் தொடக்கம் 18 அங்குலம் வரையான அகலமுடையதாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

2 கிலோ கிராம் தொடக்கம் 28 கிலோ கிராம் வரையான நிறையுடையதாக அந்த வலைகள் உற்பத்தியாகின்றன.

இந்த வருடம் ஜனவரியில் 15 ஆயிரம் கிலோ கிராம் வலைகளும் பெப்ரவரியில் 7 ஆயிரம் கிலோ கிராம் வலைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

வர்த்தகர்களே அதிகளவில் வலைகளைக் கொள்வனவு செய்து மீனவர்களுக்கு விற்பனை செய்கிறார்கள். தனிநபர்களும் தேவையான வலைகளை அறிவித்துப் பெற்றுச் செல்கின்றனர். சிலர் நேரடியாகவே வடகடல் நிறுவனத்துக்குச் சென்று தேவையான வற்றை எடுத்துச் செல்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ–4)



## அட்டாளைசேனை பிரதேசத்தில் 45 பேருக்கு டெங்கு

அம்பாறை, மார்ச் 28

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த ஜனவரி மாதம் முதல் இம்மாதம் 25 ஆம் திகதி வரை 43 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி ஏ.எல்.அலாவுதீன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டெங்குக் காய்ச்சல் தொடர்பில் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரம் வழங்குதல், விழிப்புணர்வூட்டல் மற்றும் வீடுகளில் டெங்கு சோதனை மேற்கொள்ளுதல் நடவடிக்கையின் போதே அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி இவ்வாறு கூறினார்.

டெங்குக் காய்ச்சல் தொடர்பில் அனைவருக்கும் விழிப்புணர்வு இருந்தும் கூட அதனை அவர்கள் அலட்சியப்படுத்தி வருகின்றனர் என்றுஅவர்மேலும்குறிப்பிட்டார்.(வ)



*ஆஸ்திரேலிய தூதரக அபிவிருத்தி கவுன்சிலர் சார்லோட் புளூன்டேல் மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹசனலி ஆகியோர் நேற்று முன்தினம் அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். (வ)*

## உணவு ஒவ்வாமையால் 80 பேர் மருத்துவமனையில்

மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு மாவட்டத்தின் தாழங்குடா பிரதேசத்தில் உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 80 பேர் ஆரையம்பதி மாவட்ட மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டதாக மருத்துவ அதிகாரி மருத்துவர் நாகலிங்கம் சுசில் தெரிவித்தார்.

தாழங்குடாப் பிரதேசத்தில் திருமண வீடொன்றில் புதன்கிழமை நண்பகல் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டவர்களில் சிலர் உணவு ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டனர்.

காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வாந்தி போன்றவற்றால் அவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மண்முனை மற்றும் தாழங்குடா பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்கள், பெரியோர்கள்,குழந்தைகள் எனப் பலரும் அடங்குகின்றனர்.

அவர்கள் ஆபத்தான நிலையில் இல்லை எனவும் அவர் கூறினார்.(வ)

## கலாசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழாவும் நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு வட மாகாண முதலமைச்சர் க.வி.வி. சிக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் கௌரவ விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் சி.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.(வ)

## ஓசோன் மண்டலப் பாதிப்பு தொடர்பில் மன்னாரில் நடைபெற்ற விசேட நிகழ்வு

மன்னார், மார்ச் 28

ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பால் சூழலில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் அறிவுரை வழங்கும் விசேட நிகழ்ச்சித்திட்டம் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமேல் தலைமையில் இடம் பெற்றது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த நிகழ்ச்சித்திட்டத்தில் மன்னார் மாவட்ட வன அலுவலகர் எம்.ஏ.கே. ஜெயக்கொடி சுற்றாடல் அமைச்சின் புதுப்பித்தல் சக்தி பிரிவு இயக்குநர் ஜனக்க குணரத்ன, அரச, தனியார் நிறு வனங்களின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள்எனப்பலர்கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பால் சூழலில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பிலும் அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகள் குறித்தும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.(வ–56)



## மோ.சைக்கிள் மோதி அரச பணியாளர் காயம்

தென்மராட்சி,மார்ச் 28

பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பித்துவிட்டு அலுவலகம் சென்ற உத்தியோகத்தரை ஏ–9 வீதியில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதி தூக்கி வீசப்பட்டதில் உத்தியோகத்தர் காயம் அடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை பெரிய அரசடிச் சந்தியில் இடம் பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தென்மராட்சி கல்வி வலய உத்தியோகத்தரான மயில் வாகனம் துவாரகன் (வயது–36) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ–9)



இரவு நேரத்தில் பயணிக்கும்போது ஒளித் தெறிப்படையக் கூடியதான 'ஸ்டிக்கர்'களை சைக்கிள்களுக்கு ஒட்டும் பணியில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். தேசிய ரீதியாக விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த ஸ்டிக்கர் ஒட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை வவுனியா, குருமன்காடு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. வவுனியா போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் அதில் கலந்து கொண்டனர். (ற)

## ஆசிரிய உதவியாளருக்கு 5000 ரூபா கொடுப்பனவு

வடக்கிலுள்ள ஆசிரிய உதவியாளர்கள் அனைவருக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கான அறிவித்தல் கிடைக்கப் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆட்சிக்கு வந்தவுடன் அரச உத்தியோகத்தர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கூறியிருந்தார். பல துறையினருக்கும் முதற்கட்டமாக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் வடமாகாணத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களில் பல வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனை வழங்குமாறு கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்து வந்தது.

இந்நிலையில் அந்தக் கொடுப்பனவை ஆசிரிய உதவியாளர்களுக்கு வழங்குமாறு கடந்த வாரம் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்களுக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரிய உதவியாளர்களுக்கு ஏற்கனவே அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது என்று அ[illegible]கள் மேலும் தெரிவித்தனர்.

குறித்த ஆசிரிய உதவியாளர்கள் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் பணிக்கு அமர்த்தப்பட்டனர். அது போதாது அதனை அதிகரிக்குமாறு அவர்கள் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் கோரி வந்தனர்.

மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அவர்களுக்கு முன்னைய ஆளுநர் சந்திரசிறியினால் 4 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்தது. மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதும் அந்த 4 ஆயிரம் ரூபா கொடுப்பனவை முன்னாள் ஆளுநர் சந்திரசிறி நிறுத்திவிட்டார்.

ஆட்சிக்கு வந்த பின்[illegible] வடமாகாண சபை ஏற்பாட்டில் அந்த ஆசிரியர்களுக்கு 4 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு மீண்டும் 10 ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்டது. தேர்தல் பரப்புரையின்போது ஜனாதிபதி மைத்திரி 10 ஆயிரம் அதிகரிப்பதாக கூறியிருந்தார். அதன்படி தற்போது அவர்களுக்கு 18 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.(ற-4)

## மேலதிக கள் வைத்திருந்த மூவருக்கு அபராதம்



யாழ்ப்பாணம், மார்ச் 28

மேலதிகமாக கள் வைத்திருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கிளிநொச்சி மது வரித்திணைக்களத்தால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட மூவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து உத்தரவிட்டது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று.

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் அளவுக்கு மீறி மேலதிகமாக கள் வைத்திருந்தார்கள் என்று கூறி வெவ்வேறு சந்தேக நபர்கள் மூவரை கைது செய்த கிளிநொச்சி மது வரித்திணைக்களத்தினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. வஹாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது.

அதன்போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்பு கொண்டதால் ஒவ்வொருவருக்கும் தலா 10ஆயிரம் தண்டப்பணம் வழங்குமாறும் கட்டத்தவறின் 5 மாத கால சிறை தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ற-21)

# வருமான வரி திணைக்களம் ஆரம்பிப்பதில் இடர்பாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாணத்திற்கான வருமான வரி திணைக்களத்தை ஆரம்பிப்பதற்கான, நிதி நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில் இன்னமும், திணைக்களம் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு மாகாணசபையால் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதும், இன்னமும் அவை செயலுருப் பெறவில்லை.

வடக்கு மாகாணசபை செயற்பட ஆரம்பித்து ஒரு வருத்தின் பின்னர் – கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம், வடக்கு மாகாண நிதி நிய திச் சட்டம் சபையில் சமர்பிக்கப்பட்டது. அதனை சபை ஏகமனதாக நிறைவேற்றி, வடக்கு மாகாணத் தின் அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கடந்த செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி அதனை ஆளுநர் அங்கீகரித்திருந்தார்.

மேற்படி நியதிச் சட்டமானது கடந்த வருடம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், வருமான வரி திணைக்களம் இன்னமும் நியமிக்கப்படவில்லை. இந்தத் திணைக்களத்திற்குரிய ஆணையாளர் மற்றும் ஆளணிகளை வழங்குமாறு, கொழும்பு அரசின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு பலமுறை கோரிக்கைகள் விடுக்கப்பட்டும், இன்னமும் அதற்குரிய அனுமதிகள் வழங்கப்படவில்லை.

இதன்காரணமாகவே, வடக்குமாகாண வருமான வரித் திணைக்களத்தை ஆரம்பிப்பதில் இடர்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. வருமான வரித் திணைக்களம் ஆரம்பிக்கப்படாமையினால், மாகாணத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமல் போகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-5)



## இளவாலையில் பற்றைக்குள் 50 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

இளவாலை, சேந்தாங்குளம் பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 கிலோகிராம் கஞ்சாபொதிகள் நேற்றுமுன்தினம் இளவாலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொதிகளே கடற்படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கஞ்சா பொதிகள் கடல் மார்க்கமாகக் கடத்திவரப்பட்டு, இங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இரகசிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-101)

## 800 ஏக்கரில் சிறுபோக செய்கை



யாழ்ப்பாணம், மார்ச் 28

கிளிநொச்சி, புதுமுறிப்பு குளத்தின் கீழ் இந்த ஆண்டு 800 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுமுறிப்புக்குளம் புனரமைக்கப்பட்டு அணைக்கட்டு உயர்த்தப்பட்டதால் நீர் சேகரிக்கும் அளவு அதிகரித்துள்ளது. குளத்தில் தற்போது உள்ள நீரின் மூலம் 800 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும். 276 விவசாயிகள் இக்குளத்தால் பயனடைவார்கள் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## பொதுச்சேவை திணைக்கள தொழிலாளி பதவிக்கு நியமனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 28

வடக்கு மாகாண பொதுச்சேவையின் திணைக்களத் தொழிலாளி தரம் மூன்று பதவிக்கான நியமனங்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன.

இதன்போது தற்காலிக அமைய, பதில் கடமை, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2015 வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைவாக 61 பேருக்கு நிரந்தரப் பதவிகள் வழங்கப்பட்டன.

விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், உணவு வழங்கல், உணவு வழங்கலும் விநியோகமும், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்:-


"61 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுள் விவசாயத் திணைக்களத்திற்கு 51 பேரும் கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களத்திற்கு 9 பேரும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு ஒருவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். நிரந்தர நியமனம் வழங்க வேண்டியோர் தொகை அதிகமாக உள்ளது. குறிப்பாக கால்நடை சுகாதார உற்பத்தித் திணைக்களத்திற்கு 571 பேர் எங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி. ஆனால் தற்போது வழங்கப்பட்ட 9 பேருடன் சேர்த்து 315 பேருக்கு வழங்கியுள்ளோம். இன்னும் நிரப்பப்படாமல் 256 பேருக்கான வெற்றிடங்கள் உள்ளன.

இதேபோன்று விவசாயத் திணைக்களத்தில் எமக்கு அனுமதிக்கப்பட்ட ஆளனி 510. தற்போது வழங்கிய 51 பேருக்கான நியமனக் கடிதங்களோடு சேர்த்து 361 பேருக்கு வழங்கியிருக்கின்றோம். இன்னும் 149 பேருக்கு நியமனம் வழங்கப்படவேண்டி உள்ளது.

இதில் எமக்கு பிரதான குறைபாடாக இருப்பது விவசாய போதனாசிரியர்கள்.

எமக்கு போதனாசிரியர்கள் 143 பேர் தேவை. எம்மிடம் தற்போது 84 விவசாயப் போதனாசிரியர்கள் உள்ளனர். இன்னும் 59 பேரை நியமனம் செய்யவேண்டிய தேவை உள்ளது."- என்று தெரிவித்தார். (ற-10)

## சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தொழில்நுட்ப பிரிவுக்கு அனுமதி



கொழும்பு, மார்ச் 28

யாழ்ப்பாணம் சென்.ஜோன் கல்லூரிக்கு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழில்நுட்பவியல் பாடத்துறையை ஆரம்பிப்பதற்கான உத்தியோக பூர்வ அனுமதியை கல்வி இராஜாங்க அமைச்சரும் அமைச்சின் செயலாளருமான டக்ளஸ் நாணயக்கார ஆகியோர் இணைந்து நேற்று வழங்கினர்.

இந்த பாடத்திட்டத்துக்கான கட்டடத் [illegible] அதற்கான பொருள்களையும் பாடசாலை நிர்வாகம் தமது சொந்தப் பணத்தில் செலவு செய்து இந்த பாடத்திட்டத்தை இங்கு ஆரம்பிக்கவுள்ளது.

இந்த திட்டத்துக்காக 60 மில்லியன் ரூபா செலவு செய்யப்படவுள்ளதாக பாடசாலையின் அதிபர் வணக்கத்துக்குரிய ந.ஜோ.ஞானப் பொன்ராஜா தெரிவித்தார். 30 மில்லியன் ரூபா கட்டடத்துக்காகவும் மிகுதி 30 லட்சம் ரூபா உபகரணங்களுக்காகவும் செலவு செய்யப்படவுள்ளது.

இந்த பாடத்திட்டத்தில் பொறியியல் தொழில் நுட்பவியல் மற்றும் உயிர் முறையிலான தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் அதிபர் மேலும் தெரி வித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் அரச பாடசாலைகளில் இந்தப் பாடத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தநிகழ்வில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாவணர் சங்கத்தின் உப தலைவரும் வட மாகாண சபை உறுப்பினருமான ஆர்னொல்ட், பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-23)

## செட்டிகுளம் மகா வித்தியாலயத்தை பார்வையிட்டார் கல்வி அமைச்சர்

வவுனியா, மார்ச் 28

வவுனியா, செட்டிகுளம் மகா வித்தியாலயத்துக்கு வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா நேற்றுமுன்தினம் நேரில் சென்றார். 100 வருடங்களை கடந்த ஒல்லாந்தர் காலக் கட்டடமொன்றை புனரமைக்கும் நோக்குடன் அவர் அங்கு சென்றிருந்தார்.

வடமாகாண கல்வி அமைச்சருடன் பாடசாலை வேலைகள் பணிப்பாளர் தே.சுரேஸ்குமார், உத்தியோகத்தர்கள், அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது பாடசாலைக் கல்வி நிலை, பௌதிக வள அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இதேவேளை, புதிதாக அமைத்து வேலைகள் நிறைவடையும் நிலையில் இருக்கும் தொழில்நுட்ப ஆய்வுகூடம், தொழில்நுட்பபீடம் என்பவற்றையும் பார்வையிட்டதுடன், பாடசாலை சுற்றுப் புறங்களையும்அமைச்சர்பார்வையிட்டார்.(ற)

## மரக்கறி செய்கையை ஊக்குவிக்க திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சீரற்ற காலநிலைகளிலும் யாழ். மாவட்டத்தில் மரக்கறி உற்பத்திகளை அதிகரிப்பதற்கு விவசாயிகளிடையே புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்த உள்ளதாக வடமாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

"வறட்சிக் காலம், மாரி காலம் என பயிர்களுக்கு சாதகமற்ற கால நிலைகள் காணப்படுவதால், மரக்கறிச் செய்கை பாதிப்படைகின்றது. இதனால் குறிப்பிட்ட சில காலங்களில் மரக்கறி விலைகள் அதிகரித்துக் காணப்படும். மரக்கறி விலைகள் அதிகரிப்பதை ஓரளவு சீர்செய்து கொள்வதற்காக விவசாயிகளுக்கிடையே சில முறைகளை அறிமுகப் படுத்தவுள்ளோம்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"யாழ். மாவட்டத்திலுள்ள 148 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, வறட்சிக் காலங்களில் பயிர்களை பாதுகாப்பதற்கான உயிர்கரி பாவித்தல், மூடுபடை இடல், குழிகளில் உக்கிய எருவை இட்டு நாற்று நடுதல் போன்ற புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி விதைகளை 50 வீத மானிய அடிப்படையில் வழங்கவுள்ளோம். மார்ச், ஏப்ரல் காலங்களில் மண்ணின் வெப்ப நிலை அதிகரிப்பால் பயிர்கள் கூடிய போசணையை அதிகரிக்க முடியாமல் இருக்கும் நிலையை ஈடு செய்வதற்கு இலை ஊடாக பரவும் திரவ உரப்பசளையை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தவுள்ளோம்." – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் சீரற்ற கால நிலைகளில் மரக்கறி பயிர்ச் செய்கையை வெற்றிகரமாக மேற்கொண்டுசிறந்தவிளைச்சலைப் பெறலாம்."– என்று அவர் கூறினார்.(ற)

## நானாட்டான் பொது விளையாட்டு மைதான வீதி திறப்பு

மன்னார், மார்ச் 28

நானாட்டான் பிரதேச சபைக்குச் சொந்தமான 200 மீற்றர் நீளம் கொண்ட நானாட்டான்பொது விளையாட்டு மைதான வீதி புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக திறந்துவைக்கப் பட்டது.

கடந்த வருடம் வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் வழங்கிய நிதியின் கீழ் குறித்த வீதி புனரமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நானாட்டான் பங்குத்தந்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், நானாட்டான் பிரதேச சபை தலைவர் அன்புராஜ் லெம்பேட், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ற)

## சிறுநீர் கழிக்கவென தப்பியவரை பிணை எடுக்க எவருமில்லை

### பிணை அனுமதி கிடைத்தும் சிறைவாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சிறுநீர் கழிப்பதாகக்கூறி பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியோடியதாகக் கூறப்படும் திருட்டுச் சந்தேக நபர் சில மாதங்களின் பின்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். தற்போது அவரை நீதிமன்று பிணையில் விடுவித்த போதும் அவரைப் பிணை எடுக்க எவரும் முன்வராததனால் அவர் தொடர்ந்தும் மறியலில் உள்ளார்.

வட்டுக் கோட்டையில் சில மாதங்களுக்கு முன்னர் வீடு ஒன்றில் கூலி வேலை செய்வதற்காகச் சென்றிருந்த போது அங்கிருந்த பெறுமதி மிக்க 2 கைத்தொலைபேசிகளை வட்டுக் கோட்டை தெற்கைச் சேர்ந்த குறித்தத சந்தேக நபர் திருடியுள்ளார் என்று முறைப்பாடாகியது.

அதனடிப்படையில் குறித்த சந்தேக நபரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைக்கு அழைத்திருந்தனர். அங்கு சென்ற குறித்த சந்தேக நபர் சிறுநீர் கழிக்கவெனக் கூறி அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார் என்று கூறப்படுகிறது. அதனால் வட்டுக் கோட்டைப் பொலிஸார் அவரைத் தேடி வந்தனர்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர் யாழ்.பஸ் நிலையத்தை அண்மித்து இரவு 10 மணியளவில் சந்தேகமான முறையில் நடமாடியுள்ளார். யாழ். பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் அவரைக் கைது செய்தனர். விசாரணை மேற்கொண்ட போது அவர் வட்டுக்கோட்டையில் திருட்டுடன் தொடர்புடையவர் என்று தெரியவந்தது. அதனால் வட்டுக் கோட்டைப் பொலிஸார் குறித்த சந்தேக நபரை பொறுப்பேற்றிருந்தனர்.

அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. சில வாரங்களின் பின்னர் நீதிமன்று அவரைப் பிணையில் விடுவித்தது. ஆனால் அவரைப் பிணையெடுக்க எவரும் முன்வரவில்லை. அதனால் அவர் தொடர்ந்தும் மறியலில் உள்ளார். (ற-4)



புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேசத்தில் சொத்துக்களை இழந்தவர்களிடம் ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை தென்மராட்சி சிவன்கோயில் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. சொத்துக்களை இழந்தவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரையில் புனர்வாழ்வு அதிகார சபையால், சொத்துக்களை இழந்த சுமார் 5 ஆயிரத்து 500 பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இழப்பீடுகள் பெறுவதற்கு அதற்கான ஆவணங்கள் பலரிடம் இல்லை. அந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது. தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இந்த நடமாடும் சேவை யில், புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் என்.பத்மநாதன், பணிப்பாளர் வீரரட்ண ஜீவந்த ஆகியோர் கலந்துகொண்டனர். (ற)

## தமது நடைமுறைகளாலேயே பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

### மகளிர் தின நிகழ்வில் வைத்திய கலாநிதி பவானி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

தங்களது நடைமுறைகளினாலேயே பெண்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். ஆண்கள் அதற்கு முக்கிய காரணமில்லை. இங்கே இ[illegible]ம்பெற்ற பட்டிமன்றத்தில் பெண்[illegible] பாதிக்கப்படுவதற்குக் காரணம் [illegible]ண்களே என்று கூறப்பட்டதில் எனக்கு உடன்பாடில்லை. பெண்கள் பாதிக்கப்படுவதற்கு பெண்களே காரணமாகிறார்கள். பாதிக்கப்பட்டு மருத்துவ மனைக்குவந்த பல பெண்களில் நிலைகளைக் கேட்டபோது அதனை உணர முடிகின்றது. படங்கள், தொலைக்காட்சி நாடகங்களில் பார்ப்பதை வைத்துக்கொண்டு பெற்றோர்கள் மீது கோபப்படும் பிள்ளைகள் உண்டு. – இவ்வாறு வைத்திய கலாநிதி திருமதி பவானி தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் மகளிர் அமைப்புக்களின் மகளிர் தினவிழா நல்லூர் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிகழ்வின் முக்கிய விடயமாக பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுவது ஆண்களாலேயே என்று கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவிகள் அணியும் பெண்களாலேயே என யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியும் வாதிட்டன.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த உதவி பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் உரையாற்றுகையில், அரசியல் சமூக பொருளாதார அடைவுகளுக்கு மெருகூட்டும் வகையில் மாறுதல்கள் தென்பட்டாலும், இன்னமும் சில துன்புறுத்தல்கள் இருக்கத்தான் செய்கிறது. உன்னை அறிந்தால் நீ உலகத்தில் போராடலாம் என்கிறது ஒரு பாடல். இதைப் பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னாள் மாவட்ட நீதிவானும் சட்டத்தரணியுமான திருமதி இளங்கோ கருத்துத் தெரிவிக்கையில், இப்போது வயது முதிர்ந்தவர்களின் பாதுகாப்பில் பிள்ளையை விட்டுச் செல்வதை விட இளசுகளுடன் விடலாம் என்கிற அளவுக்கு நிலைமை உள்ளதாகவும், எந்தப்பிள்ளைகளும் வன்முறையால் பாதிக்கப் படக் கூடாது. பெற்றோரின் கண் காணிப்புத் தேவை என்கிறார்.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி கார்த்திகா ஆதித்தன் மனைவிக்குக் கணவன் அடித்தால் சட்ட நடவடிக்கைக்கு இடமுண்டு. அதேபோல் கணவனுக்கு மனைவி அடித்தாலும் கூட நடவடிக்கை எடுக்க முடியும். பெண்கள் விடயத்தில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்றார்.

பெண்கள் விவகார பிரதி அமைச்சர் விஜய கலாவின் இணைப்பாளர் சி.குலேந்திராசா பெண்களுக்கான பல்வேறு பயனுள்ள திட்டங்களை அமைச்சர் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், கணவனை இழந்த பெண்களை சுபகாரியங்களுக்கு அனுமதிக்காத எமது கலாசாரம் சிறிது வருத்தத்தைத் தருவதாகவும் பெண்களுக்கான சிறந்த நாடு இலங்கை எனவும் குறிப்பிட்டார்.

மகளிர் தினத்தையாட்டி இடம் பெற்ற போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. விருந்தினர்களுடன் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோரும் அவற்றை வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் பெருமளவு பெண்கள் கலந்து கொண்டதுடன் பெண்கள் அமைப்புக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும்விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. (ற-7)

# அனல் பறக்கும் இறுதியில் அன்ரனிஸ்- யங் கம்பன்ஸ்





யாழ்ப்பாணம்,மார்ச் 28
நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட தொடரின் அரையிறுதியாட்டங்களில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியும், கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்று இறுதியாட்டதிற்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஒரு அணியின் தடுப்பு அரணை தகர்த்து எதிர் அணியால் கோல்களைப் பதிவுசெய்ய முடியவில்லை. மைதானத்தின் நடுப் பகுதியிலேயே பந்து அங்கும் இங்குமாக அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. இந்தப் போராட்ட நிலைமை நீடிக்கவே ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. சமநிலை தகர்ப்பு உதையிலும் இரு அணிகளும் விட்டபாடில்லை. ஆட்டத்தின் முடிவு என்பது எட்டப்படாத ஒன்றாக நீடித்துக் கொண்டிருந்தது. இறுதியில் ஒருவாறு யங் கம்பன்ஸ் அணி 7:6 என்ற கோல் கணக்கில வெற்றிபெற்று இறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது. ஆட்டத்தின் இடைவேளை வரையில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதிக் கொண்டன, இருப்பினும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இருந்த போராட்டத் தன்மை சற்று பலவீனமாகவே இரண்டாவது அரையிறுதியில் இருந்தது. இதன் காரணமாக அவ்வப் பொழுது கோல்கள் மாறிமாறி பதியப்பட்டுக்கொண்டிருந்தன.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆரம்பமாகி இரண்டு நிமிடத்தில் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன்; கலிஸ்டன் தனக்கு கிடைந்த பந்தினை சரியான முறையில் கோல் போட்டு அன்ரனிஸ்ஸை பலப்படுத்த கலிஸ்ரன் வழியிலே அதே அன்ரனிஸ் வீரர் கயானனும் பயணிக்க ஆரம்பித்தார். ஆட்டத்தின் 13ஆவது ,20ஆவது நிமிடங்களில் மேலதிகமாக இரண்டு கோல்கள் அன்ரனிஸின் பெயரில் பதியப்பட அன்ரனிஸ் வலுவான ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. பின்னர் கலைமதி விளையாட்டுக்கழக அணி வீரன் சத்தியசீலன் ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த பந்தினை கோலாக மாற்றினர். முதல் கோலை அடித்து கோல் கணக்கை ஆரம்பித்து வைத்த கலிஸ்ரன் ஆட்டத்தின் கடைசிக்கோலையும். அடித்து ஆட்டத்தை அன்ரனிஸிற்கு சார்பாக முடித்துவைக்க ஆ[illegible]நர முடிவில் அன்ரனிஸ் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது.

இறுதியாட்டத்தில் யங் கம்பன்ஸ், மற்றும் அன்ரனிஸ் இன்று பலப் பரீட்சை செய்கின்றன.

இறுதியாட்டம் இன்று இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம் பெறவுள்ளது. இன்றைய நிகழ்விற்கு பிரதம விருத்தினராக வட மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (த–ரி–23)

## சுப்பறாங் சுப்பர் ஆட்டம்

வலி.வடக்கு மார்ச் 28
வட மாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவையினால் வட மாகாண உதைபந்தாட்ட லீக்குகளின் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்றில் புதுக்குடியிருப்பு சுப்பறாங் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.


இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பறாங் விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாக கருதப்பட்டமையால் ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே விறுவிறுப்பு ஒட்டிக் கொண்டது.

பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கோலாக பதிவு செய்ய தவறிய நிலையில், சுப்பறாங் விளையாட்டுக்கழகம் தனது வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்தி கோலாக மாற்ற சுப்பறாங் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. அடுத்து கோல் காப்பாளரின் எல்லைக்குள் பந்தைக் கையால் தட்டியதில் கிடைத்த தண்டனை உதையையும் தானாகவே வேண்டி தலையில் மண்ணைப்போட்டுக்கொண்டது பிறைற் ஸ்ரார். ஆட்டத்தின் முதல் பாதி முடிவில் சுப்பறாங் 2:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது.

எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாக ஆரம்பித்தது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. சுப்பறாங்கிற்கு கிடைத்த அதே அதிர்ஷ்டம் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் கிடைக்க தவறவில்லை. தண்டனை உதையின் உதவியுடன் பிறைற் ஸ்ரார் முதலாவது கோலைப் பதிவு செய்தது. மேலதிகமாக கோல்களை அடிப்பதில் இரண்டு அணியினரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டாலும் எதுவும் எடுபடாமல் போக ஆட்டத்தின் முடிவில் சுப்பறாங் அணி 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த–ரி–86)

## தேசிய விளையாட்டு விழா 2016 இல் யாழ்ப்பாணத்தில்

**பிரதமர் ரணில் நேற்று அறிவிப்பு**



யாழ்ப்பாணம், மார்ச் 28
2016ஆம் ஆண்டின் தேசிய விளையாட்டு விழா யாழ்.மாவட்டத்தில் நடக்கவிருப் பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத் தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட ரணில் விக்கிரம சிங்க தனது பயணத்தின் ஒரு கட்டமாக யாழ்ப் பாணம் மாவட்ட செயலகத்துக்கு சென்றிருந்த போது யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்தே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியத்தில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் 2016ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதனால் தேசிய விளையாட்டு விழாவுக்கு ஏற்ற முறையில் யாழ்ப்பாணத்தில் உள்ள மைதானங்கள் மறுசீர மைப் புச் செய்யப்படும்–என்றார். (த–ரி)

## கடைசி நேரப் போராட்டத்தால் வென்றது மன்னார் சென்.ஜோசப்

யாழ்ப்பாணம்,மார்ச் 28
மன்னார் பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதி யாட்டத்தில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. பலத்த போராட்டத்தின் பின்னர் பள் ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணியினர் தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 2 கோல்களை அடுத்தடுத்து அடித்தனர். பதிலுக்கு பள்ளிமுனை சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோல்களைப் பெற்றிட வேண்டும் என எதிர் அணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்தனர். ஆனால் கோல்கள் எதனையும் பெற்ற முடியவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப் பட்ட போது பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் பழி தீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கினர் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி யினர். தமது அணிக்கான கோலைப் பெற்றிட வேண்டும் என்று எதிர் அணியின் கோல் பரப்பை முற்று கையிட்டனர். இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. திட்டமிட்டபடியே சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியினர் தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தமது அணிக்காக 2 கோல்களை அடித்தனர். ஆட்ட நேரமுடிவில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களை அடித்ததினால் ஆட்டம் சமநிலை யில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண் பதற்காக சமநிலை தகர்ப்பு உதை கள் வழங்கப்பட்டன. இதில் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த–ரி–23)

GRADE - 10
2015 NEW SYLLABUS
PHYSICS
QUESTIONS & MARK SCHEMES
புத்தக சாலைகளில் பெற்றுக் கொள்ளலாம் அனைத்து விஞ்ஞான ஆசிரியர்களுக்கும்
English Medium Grade - G.C.E O/L
மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ள வெளியீடு
ஆக்கம்:- J.J. MICHAEL
தொடர்பு:- 077 9554276
COMING SOON : BIOLOGY, CHEMISTRY Q&MS

FLC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கூறுகிறார்கள்..
விரிவுரையாளர் MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டு வரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 906 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 04.04 சனி 10am No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.04 சனி 4pm. No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
குமாரசாமி ஜெகதீஸ்வரன்
கடந்த 23.02.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் **அமரர் குமாரசாமி ஜெகதீஸ்வரன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்த னையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ் விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.
இராச வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.